கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை
மாதிரி வினாத்தாள் - 03

அரசியல் விஞ்ஞானம் I	புதிய பாடத்திட்டம்
23 T I	இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள் :

- ✧ இவ்வினாத்தாள் **A, B** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ✧ பகுதி **A 30** பல்தேர்வு வினாக்களையும் பகுதி **B 20** குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
- ✧ சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதவேண்டும்.
- ✧ ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி A

✧ **1 - 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.**

01. அரசியல் என்பது

A - மனித வாழ்க்கையுடன் நீக்கமுடியாதவாறு இணைந்து காணப்படும் சமூகப் பாராட்டைப் பெறும்.
B - அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பொருளைத் தோற்றுவிக்கும் மூலமாகும்.
C - அதிகாரத்தை பெறவும் அதிகாரத்தைப் பயிற்சி செய்யவும் வாய்ப்பு உண்டு.
D - அனைவரும் ஏற்றுக்கொண்ட படி சமூகப் பொது நன்மைக்காக ஒன்றிணைந்து காணப்படும் செயற்பாடுகள் உண்டு.
E - மக்களை ஏமாற்றும் மற்றும் வஞ்சிக்கும் உபாயங்களை பயன்படுத்தும் எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

02. ''அரசறிவியலைக் கற்றல்'' என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது,

A - அரசியல் அதிகாரத்தைக் கையாள்வதற்காக அரசியல் விளையாட்டில் ஈடுபட பயிற்சியளித்தல்.
B - புதிய கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை கட்டியெழுப்புதல்.
C - அரசறிவியல் ரீதியான கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை கட்டியெழுப்புதல்.
D - நடைமுறை அரசியல் கொள்கைகளை விமர்சனத்திற்குட்படுத்தி புதிய மற்றும் பிரேரணைகளை முன்வைத்தல்.
E - அரசியல் மற்றும் அதனோடு தொடர்புடைய துறைகள் பற்றிக் கற்றல், ஆய்வு செய்தல் மற்றும் விபரித்தல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

03. அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் இடையிலான வேறுபாடுகளாவன,

A - நடைமுறை அரசியல் மற்றும் கோட்பாட்டு அரசியல் என்ற அடிப்படையிலான வேறுபாடுகள்.
B - பிரயோக அரசியல் மற்றும் நடைமுறை அரசியல் என்ற அடிப்படையிலான வேறுபாடுகள்.
C - அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் அறிஞர்கள் என்ற அடிப்படையிலான வேறுபாடுகள்.
D - அதிகாரப் பிரயோகம் மற்றும் அதிகாரப் பிரயோகம் பற்றிய கற்கை அடிப்படையிலான வேறுபாடுகள்.
E - முரண்பாட்டில் ஈடுபடல் மற்றும் முரண்பாட்டுக்கான தீர்வு என்ற அடிப்படையிலான வேறுபாடுகள்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

04. ஒப்பீட்டு அணுகுமுறையின் படி,

A - பிளேட்டோ மற்றும் அரிஸ்ரோட்டிலினால் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தற்காலத்தில் அனைத்து அரசியல் ஆய்வாளர்களும் இம்முறையை அவ்வாறே பயன்படுத்துவர்.

B - நவீன ஒப்பீட்டு அணுகுமுறை தற்கால அறிவை விருத்தி செய்வதற்கான முன்னுரிமையை வழங்கும்.

C - முதன்மையறிவை வழங்குதல் மூலகங்களாக கருதப்படும்.

D - சமமான அரசியல் கட்டமைப்பு சம அரசியல் விளைவு ஏற்படுத்துகின்றதா என்பதை கவனித்தறியலாம்.

E - ஒப்பீட்டு அணுகுமுறையில் புள்ளி விபரத்தரவுகள் பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்படும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

05. நடத்தை வாத அணுகுமுறையானது,

A - சமூக விஞ்ஞான அணுகுமுறையில் விஞ்ஞான ரீதியான திருப்பு முனையை ஏற்படுத்தியது.

B - தர்க்க அறிவு மற்றும் யதார்த்த அம்சங்கள் என்பன அரசியலை கற்பதற்கான பிரதான கருவிகளாக கருதப்படும்.

C - கருதுகோள்களை ஏற்படுத்துதல், நியதிகள் ஊடாக அவற்றைப் பரீட்சித்தல் என்பன இடம்பெறும்.

D - நடத்தை தர்மத்தை மதித்தலை அரசியலிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தியது.

E - அரசியல் விளக்கத்தில் மானிடப் பெறுமதிகளை விலக்கி இயந்திரத்துறையாக மாற்றப்பட்டுள்ளதென விமர்சனங்கள் வந்தன.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

06. அரசியல் கட்சிகள்

A - நவீன ஜனநாயக அரசியலில் தவிர்க்க முடியாத நிபந்தனையாகும்.

B - இன்றைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பலமான அரசியல் நிறுவனமாகும்.

C - அங்கத்துவ அட்டைகளை கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகும்.

D - பிரதிநிதித்துவ அரசியல் முறையும் வாக்குரிமையின் பரவலாக்கமும் அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு உதவின.

E - அரசியலில் மிக நீண்ட கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு வளர்ந்துவருவதாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

07. அமுக்கக் குழுக்கள்

A - நவீன அரசியலில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஒழுங்கமைந்துள்ளன.

B - அரசியல் கட்சிகளைப் போல் அரசியலில் ஈடுபட்டு அரசியல் அதிகாரத்தை பெறுபவை

C - நவீன ஜனநாயகத்தில் நல்லாட்சியைக் கொண்டு நடாத்த அவசியமானவை.

D - அரசியல் கட்சிகளின் குறைநிரப்பியாக செயற்படுவன.

E - அரசாங்கத்துக்குள் செல்லாமல் வெளியே நின்று அழுத்தம் கொடுக்கும் உபாயம் உடையன.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

08. சிவில் சமூகமானது,

A - அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சமூக வாழ்வின் ஒரு பகுதியை விபரிக்கின்றது.

B - சமூகத்திலுள்ள தன்னார்வச் சங்கங்களையும் சுயாதீனக் குழுக்களையும் கொண்டு ஒழுங்கமைந்தவை.

C - அரசாங்கம், குடும்பம், சந்தை என்பவற்றுக்கு வெளியே ஒழுங்கமைந்தவை.

D - எல்லையற்ற பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணமற்ற சமூகமாகும்.

E - அதிகார பிரயோகமற்ற கூட்டு நல நோக்குடைய ஒழுங்கமைப்பாகும்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

09. அரசு என்பது,

A - வரலாற்று மற்றும் சமூகத் தோற்றப்பாடுகளில் ஒன்றாகும்.
B - பிரசை என்ற அந்தஸ்தை பெற இதன் அங்கத்துவம் வலுக்கட்டாயமானது.
C - ஆள்புலத்தின் வாழும் பிரசைகளின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தங்களை பிரயோகிக்கும்.
D - ஆள்புலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை என்ற அடிப்படைகளைக் கொண்டு ஒழுங்கமைந்துள்ளது.
E - மேற்படி அடிப்படைகள் அரசுக்காக வேறுபடுவதால் சகல அரசுகளும் சட்டப்படி ஒத்தவையன்று.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

10. ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாதிரியின் பிரதான பண்புகளாவன,

A - ஆள்புல ரீதியாக ஒன்று குவிந்துள்ள சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சிறந்தது.
B - தனியொரு அதிகார மையத்தைக் கொண்ட அரசாங்க முறைக்கு இடமளித்தல்.
C - அதிகம் செயற்றிறன் மிக்கதாயினும் ஒப்பீட்டளவில் ஜனநாயகத்தன்மை குறைந்தது என பொதுவாக ஏற்றுக்கொள்ளல்
D - மத்தியரசால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட உள்ளூராட்சி முறையின் இருப்பு.
E - தனி நிர்வாக, நீதி முறைமைகளோடு கூடிய ஒற்றைக் குடியுரிமை நிலவுதல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

11. சமஷ்டியாட்சி அரசியலமைப்பு மாதிரியின் பிரதான பண்புகளாவன,

A - மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்ட அல்லது அரசியலமைப்பு ரீதியாக ஒன்றுக்கொன்று கீழ்ப்படாத சம பங்காளிகளாக இருத்தல்.
B - அரச அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் உயர்தன்மை கொண்ட வினைத்திறன் காணப்படுதல்.
C - சமூகப் பல்வகைத் தனிமையைப் பாதுகாத்து ஒற்றுமையை அடைய வாய்ப்பாக இருத்தல்.
D - மத்திக்கும் மாநிலத்திற்குமிடையில் இறைமை அதிகாரம் பங்கிடப்பட்டிருத்தல்.
E - மத்திக்கும் மாநிலத்திற்குமிடையிலான அதிகாரப் பங்கீடு அரசியலமைப்பினூடாக இடம்பெறுதல்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

12. மந்திரி சபை அரசாங்க முறையின் பண்புகளாவன,

A - நாம நிறைவேற்றாளர் மற்றும் உண்மை நிறைவேற்றாளர் என்ற இரட்டை நிர்வாகத்தின் இருப்பு.
B - நிறைவேற்று மற்றும் சட்டத்துறை அதிகாரங்களும் பணிகளும் தெளிவாகப் பிரிபடாதிருத்தல்.
C - நாம நிறைவேற்றாளர் ஒரு குறிப்பிட்ட பதவிக்காலத்துக்காக மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படல்.
D - ஜனாதிபதி அரசாங்க முறையோடு ஒப்பிடுகையில் அதிக ஜனநாயகத் தன்மையும் குறைந்த செயற்றிறனையும் கொண்டிருத்தல்.
E - கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்ற இரு மூலக்கொள்கைகளின் கீழ் செயற்படல்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

13. ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகளாவன,

A - அதிகாரப் பிரிவினை என்ற மூலக் கொள்கையின் அடிப்படையில் ஒழுங்கமைந்தது.
B - அவசரகால நிலமைகளுக்கு அதிகம் பொருந்தும் தன்மை கொண்டது.
C - அதிகம் செயற்றிறன் மிக்கதாயினும் ஜனநாயகத் தன்மை குறைந்ததாகும்.
D - நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு நிலவுதல்.
E - நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்புக்கூறாமை.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE ( )

14. ஐக்கிய அமெரிக்க அரசாங்க முறையானது,
  A - இதன் யாப்பு பிடெல்பியா மகாநாட்டில் ஜோர்ஜ் வாஷிங்டன் தலைமையில் 1787 இல் உருவாக்கப்பட்டு அதனடிப்படையாக கொண்டுள்ளது.
  B - அரசாங்கத்தின் முத்துறைகளிடையே வலுவேறாக்க கோட்பாடு சிறப்பாக பின்பற்றப்படுகின்றது.
  C - 1791 இல் யாப்பில் திருத்தம் செய்யப்பட்டு அடிப்படை உரிமை சேர்க்கப்பட்டது.
  D - சம பலமான மாநில அரசுகளைக் கொண்ட சமஷ்டி அரசாகும்.
  E - நவீன சமஷ்டிவாதக் கொள்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

  (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

15. சேர்தல் என்பது,
  A - அரசியல் முறைமைக்குச் சட்ட முறைமையை வழங்கும் ஓர் மூலாதாரமாகும்.
  B - பிரதிநிதித்துவ தாபனங்களை அமைக்கும் ஓர் உபாயம்.
  C - மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறையாகும்.
  D - கட்சிச் செயற்பாடுகளில் மக்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை கொடுக்கிறது.
  E - வாக்காளர் ஒருவருக்கொருவர் பகையளிக்கும் ஊடகம்.

  (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

16. முரண்பாடு என்பது,
  A - ஒற்றுக்கொன்று பொருத்தமற்ற நோக்கங்கள் கொண்ட இரு தரப்பினருக்கிடையே காணப்படும் தொடர்பு.
  B - போட்டி மற்றும் எதிர்ப்புகள் முரண்பாடாக மாறலாம்.
  C - முரண்பாடுகள் அரசினுள் காணப்படுவதைப்போல அரசுகளுக்கிடையேயும் தோன்றலாம்.
  D - மத்தியஸ்தம் செய்ய இல்லாத நோக்கங்கள் கொண்ட தரப்பினர் காணப்படல் முரண்பாடுகளில் பெரும்பாலும் காணப்படும் அம்சமாகும்.
  E - முரண்பாடுகளை சாதாரணமானவை, தீவிரமானவை மற்றும் அரசியல் சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

  (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

17. அரசியல் உள்வாரியான முரண்பாடுகள் தோன்றக் காரணம்,
  A - அமைப்புக் காரணிகள்
  B - பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள்
  C - அரசியல் காரணிகள்
  D - கலாசாரக் காரணிகள்
  E - பூகோள மய வர்த்தகம் தொடர்பான காரணிகள்

  (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

18. பிரான்சிய அரசாங்க முறையானது,
  A - கலப்பு ஜனாதிபதி அரசாங்க முறையாகும்.
  B - ஐந்தாம் குடியரசு மூலம் தாபிக்கப்பட்ட முறையாகும்.
  C - பலமான நிறைவேற்றுத்துறை, பலவீனமான சட்டத்துறை என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
  D - பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாவிட்டாலும் வெளிநபர்கள் அமைச்சராக முடியாது.
  E - பிரான்சை பலம்மிக்க தேசமாக்கி வெற்றிகரமான அரசாங்க முறை டிகோலினால் தாபிக்கப்பட்டது.

  (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

19. சுவிட்சர்லாந்து சமஷ்டி அரசாங்க முறையிலுள்ள சமஷ்டி மன்றமானது,
  A - கூட்டு நிறைவேற்றுக்குழுவை நியமிக்கும் பொறுப்புடையது.
  B - சம அதிகாரங்களைக் கொண்ட இரு மன்ற முறையாகும்.
  C - உயர் சட்டவாக்க அமைப்பாகும்.
  D - சமஷ்டிப் பேரவை எனவும் அழைக்கப்படுகின்றது.
  E - இரு மன்றுகளும் ஒன்றாக கூடுமானால் ஐக்கிய சமஷ்டி மன்றம் என அழைக்கப்படும்.

  (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

20. பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் போது சமூக விளைவுகளாவன,
A - தேசிய முதலாளித்துவ வர்க்கம் பலவீனமடைந்தமை.
B - உயர் குழாம் வகுப்பின் அதிகாரம் தளர்வடைந்தமை.
C - சாதி முறை பலவீனமடைந்தமை.
D - ஆங்கில மொழிச் செல்வாக்கினால் ஏற்பட்ட சமூக அந்தஸ்து.
E - கிராம, நகர இடைவெளி பரவலடைந்தமை.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE ( )

✧ **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.**

21. 1978 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட உயர் நீதிமன்றம் என்பது
1. குடியரசிலுள்ள மேலானதும் இறுதியானதுமான மேனிலைப் பதிவேட்டு நீதிமன்றமாகும்.
2. பிரதம நீதியரசரையும் ஆறுக்குக் குறையாததும் பத்துக்கு மேற்படாததுமான ஏனைய நீதியரசர்களையும் உள்ளடக்கியுள்ளது.
3. அரசியல் யாப்புக்குப் பொருள் கூறும் தனியானதும் பிரத்தியேகமானதுமான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
4. அடிப்படை உரிமை மீறல்களை விசாரணை செய்யும் தனியானதும் பிரத்தியேகமானதுமான அதிகார்தைக் கொண்டுள்ளது.
5. அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் மீதான நீதி அதிகாரங்களின் நடைமுறை பற்றிப் பாராளுமன்றுக்குப் பொறுப்புக்கூறவேண்டும்.

22. 2015 இன் 19 ஆம் திருத்தத்தின் கீழ் 1978 யாப்பில் மேற்கொள்ளப்பட்ட சில அடிப்படை மாற்றங்கள்
1. அரசியலமைப்புப் பேரவை மீளத் தாபிக்கப்பட்டமை.
2. ஜனாதிபதிப் பதவியை வகித்தல் மீதான இரு தவணைகள் என்ற நிபந்தனை மீளச் சேர்க்கப்பட்டமை.
3. ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறிலிருந்து ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டமை.
4. பாராளுமன்றின் பதவிக்காலம் ஆறிலிருந்து ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டமை.
5. மசோதாக்கள் மீது உயர் நீதிமன்றுக்கிருந்த நீதி முன் புனராய்வு அதிகாரம் அகற்றப்பட்டமை.

23. 1931 டொனமூர் அரசாங்க முறையின் முனைப்பான பண்புகள்
1. சட்டவாக்கப் பணிகளை மேற்கொள்வதற்கு 61 உறுப்பினர்களைக் கொண்டமைக்கப்பட்ட அரசாங்க சபை
2. நிறைவேற்றுப் பணிகளை கூட்டாக மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்டிருந்த அமைச்சரவை மற்றும் நிறைவேற்றுக் குழுக்கள்
3. அரசியல் நெருக்கடிகளிலிருந்து சேய்மைப்படுத்தப்பட்ட தேசாதிபதி
4. சுதந்திரமான பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கீழமைந்த சிவில் சேவை
5. மக்கள் இறைமையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி

24. 1947 சோல்பரி அரசியல் யாப்பு
1. இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தை வழங்கியது.
2. மந்திரி சபை அரசாங்க மாதிரியை அறிமுகம் செய்தது.
3. இலங்கை அரசாங்கத்துக்கு வெளிவிவகாரங்களை மேற்கொள்வதற்குப் பூரண, சுதந்திரமான அதிகாரத்தையும் ஆணையதிகாரத்தையும் வழங்கியது.
4. அரசாங்கத்தின் மீதான பிரித்தானிய முடியின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்தும் பின்பற்றியது.
5. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விசேட யாப்புசார் காப்பீடுகளை ஏற்படுத்தியது.

25. 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட ஜனாதிபதிப் பதவியின் ஆரம்ப இயல்புகள்
1. அரசு, நிறைவேற்று அரசாங்கம் என்பவற்றின் தலைவராகவும் ஆயுதப்படைகளின் தளபதியாகவும் இருந்தமை.
2. அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் உயர்கருவியாக இருந்தமை.
3. ஆறு வருட காலத்துக்கு மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டமை.
4. பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவிநீக்கம் செய்யக் கூடியதாயிருந்தமை.
5. ஜனநாயக ஆட்சி என்ற போர்வையில் உருவாக்கப்பட்ட எதேச்சாதிகாரப் பதவியாக இருந்தமை.

✧ **26 - 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

இலக்கம்	முதலாவது கூற்று	இரண்டாவது கூற்று
(1)	உண்மை	உண்மை
(2)	உண்மை	பொய்
(3)	பொய்	உண்மை
(4)	பொய்	பொய்
(5)	உண்மை	உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது

கூற்று I	கூற்று II
26. இலங்கை அரசியல் கட்சிகள் அரசியல் யாப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.	ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தாம் போட்டியிட்ட கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் தமது ஆசனத்தை இழப்பார். (........)
27. இலங்கை வாக்காளர்கள் தேர்தலில் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்குத் தமது வாக்குகளை வழங்குவார்.	அரசியல் கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவுக்கோ வாக்களிக்கும் வாக்காளர்களினால் வழங்கப்படும் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். (........)
28. ஐ.நா. நிறுவனம் 1945 இல் அத்திலாந்திக் ஒப்பந்தத்தினால் தாபிக்கப்பட்டது.	ஐ.நா. நிறுவனம் உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இரண்டாம் உலகப் போரின் பின்னர் தாபிக்கப்பட்டது. (........)
29. அண்மைக் காலத்தில் பிரித்தானிய பொதுநலவாயம் உறுப்பரசுகளின் ஜனநாயக ஆட்சி நலன்களிலும் ஆர்வம் காட்டுகிறது.	பொதுநலவாய அமைப்பின் பிரதான மாநாட்டில் உறுப்பரசுகளின் அல்லது அரசாங்கங்களின் தலைவர்களும் பிரித்தானிய முடியும் பங்குபற்றுவர். (........)
30. பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கம் (சார்க்) உறுப்பரசுகளுக்கிடையில் விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகத் தாபிக்கப் பட்டது.	சார்க் எதிர்கொள்ளும் தடைகளுள் ஒன்று இந்தோ - பாகிஸ்தான் மோதலாகும். (........)

பகுதி B

31. கிரேக்க காலத்தில் பின்வரும் கல்விக்கூடங்களில் அரசறிவியலைக் கற்பித்த அரசியல் தத்துவஞானிகளைப் பெயரிடுக.

(i) அகடமி ....

(ii) லைசியம் ....

32. அரசியலை ஒரு நடைமுறை அறிவு என்ற வகையில் கற்றல் என்ற வகையில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

....

....

33. அரசியலில் அரசியல் நடத்தையின் முக்கிய பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

....

....

34. அரசியல் கட்சிகளின் செயற்பாட்டு உபாயங்கள் இரண்டைத் தருக?

....

....

35. புதிய அரசுகளின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(i) ....

(ii) ....

36. கூட்டு சமஷ்டியின் பண்புகள் இரண்டினைத் தருக.

(i) ....

(ii) ....

37. அரசியலில் அனைத்தாண்மை ஆட்சியின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(i) ....

(ii) ....

38. அரசியல் கருத்தியலில் தேசியவாதத்தின் சாதகமான அம்சங்கள் இரண்டினைத் தருக.

(i) ....

(ii) ....

39. முரண்பாட்டுத் தீர்வு முறையை சாதகமான முறையில் அணுகும் வழிவகைகள் இரண்டு தருக.

(i) ....

(ii) ....

40. ஜனநாயக ஆட்சி முறையில் மக்களுக்கு பொறுப்புக்கூறல் வெற்றிகரமாக மேற்கொள்ளத் தேவையான கருவிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(i) ....

(ii) ....

41. ஜோர்ஜ் சீமெல் என்ற சமூகவியலாளர் ‘‘முரண்பாட்டின் சமூகவியல்’’ என்ற நூலில் முரண்பாடுகளுக்கு பாதகமான பக்கம் மட்டுமின்றி சாதகமான பக்கமும் உண்டு எனக் கருத்துத் தெரிவிக்கின்றார் இதன்படி முரண்பாட்டின் சாதகமான விளைவுகளுள் இரண்டைக் குறிப்பிடுக.

(i) ....

(ii) ....

42. ‘‘பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் தேர்தலானது பிரசைகளது பங்கேற்பு மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை ஏற்படுத்திக் கொள்ளத்தக்கதாக அமைதல் வேண்டும்’’ மேற்படி கூற்றுக்கமைய தேர்தல்கள் கொண்டிருக்கவேண்டிய நிபந்தனைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.

(i) ....

(ii) ....

43. 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் போட்டி அடிப்படையில் நலன்புரிச் செயற்பாடுகள் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட்டன. இக்கூற்றுக்கமைய டொனமூர் சீர்திருத்தத்தில் செல்வாக்குச் செலுத்திய இரு விதப்புரைகளைக் குறிப்பிடுக?

(i) ....

(ii) ....

44. பொதுக்கொள்கையில் ‘‘பணிக்குழு’’ தொடர்பாக மெக்ஸ்வெபர் என்பவர் சமூகத்தில் காணப்படும் அதிகார முறைமைகள் மூன்றினை அடையாளம் கண்டுள்ளார். அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக?

(i) ....

(ii) ....

45. (i) 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்வாகம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்விரு பகுதிகளையும் குறிப்பிடுக?

....

(ii) 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்வாகத்தின் ஒரு பகுதியை பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவியகற்ற முடியும். அப்பகுதியைக் குறிப்பிடுக?

....

....

46. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் (1) பிரதம நிறைவேற்று அதிகாரியையும், (2) பிரதான கலந்துரையாடல் மன்றினையும் குறிப்பிடுக?

(i) ....

(ii) ....

47. செனற் சபை உருவாக்கத்திற்கு சோல்பரிக் குழுவினர் கூறிய காரணங்கள் இரண்டு தருக.

(i) ....

(ii) ....

48. இலங்கையில் 1978 யாப்பின் படி மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் விகிதாசார தேர்தல் முறையின் அமைப்பையும் அதனுடைய தளத்தையும் இரண்டாக வகுத்து எழுதுக.

(i) ....

(ii) ....

49. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொள்கை ஒவ்வாத காரணத்தால் 1951ம் ஆண்டு பிரிந்த S.W.R.D பண்டார நாயக்க அமைத்த கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து 2016 ம் ஆண்டு அமைக்கப்பட்ட கட்சியையும் முறையே குறிப்பிடுக.

(i) ....

(ii) ....

50. இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தகுதிகள் உள்ளன. அத்தகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(i) ....

(ii) ....

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை
மாதிரி வினாத்தாள் - 03

அரசியல் விஞ்ஞானம் II

புதிய பாடத்திட்டம்

23 | T | II

மூன்று மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள் :

✧ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

✧ **பகுதி** I இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் **பகுதி** II இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் **பகுதி** III இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

பகுதி I

01. அரசறிவியலில் உள்ளடங்குகின்ற உப பாடப்பரப்புக்களை சிறப்பாக வரையறை செய்து ஆராய்க?

02. அரசு பற்றிய தாராளவாதக் கோட்பாடு அல்லது மார்க்சிசக் கோட்பாட்டினை ஆராய்க.

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை பரிசீலிக்குக.

(அ) அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்குமிடையிலான வேறுபாடுகள்

(ஆ) சமூக ஜனநாயகத்தின் பிரதான அடிப்படைகள்

(இ) தற்கால உலகில் அரசின் பணிகள்

(ஈ) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் நிறை குறைகள்

பகுதி II

04. இலங்கையில் 1833 - 1924 காலப்பகுதியில் காலனித்துவ பரிமாற்றத்தின் மூலம் ஏற்பட்ட பொருளாதார சமூக அரசியல் விளைவுகளைக் குறிப்பிடுக?

05. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

(அ) 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தங்களில் பொருளாதார சமூக மற்றும் அரசியல் விளைவுகள்

(ஆ) 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பில் அமைச்சரவையின் மூன்று அரசாங்க அதிகாரிகளின் வகிபங்கு

(இ) 1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அம்சங்கள்

06. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை பரிசீலிக்குக.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை 1978 ஆம் ஆண்டு யாப்போடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(அ) மனித உரிமை மீறல்கள் தொடர்பாக யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறை

(ஆ) யாப்பில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் மற்றும் பலவீனங்கள்

(இ) அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் அடிப்படைப் பண்புகள்

பகுதி III

08. (அ) பேராசிரியர் கிறிஸ்பேர்க் என்பவரின் ''முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரத்தை'' குறிப்பிட்டு அதன்படி நிலைகளை ஆராய்க.

(ஆ) முரண்பாட்டுத் தீர்வுக்கான ஊடகங்களில் ''சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்'' மற்றும் ''சமாதானத்தை மீளக் கட்டியெழுப்புதல்'' எனும் எண்ணக்கருக்களின் வகிபங்கை ஆராய்க.

09. பின்வருவனவற்றில் இரண்டினைப் பற்றி கருத்துரைக்குக.

(அ) ஐக்கிய அமெரிக்க சமஷ்டி முறையின் பண்புகள்

(ஆ) இந்திய சமஷ்டி முறையின் விசேட பண்புகள்

(இ) சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையில் காணப்படும் கூட்டாண்மை சமஷ்டிப் பண்புகள்

10. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

(அ) மாக்சியவாத சமவுடைமை வாதத்தின் பிரதான கருத்துக்கள்

(ஆ) இந்திய மதச் சார்பின்மை வாதம்

(இ) இலங்கையின் இடதுசாரிக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

(ஈ) பிரதிநிதித்துவ ஜனநாயகம்

(உ) ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சமாதானம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 03

அரசியல் விஞ்ஞானம் I | **விடைகள்** | **புதிய பாடத்திட்டம்**

பகுதி A

வினா இல	விடை	வினா இல	விடை	வினா இல	விடை
01.	1	11.	4	21.	5
02.	5	12.	3	22.	5
03.	4	13.	2	23.	5
04.	3	14.	1	24.	3
05.	4	15.	1	25.	4
06.	1	16.	5	26.	1
07.	4	17.	1	27.	1
08.	5	18.	5	28.	1
09.	1	19.	5	29.	2
10.	5	20.	2	30.	3

பகுதி B

31. 1. பிளேட்டோ
    2. அரிஸ்ரோட்டில்

32. - குடும்பம்
    - ஊடகங்கள்
    - சமவயதுக் குழுக்கள்
    - பொருளாதார காரணிகள்
    - சமய நிறுவனங்கள்
    - அரசாங்கம்
    - அபிப்பிராயத் தலைவர்கள்
    - அரசியல் கட்சிகள்

33. 1. அரசியலில் ஈடுபடல்.
    2. தேர்தலில் வாக்குகளை பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்தாமை.
    3. அரசியல் உயர் பதவிகளை வகித்தல் அல்லது வகிக்காமை.
    4. தேர்தல் செயற்பாடுகளில் செயற்றிறனுடன் ஈடுபடல் அல்லது ஒதுங்கியிருத்தல்.
    5. அரச சார்பற்ற நிறுவனங்களில் செயற்படல் அல்லது செயற்படாமை.
    6. அரசியல் கட்சிகளை அமைத்தல் அல்லது அமைக்காமை.

34. 1. அரசியல் கட்சிகளின் கருத்தியல்கள்.
    2. தேர்தல் உபாயங்களும் உத்திகளும்.
    3. உறுப்பினர்களைச் சேர்த்து நிதியை கட்டியெழுப்புதல்.
    4. அரசியல் கட்சிகளின் சமூகத்தளம்.
    5. கட்சிகளின் ஒழுங்கமைப்புக் கட்டமைவு.

35. 1. அபிவிருத்தியடைந்துவரும் தன்மையைக் கொண்டது.
    2. அரசியல் ரீதியாக நவீனப்படாமை.

3. சமூக ரீதியாக பல்வகைத் தன்மை கொண்டதாக இருத்தல்.
   உ-ம் : இலங்கையில் சிங்களம், தமிழ், முஸ்லிம், மலாயர், பறங்கியர் போன்ற இனங்கள் வாழ்கின்றன.
4. கணிசமான அளவு அரசாங்கத் தலையீடு காணப்படல்.
5. வருமான ஏற்றத்தாழ்வு காணப்படல்.
6. அரசியல் உறுதிப்பாடு இல்லாத தன்மையும், பொருளாதார வீழ்ச்சியும் காணப்படல்.
7. பயங்கரவாதம் காணப்படல்.

36. 1. பிராந்திய அரசாங்கங்கள் அதிகமான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
2. மத்திய அரசாங்கத்திற்கு குறைந்தளவான அதிகாரங்கள் இருத்தல்.
3. கூட்டு சமஷ்டி தமக்கென ஒரு கொடியை ஏற்படுத்திக் கொள்வதில்லை.
4. அந்தந்த அரசுகள் தங்களது சட்டதிட்டங்களை பின்பற்றலாம்.
5. பிரஜைகளுக்கும், பொது அரசுக்கும் நேரடி தொடர்பில்லை.
6. கூட்டு சமஷ்டியில் அங்கம் வகிக்கும் பிராந்திய அரசுகள் தாம் விரும்பினால் விலகிக்கொள்ளலாம்.

37. 1. தனியாள் உரிமைகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
2. பலாத்காரத்தின் மூலம் அதிகாரம் இயல்பாக கொண்டு செல்லப்படும்.
3. அடிப்படை உரிமைகள், சுதந்திரம் ஆகியன புறக்கணிக்கப்படுதல்
4. எதிர்க்கட்சிகளின் கரங்களை முறித்துச் செயலற்றதாக்கி விடுதல்.
5. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியன சுதந்திரமாக இயங்காமல் அரசின் கருத்தை மட்டுமே எதிரொலித்தல்
6. வன்முறை, வலிமை ஆகியவற்றின் நம்பிக்கை அதிகம் வைத்திருப்பதால் அமைதி பேணப்படுவதில்லை.

38. 1. நாட்டு மக்கள் மத்தியில் தேசப்பற்று, நாட்டுப்பற்றினை ஊட்டுதல்.
2. சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
3. மக்களை ஒன்று திரட்டி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்.
4. சர்வதேச பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல்.
5. அரசியல் ஒற்றுமை, அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல்.
6. நாட்டின் இறைமை, சமாதானம் ஏற்பட உதவிபுரிதல்.

39. 1. முன்கூட்டியே முன்னெச்சரிக்கை செய்தல்.
2. முரண்பாடு தவிர்த்தல்.
3. முரண்பாடு முகாமைத்துவம்.
4. முரண்பாடு நிலைமாற்றம்.
5. முரண்பாட்டுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்.
6. முரண்பாட்டுத் தீர்வு.

40. 1. வாக்களிப்பதன் மூலம் பிரஜைகளுக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மத்தியஸ்தம் செய்வதற்கு இடமளித்தல்.
2. அபிப்பிராய வாக்கெடுப்பு, கருத்து கணிப்பு முறை.
3. அரசாங்க அதிகாரிகளின் நடத்தைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒழுக்கநெறிக் கோவைகள் மற்றும் சட்டங்கள், விதிமுறைகள் ஏற்படுத்தப்படுதல்.
4. தகவல் அறியும் சட்டம்.
5. புதிய கொள்கை மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளமை.

41. 1. சமூகம் வளர்ச்சியடையாமல் ஒரே இடத்தில் தேங்கியிருப்பதைத் தவிர்த்தல்.
2. சமூகப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி தீர்ப்பதற்கான தேவைகள் வலியுறுத்தப்படல்.
3. நபர்களும், சமூகமும் மாற்றமடைய பங்களித்தல்.
4. சமூகக் குழுக்களிடையே ஒற்றுமை வலுவடைதல்.

42. 1. அர்த்தமும் பொருளும்
    2. சுதந்திரம்
    3. சமத்துவ வாக்களிப்பு
    4. போட்டித்தன்மை
    5. நியாயம்
    6. இரகசியம் பேணல்
    7. வாக்காளர் உள்ளீர்ப்பு
    8. கிரமமான தேர்தல்

43. 1. சர்வஜன வாக்குரிமை
    2. நிறைவேற்றுக் குழுக்கள்
    3. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்

44. 1. சம்பிரதாயபூர்வ அதிகார முறைமை
    2. சட்டபூர்வ அதிகார முறைமை
    3. கவர்ச்சிகர அதிகார முறைமை

45. 1. ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை.
    2. பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை.

46. 1. செயலாளர் நாயகம்
    2. பொதுச்சபை

47. 1. சிறுபான்மை இனத்துக்கு போதிய பிரதிநிதித்துவம் பாதுகாப்பினை வழங்குதல்.
    2. பிரித்தானியாவிலும் ஏனைய குடியேற்ற நாடுகளிலும் இரண்டாம் மன்றம் காணப்பட்டமை.
    3. தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படாத புத்திஜீவகளின் ஆலோசனைகளையும் சேவைகளையும் பெறுதல்.
    4. மக்கள் பிரதிநிதிகள் சபை அவசர அவசரமாகவும் தூரநோக்கமின்றி உருவாக்கப்படுகின்ற சட்டமூலத்தை தடுத்து நிறுத்துதல்.

48. 1. விகிதாசார பட்டியல் முறை - பாராளுமன்றம், மாகாண சபை (உறுப்பினர்கள்)
    2. விகிதாசார தனிமாற்ற வாக்கு முறை - ஜனாதிபதி
    3. விகிதாசார கலப்பு முறை - உள்ளூர் ஆட்சிமன்ற உறுப்பினர்கள்

49. 1. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (SLFP)
    2. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP)

50. 1. 35 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.
    2. மக்களால் இரு தடவைகள் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்படாதவராக இருத்தல்.
    3. குற்றப் பிரேரணையின் மூலம் பதவி அகற்றப்படாதவராக இருத்தல்.
    4. பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவராக இல்லாதிருத்தல்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 03		
அரசியல் விஞ்ஞானம் II	விடைகள்	புதிய பாடத்திட்டம்

பகுதி I

01. அரசறிவியலில் உள்ளடங்குகின்ற உப பாடப்பரப்புக்களை சிறப்பாக வரையறை செய்து ஆராய்க?

அரசறிவியல் கற்கை நெறியானது மிகவும் பரந்ததொரு பாடநெறியாகும். அத்துடன் காலத்துக்கு காலம் பல மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் உள்வாங்கி வளர்ந்துவரும் பாடநெறியாகும். ஆனால் அரசறிவியலின் பாடப்பரப்பை வரையறுத்துக்கூறுவது மிகவும் கடினமாகும். இருந்தாலும் கிரேக்க காலத்திலிருந்து அரசறிவியல் பின்வரும் பிரிவுகள் உட்கொண்டுள்ளது.

1. அரசியல் தத்துவம்
2. அரசியல் கருத்தியல்கள்
3. அரசியல் கோட்பாடுகள்
4. அரசியல் நிறுவனங்கள்
   - (அ) அரசு மற்றும் அரசாங்கம்
   - (ஆ) அரசியல் கட்சிகள்
   - (இ) அமுக்கக் குழுக்கள்
   - (ஈ) சிவில் சமூகம்
5. ஒப்பீட்டு அரசியல்
6. பொதுத்துறை நிர்வாகம்
7. உலக அரசியலும் சர்வதேச உறவுகளும்
8. முரண்பாடும் முரண்பாட்டு இணக்கப்படுத்தலும்

அரசியல் தத்துவம்

புராதன காலத்திலிருந்து தற்காலம் வரை அரசியல் ஆய்வில் உள்ளடக்கப்படும் உப பிரிவாக அரசியல் தத்துவம் காணப்படுகின்றது. தத்துவம் என்பது இறுதி இலக்கினை முதலில் தீர்மானித்துவிட்டு அது சார்ந்த கருத்துக்களினை முன்வைப்பதைக் குறிக்கும். அந்த வகையில் அரசியல் தத்துவம் என்பதனை அரசியல் விதிகள் அல்லது கொள்கைகளின் தொகுப்பு எனலாம்.

அரசியலுக்கும் தத்துவத்திற்கும் இடையிலான தொடர்புகளை ஏற்படுத்துவதில் அரசியல் அறிஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக கிரேக்கத்தினை தத்துவ காலம் என்று அழைக்கும் அளவிற்கு பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் ஆகியவர்களின் பங்களிப்பு அமைந்திருந்தது. இது தவிர ரூசோ, மெக்ஸ் வெபர், மொன்டஸ்கியூ போன்றோர்களின் பங்களிப்பினை குறிப்பிட முடியும்.

அரசியல் கருத்தியல்கள்

கருத்தியல் என்பது நம்பிக்கை அல்லது புரிதலை அடிப்படையாகக் கொண்ட கருத்துக் குவியாலாகும். அதாவது இது அரசறிவியலில் பாதிப்புச் செலுத்துகின்றதும், அரசியல் செயற்பாட்டுக்கும் அதன் போக்கிற்கும்

வழிகாட்டுகின்றதும் சமூகத்தின் அதிக எண்ணிக்கையோரை ஈர்த்துக்கொள்ளும் அரசியல் கருத்துக்கள் மற்றும் நம்பிக்கையினைக் கொண்டதுமான ஒரு கருத்துக்குவியலாகும்.

உ-ம் : உலக அரசியலில் அதிக பங்களிப்புச் செய்துள்ள தாராண்மை வாதம், சமவுடமை வாதம், பயனுடைமை வாதம், லெனின் வாதம், ஜனநாயகம், சமூக ஜனநாயகம், தேசிய வாதம், பாசிசம், நாசிசம், ஏகாதிபத்தியம், அரச நலன்புரி வாதம், நவ தாராண்மை வாதம், குடியரசு வாதம், பெண்ணியல் வாதம்.

அரசியல் கோட்பாடுகள்

சமூகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளையும் அரசியல் நிறுவனங்களையும் மற்றும் அவை ஏன் எவ்வாறு நிகழ்கின்றன என்பதையும் விபரிப்பதற்கு அறிஞர்கள் பயன்படுத்தும் செய்முறைக்கருவியே அரசியல், சமூகக் கோட்பாடுகளாகும்.

உ-ம் : மேலே எறியும் ஒரு பொருள் ஏன் வேறொரு திசைக்கும் செல்லாது மீண்டும் பூமியை வந்தடைகின்றது என்பதை புவியீர்ப்பு கோட்பாட்டின் மூலம் பௌதீகவியல் விளக்குவதைப்போன்று.

சந்தையில் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் போது அவற்றின் விலை ஏன் அதிரிக்கின்றது என்பதை கேள்வி - நிரம்பல் கோட்பாட்டின் மூலம் பொருளியல் விளக்குவதைப் போன்று.

அரசறிவியலானது சமூக பொருளாதார மாற்றங்களின் போது சில சமூகக் குழுக்களுக்கிடையில் முரண்பாட்டு உணர்வுகளும், கிளர்ச்சிகளும் ஏன் ஏற்படுகின்றன என்பதை சார்பு இழிவுக் கோட்பாட்டின் (Relative Deprivation Theory) மூலம் விளக்கப்படுகின்றது.

- அரசின் கோட்பாடுகள் அரசியல் கருத்துக்களின் வரலாற்றை வெளிப்படுத்துவதோடு நவீன உலகின் அரசியல் நடத்தைகளையும் ஒழுங்கமைந்த வகையில் கற்பதனையும் மேற்கொள்கின்றது.
- அரசியல் கோட்பாடுகள் இரண்டு வகைப்படும்.
  1. நியமக் கோட்பாடுகள்
  2. விஞ்ஞான ரீதியான கோட்பாடு

அரசியல் நிறுவனங்கள்

அரசியல் கற்கையில் அரசியலானது பல்வேறு நிறுவனமயப்படுத்தப்பட்டு இருப்பதனாலும் பெரும்பாலான அரசியல் செயன்முறைகளும், நடைமுறைகளும் அந்நிறுவனங்களைச் சார்ந்து ஒழுங்கமைக்கப்பட்டிருப்பினாலும் அரசியல் நிறுவனங்களில் ஆர்வம் காட்டப்படுகின்றது.

பொருளியல், சமூகவியல், கல்வியியல், சட்டம், அரசறிவியல் ஆகிய பல சமூக விஞ்ஞானத் துறைகளிலும் நிறுவனம் பற்றிய கற்கை முக்கியம் பெறுகின்றது. நிறுவனங்கள் சட்ட திட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும், நடத்தை முறைகளையும் கொண்டமைந்த ஒழுங்கமைப்புகளாக இருத்தல்.

சமூகத்தில் காணப்படும் நிறுவனங்களை முறைசார் (Formal) மற்றும் முறைசாரா (Informal) என வகைப்படுத்தலாம்.

- பாடசாலை, பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி, பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் முறை சார்ந்தவை ஆகும். இவை முறையான சட்டதிட்டங்கள், நபர்கள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றுடன் கூடிய புலப்படும் நிறுவனமாகும்.
- குடும்பம், உறவுமுறை, நிலம், சாதி, தந்தை, தலைமைத்துவம் போன்றன சமூகத்தில் காணப்படும் முக்கிய நிறுவனங்களினாலும் இவை முறைசாரா இயல்பிலேயே காணப்படுகின்றன. இது எங்கள் முன் புலப்படாவிடினும் அதன் இருப்பு செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகளை கண்டுகொள்ளமுடியும்.

(அ) அரசு மற்றும் அரசாங்கம்

எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் அடிப்படையான மைய்யமான அரசியல் நிறுவனங்கள் அரசு மற்றும் அரசாங்கமுமாகும். சமூகத்தில் காணப்படும் ஏனைய பெரும்பாலான அரசியல் நிறுவனங்கள் அரசு மற்றும் அரசாங்கத்தினாலேயே தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
உ-ம் : பாராளுமன்றம், அமைச்சரவை, நீதிமன்றங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், ஆயுதப் படைகள், பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலை, பாடசாலை, பல்கலைக்கழகங்கள், திணைக்களங்கள் போன்றன.

நவீன ஜனநாயக அரசியல் முறையில் அரசென்பது ஒப்பீட்டு ரீதியாக நீண்டகாலம் நிலைத்திருக்கும் சமூகத்தில் காணப்படும் அதியுட்சமான அரச நிறுவனமாகும். அரசாங்கம் என்பது அரச செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக மக்களால் குறுகிய காலத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள நிறுவனமாகும். ஆரம்பகால ஜனநாயக அரசியல் முறையில் அரசு மற்றும் அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படவில்லை என்பது முக்கியமானதாகும்.

(ஆ) அரசியல் கட்சிகள்

கட்சி என்பது Partitie என்ற பிரெஞ்சு மொழிப் பதத்திலிருந்து தோன்றிய ஒன்றாகக் காணப்படுவதுடன் இச்சொல் பிரித்தல் என்ற பதத்தைக் குறித்து நிற்கின்ற அதே சமயம் Partoger என்ற லத்தீன் பதத்துடன் தொடர்புபட்டு கட்சி என்பது பங்குகொள்ளல் என்ற பொருளையும் தருகின்றது.

ஒரு நாட்டில் ஆட்சிக்காக ஒழுங்கமைக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒன்றிணைந்த மக்கள் குழு அரசியல் கட்சி என எளிமையாக வரைவிலக்கணம் செய்யலாம். எல்லா நாட்டிலும் அரச அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் எல்லாவற்றிற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான போட்டியில் இக்கட்சிகள் ஈடுபடுவதையும் நாம் காணலாம்.

(இ) அமுக்கக் குழுக்கள்

ஐரோப்பிய அமெரிக்க அரசறிவியலில் அதிகமாக ஆய்வுக்குட்படுத்தப்படும் அரசியல் சமுதாயக் குழுக்களே அமுக்கக் குழுக்களாகும். அரசியல் அதிகாரத்தின் நடைமுறையில் உத்தியோகபூர்வமாகப் பங்கேற்காது ஆனால் அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கத்திலும், அவற்றின் அமுலாக்கத்திலும் செல்வாக்குச் செலுத்தி நமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக ஒழுங்கமைந்த சமூகக் குழுக்களே அமுக்கக் குழுக்களாகும்.

(ஈ) சிவில் சமூகம்

- ஒழுங்கமைந்த சமூகமே சிவில் சமூகம் என்று அழைக்கப்படுகின்றது.
- அரசுக்கு வெளிவாரியாகவும், சுயாதீனமாகவும் தமது பொது நோக்கங்களுக்காக ஒழுங்கமைத்து கூட்டாகச் செயற்படுகின்ற சமூகப்பகுதியே சிவில் சமூகமாகும்.
- சிவில் சமூகம் என்பது அரசாங்கம், குடும்பம், சந்தைத் தாபனங்கள் ஆகிய மூன்றினையும் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் சகல சமூகத்தாபனங்களின் கூட்டு மொத்தமே சிவில் சமூகம் எனப்படுகிறது.

ஒப்பீட்டு அரசியல்

1950 களின் பின்னர் அரசறிவியலோடு இணைந்த ஒரு புதிய பாடத்துறையே ஒப்பீட்டு அரசியலாகும். அது அமெரிக்க அரசறிவியலில் அறிமுகமாகி பின்னர் அரசறிவியலின் ஒரு புதிய கற்கைத் துறையாகவும் கற்கை செய்முறையாகவும் பரவலடைந்தது. ஒப்பீட்டு அரசியல் கற்கை அரிஸ்ரோட்டில் காலத்தில் ஆரம்பமாகி மக்கியாவல்லி ஈறாக வளர்ச்சியுற்று இன்று புதிய உருவினைப் பெற்றுள்ளது.

பொதுத்துறை நிர்வாகம்

- தற்கால தேசிய அரசுகள் தோன்றி அரசாங்கத்தின் வேலைகளை ஏனைய வேலைகளிலிருந்து பிரித்தறிய முற்பட்டதன் பின்னரும் அவ்வேலைகளை மேற்கொள்வதற்காக வாண்மை சிவில் சேவையாளர்களை நியமித்ததன் பின்னரும் தற்கால பொதுத்துறை நிர்வாகம் ஒரு புறம்பான துறையாக வளர்ச்சியடையலாயிற்று. 17ஆம் நூற்றாண்டிலேயே பொதுத்துறை நிர்வாகம் என்ற சொற்பிரயோகம் கோர்வை செய்யப்பட்டது. 1887 இல் Woodrow Wilson இன் The Study of Public Administration என்ற கட்டுரையை பொதுத்துறை நிர்வாகம் ஒரு கற்கைத் துறையாக வளர்ச்சியடைவதற்கு தளம் அமைந்தது. இவருக்குப் பின்னர் Frank J. Goodnow, W.F. Willoughfy, L.D. White, Luther Gulick, Moony, Henry Fayol போன்றவர்களின் ஆய்வுகளும் நூல்களும் மேலும் வளர்ச்சியடைய காரணமாயிற்று.

- அரசாங்கத்தின் வேலைகளை திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்படுத்தல், அமுல்படுத்தல், இணைத்து வைத்தல், கொண்டு நடாத்துதல் என்பன உள்ளடங்கிய ஒரு செயன்முறையே பொதுத்துறை நிருவாகம் என வரையறை செய்யலாம்.

- அரச சட்டங்களை முறையாகவும் விரிவாகவும் நடைமுறைப்படுத்துவதே பொதுத்துறை நிருவாகமாகும். *(Woodrow Wilson)*

உலக அரசியலும் சர்வதேச உறவுகளும்

பொதுவாக சர்வதேச உறவுகள் மற்றும் சர்வதேச அரசியல் (International Politics) ஆகிய வார்த்தைகள் ஒரே பொருளில் பயன்படுவதைக் காணலாம். ஆனால் உண்மையில் இரண்டும் மாறுபட்ட பொருளில்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இரண்டு சொற்றொடர்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

சர்வதேச அரசியல் என்பது நாடுகளுக்கிடையிலான உறவுகள் ராஜதந்திரம் ஆகியவை மட்டும் பற்றியதாகும். அதாவது, இதன் பரப்பு குறுகியதாகும். ஆனால் சர்வதேச உறவுகள் என்பது விரிவானது இதில் பல அம்சங்கள் இடம்பெறுகின்றன.

சர்வதேச அரசியல் என்ற கற்கைப் பிரிவு அரசியலில் மிக முக்கியமான இடத்தினைப் பிடித்துள்ளது. உலகின் வேறுபட்ட நாடுகளுக்கிடையிலான உறவுகளும் வேறுபட்ட நாட்டு மக்களிடையிலான உறவுகளும் பேணப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்ட போது சர்வதேச அரசியல் என்ற கற்கை நெறி அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஒத்தவை அல்லாத நலன்களை கொண்ட இறைமை அரசுகளுக்கிடையிலான இடைவினைகளும் தொடர்புகளுமே சர்வதேச அரசு எனப்படும். தேசங்களுக்கிடையில் இடம் பெறும் அதிகாரத்துக்கான போராட்டமும் அதிகாரப் பிரயோகமுமே சர்வதேச அரசியல் என H.J. மோகன்தோ என்பவர் கூறுகின்றார்.

நாடுகளுக்கிடையிலான அதிகாரம் அந்த அதிகாரத்தில் பேணப்பட வேண்டிய சமநிலை என்பன பற்றியும் அந்நாடுகளுக்கிடையே கடைப்பிடிக்கப்பட வேண்டிய இராஜ தந்திர முறைகளைப் பற்றியும் சர்வதேச உறவுகளை பேணும் பொது அமைப்புக்கள் பிராந்திய அமைப்புக்கள் என்பன பற்றியும் இக்கற்கை நெறி ஆய்வு செய்கின்றது.

உதாரணமாக சர்வதேச அமைப்பாக UNO, பிராந்திய அமைப்புக்களான அணிசேரா இயக்கம், சார்க் அமைப்பு, ASIAN அமைப்பு, நேட்டோ அமைப்பு போன்றன பற்றியும் சர்வதேச அரசியலில் ஆய்வு செய்யப்படுகின்றது.

நாடுகளுக்கிடையிலான மோதல்களை தடுத்து சுமூகமான உறவு நிலையை மேற்கொள்ளச் செய்யப்படும் நடவடிக்கைகள் பற்றிய படிப்பே சர்வதேச உறவுகள் என்று கூறலாம். சர்வதேச உறவுகள் என்பது நாடுகளுக்கிடையே காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அல்லது மாறாக அவற்றைப் பொருள் நோக்கு அடிப்படையில் அணுகுவதற்கான ஒரு வரையறுக்கப்பட்ட முறையே ஆகும்.

சர்வதேச உறவுகள் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளுக் கிடையிலான அதிகாரப் பூர்வமான உறவுகளைப் பற்றியது என்று கூறுவது குறுகிய அணுகுமுறையாகும். இந்த விளக்கம் அரசுகளின் தலைவர்களும், அதிகாரிகளும் செய்து கொள்ளும் அதிகாரப் பூர்வமான உறவுமுறைச் செயல்கள் பற்றி மட்டுமே குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. ஆனால் சர்வதேச உறவுகள் என்பது அரசுகளுக் கிடையிலான எல்லா உறவுமுறைகளையும், எல்லைகளையும் தாண்டி மக்களிடையே ஏற்படும் உறவுமுறைகளையும் குறிப்பதாக உள்ளது.

சில அரசியல் அறிஞர்கள் சர்வதேச உறவுகள் என்ற படிப்பு நாடுகளின் சக்தியையும் வெளியுறவுக் கொள்கைகளையும் பற்றியது என்று கருதுகின்றனர். மற்றும் சிலர் அரசுகளின் எல்லையைக் கடந்த எல்லா விதமான உறவு முறைகளைப் பற்றியதே என்று கருதுகின்றனர். ஆனால் இத்தகைய உறவுமுறைகள் அரசியல், பொருளாதார, சமுதாய, சட்டவியல் சார்ந்தவையாகவோ, தனிப்பட்டவைகளாகவோ அல்லது அதிகாரபூர்வமானதாகவோ அமையலாம். இப்படி பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் இறைமை பெற்ற அரசுகளுக்கிடையிலான உறவுகளே சர்வதேச உறவின் மையக் கருத்தாக உள்ளது. சர்வதேச உறவு என்பது அரசியல் ராஜதந்திரத்தின் வெற்றி அல்லது தோல்வி பற்றிய படிப்பாகவே இருந்தது.

ஆனால் நாளடைவில் சர்வதேச உறவுகளின் பரப்பெல்லை விரிவடைந்தது முதல் உலகப் போருக்குப் பிறகு அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் சர்வதேச உறவுகளின் பரப்பெல்லையை விரிவடையச் செய்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அதன் பரப்பெல்லை மேலும் விரிவடைந்தது. உலக அமைதி நிறுவனமான ஐக்கிய நாடுகளின் செயல்பாடுகளால் சர்வதேச உறவுகள் மேலும் முக்கியத்துவம் பெற்றது. அடிமைப்பட்டுக்கிடந்த ஆசிய ஆபிரிக்க நாடுகளின் எழுச்சியும் சுதந்திரமும் சர்வதேச உறவுகள் பாடத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே ஏற்பட்ட பனிப்போர் மற்றும் அணிசேரா இயக்கம், கொமன்வெல்த் அமைப்பு, சார்க் அமைப்பு ஆகியவை சர்வதேச உறவுகளின் பரப்பை வரிவாக்கியுள்ளன.

முரண்பாடும் முரண்பாடு இணக்கப்படுதலும்

முரண்பாடு

- ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் இருவர் அல்லது பலர் வாய் மொழியாக அல்லது உடல் ரீதியாக அல்லது ஆயுதங்களாக மேற்கொள்ளும் கிளர்ச்சி மோதலாகும்.
- மோதல் என்பது ஒருவரின் இதயத்தின் அல்லது மனதின் வெளிப்படையாகும் என்று புத்த பெருமான் கூறியுள்ளார்.
- முரண்பாடு என்பது இரு தனி நபர்களுக்கிடையில் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில் ஏற்படும் கருத்து முரண்பாட்டின் பெறுபேறாக எழும் நடவடிக்கை சார் பிரச்சினையாகும் என்று ஏ.எஸ். பாலசூரிய என்பவர் கூறியுள்ளார்.
- மோதல் என்பது இரு சாரார் அல்லது பல கட்சியினர் ஒரே நேரத்தில் அரிதாக உள்ள ஒரே வளத்தை தனதாக்கிக் கொள்ள முயல்வதால் ஏற்படும் நிலையாகும் என்று 'பீற்றர் வொலஸ்டீன்' என்பவர் கூறுகின்றார்.

முரண்பாட்டு வகைகள்

1. அரசியல் மோதல்.
- அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலான மோதல்.
- இந்தோனேசியாவின் கிழக்குத் தீமோர் போராட்டம்.

2. சமய மோதல்.
- வரலாற்றில் ஏற்பட்ட சிலுவை யுத்தம்.
- இந்தியாவில் இந்துக்கள் முஸ்லிங்களுக்கிடையிலான மோதல்.
- அயோத்திய பாபரின் மஸ்ஜித் உடைப்பு.

3. எல்லை மோதல்.
- இஸ்ரேலிய பலஸ்தீன் போர்.
- இந்திய பாகிஸ்தான் (காஷ்மீர்) முரண்பாடு.

4. நிற வேறுபாட்டு மோதல்.
- தென்னாபிரிக்காவின் நீண்ட காலமாக ஏற்பட்ட வெள்ளையர் - கறுப்பர் மோதல்.

5. பொருளாதார வளங்களுக்கான மோதல்.
- அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்தமை.
- ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தமை.
- அமெரிக்கா ஆப்கானிஸ்தானுடைய ஆக்கிரமிப்பு.

6. சாதி, கோத்திர மோதல்.
- ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் கோத்திரச் சண்டைகள்.
- தாய்லாந்தில் வடக்கு மேற்கு புறங்களில் வாழும் கோத்திரங்களின் மோதல்.
- இந்தியாவில் உயர் குலத்தவருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையில் ஏற்படும் மோதல்.

7. இன மோதல்.
- இலங்கையில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையிலான மோதல் (1982ம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு மே மாதம் 17ம் திகதி வரையிலான காலப்பகுதி)

மோதல் இணக்கப்படுதல்

மோதல் இணக்கப்படுத்தல் என்பது, மோதல் தவிர்ப்பிலும் பார்க்க வேறுபட்ட ஒரு செயன்முறையாகும். இணக்கப்படுத்தலின் போது நிகழ்வது, வன்முறை மோதலின் வன்முறைத் தன்மையைத் தணித்தலாகும். மோதல் தணித்தலின் போது மோதலுக்கு ஏதுவாகவுள்ள விசேடமான மற்றும் ஒட்டு மொத்த காரணங்களின் பால் கணிசமான கவனஞ் செலுத்தப்படுவதில்லை. வன்முறை மோதுகையின் உக்கிரத்தன்மையை இழிவுபடுத்துவதே அதன் நோக்கமாயிருத்தல் அதற்கான காரணமாகும்.

மியால் உட்பட்ட குழுவினர் இதனை ஓர் ஒப்பந்தம் மூலம் செய்யலாம் என எடுத்துக் காட்டுகின்றனர். உதாரணமாக 1998 இல் வட அயர்லாந்தில் ஏப்ரல் 10ஆம் திகதி கைச்சாத்திடப் பட்ட பெரிய வெள்ளி ஒப்பந்தமும் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி இலங்கை அரசாங்கத் திற்கும் அமைப்பிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையும் இதற்கான சிறந்த உதாரணங்களாகும்.

இவ்வாறான ஒப்பந்தத்தின் மூலம் மோதலை இணக்கப்படுத்துவதற்குத் தேவையானதாகக் கருதப்படும் நிலைமை, மோதலுடன் தொடர்புடைய தரப்பின் மோதலில் சிறைப்பட்டிராத நிலைமையை அடைந்த நிலைமையாகும். மோதல் இணக்கப்படுத்தல் செயன்முறையின் மூலம் மோதலின் வன்முறைத் தன்மையைத் தணிப்பதோடு இறுதி நோக்கமாக இருந்த போதிலும் அதனை மோதலின் முடிவாகக் கருதுவது இயலாதாகும். எவ்வாறாயினும் மோதல் இணக்கப்பாடு தொடர்பான செயன்முறையை நீண்டகால மோதல் தீர்வின் ஆரம்பக் கட்டமாகக் கருதலாம்.

02. அரசு பற்றிய தாராளவாதக் கோட்பாடு அல்லது மார்க்சிசக் கோட்பாட்டினை ஆராய்க.

- ✧ அரசு பற்றிய தாராளவாத கோட்பாடு 17ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இது முடியாட்சி மற்றும் நிலப்பிரபுத்துவ சமூக - பொருளாதார ஒழுங்கின் வீழ்ச்சி, முதலாளித்துவ சமூக - பொருளாதார அமைப்பின் வளர்ச்சி என்பவற்றின் வரலாற்று பின்னணியில் ஐரோப்பாவில் தோன்றியது.
- ✧ அரசு பற்றிய தாராளவாத அரசியல் கோட்பாட்டின் ஸ்தாபக சிந்தனையாளர்களாக ஜோன் லொக், ஜீன் ஜக்கி ரூசோ, இம்மானுவேல் கான்ட், ஜான் ஸ்டுவர்ட் மில், மொன்டெஸ்கியூ மற்றும் ஜெரமி பெந்தம் போன்றவர்கள் காணப்பட்டார்கள்.
- ✧ அரசு தொடர்பான மரபு ரீதியான தாராண்மைவாத கோட்பாடு ஜோன்லொக், ஜோன் ஸ்டுவர்ட்மில், மொன்டஸ்கியூ மற்றும் காண்ட் போன்றவர்களின் கற்பித்தல்களில் இருந்து பெறப்பட்டுள்ளது.
- ✧ தாராளவாதக் கோட்பாடு அரசை விளக்குவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பயன்படுத்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகும். லொக், ரூசோ மற்றும் காண்ட் போன்றோர் இதனைப் பயன்படுத்தினர்.
- ✧ மேற்கண்ட சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்ட அரசு பற்றிய தாராளவாத கோட்பாட்டின் முக்கிய கருத்துக்களை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.
  - (i) அரசு என்பது சமூகத்தின் உருவாக்கம். இது கடவுளினாலோ அல்லது மனித சமுதாயத்திற்கு வெளியே எந்த சக்திகளினாலுமோ உருவாக்கப்படவில்லை. மனிதர்கள் தங்கள் வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும் அனைவருக்குமான பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இதை உருவாக்கியுள்ளனர்.

(ii) மனிதர்கள் தமக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் விளைவாக அரசை உருவாக்கினர். அந்த ஒப்பந்தத்தின் கீழ் மக்கள் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையின் தங்கள் சொந்த இறையாண்மையை ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கின்றனர். அதனால் இறைமையானது ஆட்சியாளர்களிடமன்றி மக்களிடமே காணப்படுகின்றது.

(iii) அரசின் அடிப்படைக் கடமை மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும். பிரசைகளின் அந்த உரிமையை மீறுவது அரசு மற்றும் சமூகத்திற்கிடையிலான சமூக ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

(iv) பொருளாதாரத்தின் செயற்பாட்டில் அரசு தலையிடக்கூடாது. பொருளாதாரப் பரப்பு அரசாங்க கட்டுப்பாடு மற்றும் தலையீடு இல்லாமல் இருக்கவேண்டும். இந்த கொள்கை தாராளவாதக் கோட்பாட்டில் தலையிடா அரசு என்று அழைக்கப்படுகிறது.

(v) அரசின் அரசியல் அதிகாரம் மக்களை அடக்குவதற்கோ அல்லது கொடுங்கோன்மையாகவோ பயன்படுத்தக்கூடாது. இது வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு அரசாங்கத்தையும் சட்டமன்றத்தையும் வேண்டி நிற்கின்றது. இது லொக் உருவாக்கிய கருத்தாகும்.

- அரசு பற்றிய இந்த மரபு ரீதியான தாராளவாதக் கோட்பாடு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து மாறத் தொடங்கியது. ஜெரமி பெந்தம் உருவாக்கிய பயனுடமைக் கோட்பாடு அதிக எண்ணிக்கையிலான மக்களின் அதிக மகிழ்ச்சியை உறுதி செய்வதற்காக அரசாங்கம் கொள்கைகளை வடிவமைத்து சட்டத்தை இயற்றவேண்டும் என்று வாதிட்டது.
- பின்னர் ரி.எச். கிரீன் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தாராளவாத சுதந்திர சந்தைக் கோட்பாட்டை திருத்தியமைத்தார். புதிய அணுகுமுறையின்படி சமூக - பொருளாதார சீரமைப்புக்காக அரசு தீவிரமாக தலையிட வேண்டும். இந்த புதிய அணுகுமுறை நவீன தாராண்மைவாதம் (New or modern liberalism) என்று அழைக்கப்பட்டது.
- இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசு பற்றிய தாராளவாத அரசியல் அணுகுமுறையில் சமூக பொதுநலவாதமும் சேர்ந்து கொண்டது.
- அரசு பற்றிய நவ தாராளவாதக் கோட்பாடு (Neo - Liberalism) 1980 களில் இருந்து வளர்ந்தது. இது அரசின் மரபுரீதியான தாராளவாத கோட்பாட்டை மீண்டும் அரசியல் கோட்பாட்டிற்குள் கொண்டு வரவே முயற்சித்தது. அதன் முக்கிய கோட்பாட்டாளர்களாக பிரீடெரிச் ஹெயக், ரொபர்ட் நொக்ஸ் மற்றும் மில்டன் பிரீட்மேன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.
- சமகால சுதந்திர சந்தை பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் உலகமயமாக்கலின் கீழான அரச சீர்திருத்தங்களுக்கும் வழிகாட்டும் கோட்பாடாக நவ தாராளவாதக் கோட்பாடு காணப்படுகின்றது. அரசு பற்றிய நவ தாராளவாதக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்கள் பின்வருமாறு.

(i) அரச கட்டுப்பாடு மற்றும் தலையீட்டிலிருந்து சந்தை விடுபட வேண்டும். அதனை தாராளவாத அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) சமூகப் பொதுநலன் மற்றும் வருமானத்தை மீளப்பகிர்ந்தளிப்பதில் அரசு ஈடுபடக்கூடாது. இந்த பணிகளை சந்தைகளிடம் விட்டுவிட வேண்டும்.

(iii) பொருளாதாரத்தின் அரசதுறைப் பொருளாதாரம் ஒழிக்கப்பட வேண்டும் அல்லது அதன் அளவைக் குறைக்க வேண்டும். ஆகையால் அரச நிறுவனங்களின் அளவினை குறைக்கவேண்டும். அது அரசு புதிய சந்தையுடன் போட்டியிட வழிவகுக்கும் என தாராளவாதிகள் வாதிக்கின்றனர்.

அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு

அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு அரசு பற்றிய தாராளவாதக் கோட்பாட்டிற்கு மாற்றீடாகவும் சமவுடைமை அரச மாதிரி மார்க்சிச கோட்பாட்டினை அடிப்படையாகவும் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

- ✧ அரசு பற்றிய மார்சிசக் கோட்பாடு கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கல்ஸ் மற்றும் வி.ஐ. லெனின் ஆகியோரின் எழுத்துக்களினால் உருவாக்கப்பட்டுள்ளது. இது 19ஆம் நூற்றாண்டில் அரசு பற்றிய ஆதிக்கமுள்ள அணுகுமுறையாக இருந்த அரசின் தாராளவாத கோட்பாட்டினை விமர்சனம் செய்வதுடன் தொடங்கியது.

- ✧ அரசு பற்றிய மார்சிசக் கோட்பாட்டை வழிநடத்தும் ஆய்வுமுறை அடிப்படையிலான அணுகுமுறை வரலாற்று பொருள்முதல்வாதம் ஆகும். இந்த அணுகுமுறை அரசானது எந்தவொரு சமூகத்திலும் சமூகத்தின் பொருள் சார்ந்த அடித்தளங்களில் காணப்படுகின்றது என வாதிட்டது. பொருள் சார்ந்த அடித்தளங்கள் என்பது அந்த சமூகத்தில் காணப்படும் சொத்து மற்றும் செல்வத்தின் உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமூக வகுப்புக்கள் மற்றும் பொருளாதார உறவுகள் ஆகும். அரசு சமூகத்திலும் மேலான மற்றும் அது ஒது கட்புலனாகாத வரலாற்று சக்தி என்ற ஹெகலின் கருத்துக்களை மார்க்சிசம் நிராகரித்தது. மார்க்சிச கோட்பாடு அரசு சமூகத்திலிருந்து தோன்றியது என்றும் அது அடிப்படையில் ஒரு சமூக நிறுவனம் என்றும் மாக்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் போன்றோர் வலியுறுத்தினர்.

- ✧ மார்க்சிச கோட்பாட்டின் மற்றொரு முக்கியமான அனுமானம் அரசு வரலாற்றின் மூலம் உருவாக்கியுள்ளது என்பதாகும். எனவே, அதன் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியில் அரசு அந்த வரலாற்றுக் காலம் மற்றும் சூழலுக்கான குறிப்பிட்ட பண்புகளை எடுத்துள்ளது. அரசின் இத்தகைய வரலாற்று வடிவங்களில் சில அடிமை, நிலைப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவம் போன்ற இயல்புகளைப் பெற்றுக்கொண்டது. அரசு இல்லாமல் போகும் வரலாற்றுக்காலம் ஒன்று உருவாகும் என மார்க்ஸீசக்கோட்பாடு குறிப்பிட்டது.

- ✧ அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு அரசு வரலாற்று ரீதியாக தோற்றம் பெறாத ஒரு காலகட்டத்தைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்த அரசுக்கு முன்னரான மனித சமூகம் ஆதிகால கம்யூனிச சமூகமாக இருந்தது. மார்க்சிச கோட்பாட்டின் படி, ஆதிகால கம்யூனிச சமுதாயத்தில் எந்த அரசும் இல்லாததற்குக் காரணம் இங்கு தனியார் சொத்துக்கள் அல்லது தனியார் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சமூக வகுப்புக்கள் காணப்படாமையாகும்.

- ✧ இவ்வாறு மனித சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு சமூக வகுப்புகள் அபிவிருத்தியடைந்த போது அதன் பெறுபேறாக சமூகங்கள் எதிர்வர்க்கங்களாக பிரிவடைந்ததன் விளைவாகவே அரசு முதன் முதலில் தோற்றம் பெற்றது என்கிறது. இதன்படி அரசு வர்க்க பேதத்தின் விளைவாகும். அது பொருளாதார சக்தி கொண்ட ஆதிக்க வகுப்பின் கருவி ஒன்றாக இருந்தது என மார்க்சிசக் கோட்பாடு குறிப்பிடுகின்றது.

- ✧ இவ்வாறு அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு அரசின் ‘‘வர்க்க வேறுபாடு’’ ஒன்றை அல்லது அரசின் ‘‘வர்க்கக் கோட்பாடு’’ ஒன்றை வழங்கியுள்ளது. அதன்படி அரசு அனைவருக்கும் உரித்தான ஒன்று அல்ல. இது பொருளாதார ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்திற்கு சொந்தமானது. இது அடிமை முறை சமூகத்தில் ஆண்டான்களினதும், மானிய முறை சமூகத்தில் பிரபுக்களினதும் முதலாளித்துவ சமூகத்தில் செல்வந்தர்களினதும் கருவியாகும் என மாக்சிச கோட்பாடு குறிப்பிடுகின்றது.

- ✧ இந்த விடயத்திலிருந்து அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாட்டின் மற்றொரு அம்சம் வெளிப்படுகிறது. அதாவது அரசு அடிப்படையில் வன்முறை மற்றும் அடக்குமுறையுடைய நிறுவனம் ஆகும். அதன்படி தொழிலாளர் வர்க்கத்தையும் ஏழைகளையும் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை நிலைமைகளின் கீழ் வைத்திருப்பதற்காக ஆளும் வர்க்கத்தின் முக்கிய கருவியாக அரசு காணப்படுகின்றது.
- ✧ சமூகத்தை எதிர் வர்க்கங்களாக வேறுபடுத்துவதன் பிரதிபலிபாக அரசு உருவானது என்ற வாதம் வர்க்கங்கள் இல்லாதபோது எந்த அரசும் காணப்படாது என்ற மனித வரலாற்றின் எதிர்கால வரலாற்று படிநிலையை குறிப்பிடுகின்றது. கம்யூனிச சமூகம் என்பது வர்க்கங்கள் இல்லாமையால் அரசற்ற நிலையில் இருக்கும் சமூகம் என மார்க்சிசம் எதிர்வு கூறியது. வர்க்கங்கள் அற்ற கம்யூனிச சமூகத்தை நோக்கி காலடியெடுத்து வைக்கும்போது ''அரசு உதிர்ந்து மறைந்துவிடும்'' என்பது மார்க்சிசம் இது தொடர்பில் குறிப்பிட்டுள்ள விடயமாகும்.
- ✧ அரசு உதிர்ந்து மறைந்துவிடும் என்ற இந்த கோட்பாடு பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. விமர்சகர்கள் இது ஒரு கற்பனைவாத சிந்தனையே தவிர வரலாற்று யதார்த்தம் அல்ல என்று குறிப்பிடுகின்றார்கள்.
- ✧ தாராளவாத அரசியல் கோட்பாடு மார்க்சிச கோட்பாட்டின் அரசு பற்றி வர்க்க அணுகுமுறையை விமர்சிக்கிறது. அரசு ஒரு வர்க்கத்தின் கருவி என்று கூறுவது அனுபவபூர்வமாக தவறானது என்பதாகும். தாராளவாத அரசின் இந்த விமர்சனத்துடன் முன்வைக்கப்படுகின்ற கோட்பாடு ''பன்மைத்துவவாத கோட்பாடு'' என அழைக்கப்படுகின்றது. இதன்படி அரசு என்பது ஒரு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்படும் அரசியல் நிறுவனம் அல்ல. அது பல்வேறு சமூகக் குழுக்களின் கோரிக்கைகள் மற்றும் அபிலாசைகளுக்கு பிரதிபலிப்பினைக் காட்டும் ஒன்றாகும்.

முடிவுரை

அரசியல் கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அரசு பற்றிய மார்க்சிசக் கோட்பாடு இன்னும் அரசின் தன்மை மற்றும் பணிகள் பற்றிய பலமான பகுப்பாய்வை வழங்குகிறது என்று குறிப்பிட்டு விடையை முடிக்கமுடியும். மார்க்சிச கோட்பாட்டின் முக்கியமானதொரு பலம் அது பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அதிகாரத்தின் சமமற்ற பங்கீட்டை பிரதிபலிக்கின்ற அரசை முதன்மையானதொரு சமூக அதிகார நிறுவனமாக கருதுவதாகும்.

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை பரிசீலிக்குக.

(அ) அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்குமிடையிலான வேறுபாடுகள்

(ஆ) சமூக ஜனநாயகத்தின் பிரதான அடிப்படைகள்

(இ) தற்கால உலகில் அரசின் பணிகள்

(ஈ) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் நிறை குறைகள்

(அ) அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்குமிடையிலான வேறுபாடுகள்

1. நடைமுறை அரசியல் மற்றும் கோட்பாட்டு அரசியல்.

அரசியல் வாதிகளும் அரசியலில் ஆர்வமுடைய பிரசைகளும் மேற்கொள்ளும் செயற்பாடுகளே நடைமுறை அரசியலாகும். இதில் அதிகாரத்தை பெறுதல், அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்,

தேர்தலில் பங்கேற்றல், வாக்களிப்பதில் ஈடுபடுதல், எதிர்ப்பு இயக்கத்தை அமைத்து அதில் ஈடுபடல், அரசாங்கத்தை விமர்சித்தல் போன்ற செயற்பாடுகள் இதில் இடம்பெறுகின்றன. அரசியல் தோற்றப்பாடுகளையும் கோட்பாடுகளையும், அணுகுமுறைகளையும் அரசியல் தத்துவங்களையும், நடைமுறை விடயங்களையும் பயன்படுத்தி விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து கூறுவதே கோட்பாட்டு அரசியலாகும்.

(உ - ம்) : அரசு, அரசாங்கம், பாராளுமன்றம், நீதிமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள், பணிக்குழு, அமைச்சரவை, அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், வாக்காளர்களின் நடத்தை, பொதுக் கொள்கைகள் மற்றும் அவற்றின் நடைமுறைகள், சர்வதேச அரசியல், சர்வதேச உறவுகள், சர்வதேச அமைப்புக்கள், மோதல் முகாமைத்துவமும் தீர்வும், யுத்தம் சமாதானம். போன்ற விடயங்களை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து கற்பதை குறிப்பிடலாம்.

2. அரசியல் வாதிகளும் அரசறிவியலாளர்களும்.

அரசியல் அதிகாரத்தினை மையமாக கொண்டு செயற்படுபவர் அரசியல் வாதியாவார்.

(உ - ம்) : மக்களிடமிருந்து வாக்குரிமை என்ற அதிகாரத்தை பெற்று அரசாங்கத்தை ஆளுகின்ற ஜனாதிபதி, பிரதம மந்திரி, பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் என்பவர்களைக் குறிக்கும்.

நடைமுறை அரசியலில் பங்குபற்றுபவனையும் ஆர்வமுடையவனையும் அரசியல் விவகாரங்களிலும் அரசாங்கத்திலும் செயல்பாட்டு தன்மை பொருந்திய மனிதனையுமே அரசியல்வாதி என்று அழைக்கலாம்.

அரசு, அரசாங்கம், பாராளுமன்றம், நீதிமன்றங்கள், உள்ளூராட்சி மன்றம், அரசியல் கட்சிகள் போன்ற நிறுவனங்களையும் அரசியல் கொள்கைகளையும் சர்வதேச அரசியலையும் கற்பதில் ஆர்வமுடையோரும் பாண்டித்தியம் பெற்றவருமே அரசறிவியலாளர்கள் என கருதப்படுவர்.

அரசறிவியலாளன் அரசியல் வாதியிலிருந்து முழுமையாக வேறுபடுகின்றான். ஓர் அரசியல் வாதி அரசறிவியலாளராக இருக்க தேவையில்லை. ஆனால், ஒரு அரசறிவியலாளன் அரசியல்வாதியாக மாறலாம்.

(உ - ம்) : இலங்கையில் பேராசிரியர் விஷ்வ வர்ணபால,பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அமெரிக்காவில் வூட்ரோ வில்சன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

3. அதிகாரப் பிரயோகம், அதிகாரம் பற்றிய கற்கை

அதிகாரப் பிரயோகம் அரசியலை குறிக்கின்றது. அதிகாரம் பற்றிய கற்கை அரசறிவியலை குறிக்கின்றது. தற்காலத்தில் அரசியல் என்பது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முரண்பட்ட குழுக்களுக்கிடையில் நிலவும் அதிகாரப் போராட்டமும் அதனோடு இணைந்த பிரயோகச் செயன்முறை என்றும் பொருள்படுகின்றது. இதனால் தான் ''சகல அரசியலும் அதிகாரத்துக்கான போராட்டமேயன்றி வேறொன்றுமில்லை'' என்று H.J. Morgentha குறிப்பிடுகின்றார். தேசிய அரசியலில் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடும் பிரதான செயற்பாட்டாளர்கள் அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளுமாகும். இதேபோல சர்வதேச அரசியலில் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடும் செயற்பாட்டாளர்கள் சுதந்திரமான இறைமை பொருந்திய அரசுகளாகும்.

அரசறிவியல் என்பது அதிகாரத்தைப் பற்றிக் கற்கும் ஒரு கற்கைத் துறையாகும். அதிகாரத்தை யார், எப்போது, எவ்வாறு, எவ்வளவு பெறுகின்றனர் என்பதைக் கற்கின்றது. இக்கற்கையானது மக்கியாவல்லியினால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தோமஸ் ஹொப்ஸ், ஜீன் போடின், H.D. லாஸ்வெல், C.E. மெரியம், மக்ஸ்வெபர், பேட்டன் ரசல், வட்கின்ஸ், றொபின், ஹெகல், ஜோன் ஒஸ்றீன் போன்றோர்களால் முன்னெடுக்கப்பட்டது. தனிநபர்களுக்கிடையே எழுகின்ற போட்டிக்கு அதிகாரமே அடிப்படைக் காரணமென தோமஸ் ஹொப்ஸ் குறிப்பிடுகின்றார்.

4. மோதல் மற்றும் மோதல் தீர்வு

அரசியலில் மோதலானது குறிப்பிட்ட மட்டத்திலும், பெரிய மட்டத்திலும், உள்நாட்டு மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் ஏற்படலாம். அரசியலில் இதனைத் தவிர்க்க முடியாது.

(உ - ம்) :	முதலாம் உலகப் போர் (சர்வதேசம்)	:	1914 – 1918
	இரண்டாம் உலகப் போர் (சர்வதேசம்)	:	1939 – 1945
	ஸ்பானிய உள்நாட்டுப் போர்	:	1936 – 1939
	கொரியாப் போர்	:	1950
	வியாட்நாம் போர்	:	1966 – 1968
	இந்திய பாகிஸ்தான் போர்	:	1971
	ஈரான் ஈராக் போர்	:	1986 – 1987
	அரபு இஸ்ரேலியப் போர்		
	வளைகுடாப் போர்	:	1991
	சீன இந்தியப் போர்	:	1962
	இலங்கையின் உள்நாட்டுப் போர் (LTTE, அரசு)	:	1983 - 2009

மோதல்களை அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் கொள்கை உருவாக்கம், அணுகுண்டுப் பிரயோகம், இராணுவ நடவடிக்கைகள், ஆகாய விமானத் தாக்குதல், தரைமார்க்கத் தாக்குதல், மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை, சட்டவாக்கம் என்பற்றின் மூலம் மோதல்களை தீர்த்து வைக்க முயற்சி எடுக்கின்றனர்.

அரசறிவியல் கற்கையில் மோதல் மற்றும் மோதலைத் தீர்த்தல் பற்றிய கற்கை 20ஆம் நூற்றாண்டின் ஒரு பிரதான விடயமாக இடம்பெறுகின்றது. மோதல்கள் எவ்வாறு ஏற்படுகின்றன, மோதல்களை உருவாக்கும் காரணிகள் யாவை என்பவற்றை ஆராய்ந்து அவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்யலாம் எவ்வாறு தீர்க்கலாம் என்ற விடயங்களை நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் ஆய்வாளர்களாலும் சிந்தனையாளர்களாலும் ஆராயப்படுகின்றன. இது தொடர்பான கோட்பாடுகளையும் எண்ணக் கருக்களையும் அவர்கள் கட்டியெழுப்புகின்றனர்.

(உ - ம்) :
- மோதல் முக்கோணி
- மோதல் உருமாற்றம்
- மோதல் தடுப்பு
- மத்தியஸ்தம்
- சமாதானம்

மார்க்ஸியக் கோட்பாடு
ஒப்பீட்டு இழப்புக் கோட்பாடு
அடிப்படைத் தேவைக் கோட்பாடு
குழு மோதல் கோட்பாடு
சமூக பரிமாற்றக் கோட்பாடு
நவீனத்துவக் கோட்பாடு

5. சர்வதேச அரசியல்

அரசுகள் தமது முரண்பட்ட தேசிய நலன்களையும் வெளிவாரியான நோக்கங்க ளையும் அடைய முற்படும்போது அவ்வரசுகளுக்கிடையில் இடம்பெறும் இடைவினைகள் சர்வதேச அரசியல் என்று அழைக்கப்படும். தேசிய அரசியலைப் போன்றே சர்வதேச அரசியலும் அதிகாரத்துக்கான போராட்டமே ஆகும். போரட்டத்தில் பிரதான செயற்பாட்டாளர் சுதந்திரமான இறைமை அரசுகளாகும். அதிகாரப் போராட்டம் என்பது சர்வதேச அரங்கில் நிலையான ஒன்றல்ல. சில நிகழ்ச்சிகள் உலக அரங்கில் தவிர்க்கப்பட்டால் சர்வதேச அரங்கில் அதிகாரப்போராட்டம் மறைந்துவிடும். சர்வதேச முரண்பாடுகளால் குடியேற்ற நாடுகளுக்கான போட்டி ஏற்பட்டு அதிகாரப் போராட்டம் நடைபெறுகின்றது.

20ம் நூற்றாண்டில் அரசறிவியலின் ஒரு பிரதான துறையாக சர்வதேச அரசியல் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு சர்வதேச அரசியலில் அரசுகளின் செயற்பாடுகளும் அவை இடம்பெறும் விதமும் பரிசீலிக்கப்படுகின்றன. இப் பரிசீலனையில் இராஜதந்திரம், ஊடுருவல் மற்றும் தலையிடுதல், பிரச்சாரம், பொருளாதார அதிகாரம் போன்ற பல விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

சர்வதேச அரசியலில் அரசுகளின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்ற வகையில் கூட்டுப்பாதுகாப்பு, அதிகாரச் சமநிலை, சர்வதேச சட்டம், ஆயுதக் களைவு, ஆயுதப் பரிகரணம், ஆயுதக் கட்டுப்பாடு, உலக அரசாங்கம் போன்ற கோட்பாடுகளும் சர்வதேச உறவுகளுக்கான சாதனங்களான தூதுவர் சேவை, வர்த்தகம், யுத்தம், வெளிநாட்டு உதவி, அன்பளிப்பு, சமாதானமும் அபிவிருத்தியும் போன்ற கோட்பாடுகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) சமூக ஜனநாயகத்தின் பிரதான அடிப்படைகள்

சமூக ஜனநாயக வாதம் என்பது தாராண்மை வாதம், மாக்ஷிய வாதம் ஆகிய கருத்தியல்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளாது அக் கருத்தியல்களில் காணப்படும் சில அம்சங்களை இணைத்துக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இதனால் இக்கருத்தியலை முதலாளித்துவம், மாக்ஷிஸத்தினதும் கலப்பொன்றாகும் என அழைக்கப்படுகின்றது.

இக்கருத்தியலின் முன்னோடியான எட்வர்ட் பேன்ஸ்டைன் ஆரம்பத்தில் மாக்ஷிஸ வாதியாக காணப்பட்ட போதிலும் தொழிலாளர்களின் கட்டாய புரட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக தொழிலாளர்களின் நலன்களை சமவுடைமை வாதத்தின் மூலம் அடைந்து கொள்ள வேண்டுமாயின் அரசின் நலன்புரி சேவை அவசியம் என வாதிட்டார். இப்பின்னணியை அடிப்படையாக வைத்தே சமூக ஜனநாயக வாத கருத்தியலை முன்வைத்தார்.

சமூக ஜனநாயக வாதத்திற்கு எடுத்துக் காட்டான நாடுகள் இலங்கை, இந்தியா, பங்களாதேசம், தன்சானியா, கானா போன்ற நாடுகளை குறிப்பிடலாம். அரசியல் கருத்தியல் என்ற வகையில் சமூக ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. முதலாளித்துவ பொருளாதார முறைமையினால் உருவாக்கப்பட்ட வறுமை, அநீதிகளுக்கு முதலாளித்துவ முறையில் தீர்வு இன்மையால் அதனை நிராகரித்தல்.
02. முதலாளித்துவத்திற்கு மாற்றீடாக உருவாக்கப்பட்ட சமவுடமை வாதம் முதலாளித்துவ முறையில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியிருப்பினும் புரட்சியின் மூலம் அதனை உருவாக்குதல் நடைமுறைக்கு அப்பாற்பட்டது.
03. முதலாளித்துவத்தை சமவுடைமை வாத அடிப்படைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்பு செய்யும் போது கொள்கை ரீதியான மாற்றங்களின் அடிப்படையில் சமூக ஜனநாயக வாதம் முன்வைக்கும் சிந்தனைகள் பின்வருமாறு,

- **பொருளாதார துறையில் அரச தலையீடு :**
  சந்தைப் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடக் கூடாது எனும் தாராண்மைவாத முதலாளித்துவ அடிப்படையில் வேறுபடுகின்றது. பொருளாதார போக்கினை நிருவகித்தல் மற்றும் வழி நடாத்தக்கூடியதாக அரச தலையீடு அவசியம் என குறிப்பிடப்படுகின்றது. இதனால் தனியார் துறையின் செல்வாக்கு நீக்கப்பட்டு வறுமை, சமூக அநீதி என்பவற்றுக்கு தீர்வு காணக் கூடியதாக உள்ளது.

- **கலப்புப் பொருளாதாரம் :**
  பொருளாதார செயற்பாடுகளில் முதலாளித்துவ மற்றும் சமவுடைமைவாத பொருளாதார அடிப்படைப் பண்புகள், கொள்கைகள் இரண்டையும் ஒன்றிணைத்தே கொண்டு செல்லப்படும் பொருளாதார முறையாகும். பொருளாதார முறையில் சுதந்திரமாக தனியார் துறையினர் ஈடுபடும் அதேவேளை பொருட்களின் விலை நிர்ணயத்தை அரசின் மத்திய திட்டமிடல் குழு மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். சீனாவின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு கலப்பு பொருளாதாரம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

- **சமூக நலன்புரி, காப்புறுதி பணிகளில் அரசு ஈடுபடல் :**
  முதலாளித்துவ தாராண்மை வாத பொருளாதார முறைமையில் தனியார் துறையினர் இலாப நோக்கின் அடிப்படையில் செயற்படுவதனால் அங்கு சமூக நலன்புரிச் சேவைகள் இடம் பெறுவதில்லை. அதனை சமூக ஜனநாயக வாதம் முழுமையாக நிராகரிப்பதோடு சுதந்திர சந்தையானது அசமநிலை ஏற்படுத்துவதால் அதற்கான தீர்வாக பொருளாதார மற்றும் சமூகத்துறைகளில் அரசினர் நேரடித்தலையீட்டுடன் சமூக நலன்புரி சேவைகளை முன்மொழிந்தது.

- **செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்திற்கு மீள பகிர்ந்தளித்தல் :**
  முதலாளித்துவ முறைமையில் வருமானம் மற்றும் செல்வங்கள் அனைத்தும் ஒரு பிரிவினராகிய தனியார் துறையினரிடம் மாத்திரம் குவிவதை அவதானிக்கலாம். இதனால் சமூகத்தில்

வருமான சமமின்மை, ஏற்றத்தாழ்வு ஆகிய பாரிய சமூகப் பிரச்சினைகளை தோற்றுவித்தது. இதற்கு மாற்றமாக சமூக ஜனநாயக வாதம் செல்வந்தர்களாகிய தனியார் துறையிடம் காணப்படும் வருமானம் ஏனையவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் வருமான வரிகளை அறவிட்டு அதனை சமூக நலன்புரி செயற்பாடுகளுக்கு செலவளித்தல்.

- **கூட்டு பேரம் பேசுதல் :**

  சமூக ஜனநாயக இயக்கம் பிரதானமாக தொழிலாளர் வகுப்பினரின் நலனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கருத்தியலாகும். எனவே, தொழிலாளர் களின் சம்பளம், மற்றும் வாழ்க்கைத் தரத்தை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு அரசாங்க பிரதிநிதிகளுடன் விலை நிர்ணயம், சம்பளம் தொடர்பில் கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுவது பிரதான பண்பாகும்.

  இதைத்தவிர சொத்துரிமை, அரசுக்கும் தனியார்களுக்கும் இருத்தல், மக்களின் அடிப்படை உரிமை மட்டுப்படுத்தப்பட்டிருத்தல், மக்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு காணப்படல், தனியார் துறை கவனம் செலுத்தாத அல்லது குறைவாக கவனம் செலுத்தும் துறைகளில் அரசு கவனம் செலுத்தல்.

  (உ - ம்) : **இலங்கையில் :**

  புகையிரதசேவை, துறைமுக கப்பல் சேவை, பொதுப்பாதுகாப்பு

  இந்தியாவில் :

  புகையிரத சேவை, கப்பல் சேவை, துறைமுக சேவை, புகையிரத சேவை என்பன அடங்கும்.

  தன்சானியாவில் :

  புகையிரத சேவை, கல்விச் சேவை என்பவனவாகும்.

(இ) தற்கால உலகில் அரசின் பணிகள்

1. சட்டத்தினதும், சமூகத்தினதும், சொத்துக்களினதும் பாதுகாவலன்.
   - *a)* கண்காணித்தல் மூலம் சமூக அமைதியை நிலை நாட்டல் :-
     இதற்காக ஆயுதப்படை, பொலிஸ், சிறைச்சாலைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இந்த பணியை அரசு மேற்கொள்கின்றது.
   - *b)* நீதியை நிலைநாட்டுல், நீதிமன்ற நிருவாகம் மற்றும் தண்டனை வழங்குதல் :-
     நீதிமன்றங்கள், சட்டதிட்டங்கள், சிறைச்சாலைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இந்தப் பணியைச் செய்கின்றது. எந்த அரசிலும் சட்டங்களை மீறுபவர்கள் இருப்பார்கள். அவ்வாறு மீறுபவர்களைத் தண்டிக்கவும், நீதியை நிலைநாட்டவும் அரசு செயற்படுதல் வேண்டும்.
   - *c)* சட்ட உருவாக்கம் மற்றும் சட்டங்களை வரைவிலக்கணப்படுத்தல் :-
     இதற்காக பாராளுமன்றம், சட்ட மன்றம், மாகாண சபை என்பவற்றைப் பயன்படுத்துகின்றது.

d) கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை அமுலாக்கம் :-
கொள்கை உருவாக்க விடயத்தில் அரசுக்கு அமைச்சரவை, ஜனாதிபதி என்போர் உதவி நல்கின்றனர். கொள்கை அமுலாக்கல் விடயத்தில் பணிக்குழு பணியாற்றுகின்றது.

2. பொருளாதார நிருவாகம் மற்றும் வழிநடத்தல்.
   a) வரிச்சட்டங்களைக் கொண்டுவருதல் மற்றும் வரிகளை வசூலித்தல்.
   b) நாட்டின் பொருளாதார முறையினை நிர்ணயித்தலும் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குதலும்.

3. நிறுவனங்களை நிலைநிறுத்தல் :
குடும்பம் முதலான நிறுவனங்களை நிலைநிறுத்தி சொத்துரிமை, திருமணம், திருமண விலக்கு, வாரிசு முதலானவை குறித்து சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்தங்களையும் அது ஒழுங்குபடுத்த வேண்டும்.

4. போக்குவரத்து செய்தித் தொடர்பு :
போதுமான போக்குவரத்து செய்தித் தொடர்புகளை அரசு அளித்திட வேண்டும். திறமையான அஞ்சல் துறை, ரயில்வே கடவைகள் அமைத்து நிருவகித்தலும் அரசின் கடமைகளாகும்.

5. சர்வதேச உறவுகள் :
அயல் நாடுகளுடன் அரசு தந்திர உறவுகளை வைத்துக் கொள்ளுதல் மற்றொரு முதன்மையான பணியாகும். போரைத் தடுக்கும் வகையில் அண்டை அரசுகளுடன் நட்புடன் கூடிய நல்லுறவுகளை வளர்த்திட வேண்டும்.

6. ஒழுங்குபடுத்தும் பணிகள் :
தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் ஊதிய விகிதங்களை நிர்ணயித்தல் முதலியன இதில் அடங்கும். ரஷ்யா, சீனா, பல்கேரியா, ரூமேனியா, கங்கேரி முதலிய நாடுகளில் தொழில் தேர்ச்சி ஆகியவற்றில் அரசின் கட்டுப்பாடு மிகுந்துள்ளது. விலைவாசிக் கட்டுப்பாடு கலப்படப் பண்டங்களை விற்று மக்களின் நலனைப் பாதிக்கும் செயலைத் தடுப்பதும் அரசின் பணியே.

7. சமூக நிர்வாகத்தை நிர்ணயித்தல், வழிநடத்தல் மற்றும் சமூக கண்காணிப்பை மேற்கொள்ளுதல் வருமானங்கள் பகிர்ந்தளிக்கப்படும் விதத்தினை தீர்மானித்தல் மற்றும் நிருவகித்தல், பொருளாதார மற்றும் வர்த்தகத்துறைகளின் தரங்களை நிர்ணயித்தல், சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரிச் செயற்பாடுகள், வறுமை ஒழிப்புக் கொள்கைகள், முதியோர் ஓய்வூதியத் திட்டம், வீடு சுகாதாரம், போக்குவரத்து போன்ற சமூகத் துறைகளின் கொள்கைகளை தீர்மானித்தல் என்பவற்றை அரசு மேற்கொள்ளுகின்றது.

8. சமூகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலை நாட்டுதல் :-
அரசின் ஆள்புல எல்லைக்குள் சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டல், அரசின் இறைமை அதிகாரத்திற்கு பிரசைகளை அடிபணிய வைத்தல், அரசின் இறைமையைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்பிலிருந்து மக்களையும் நாட்டையும் பாதுகாத்தல், இதற்காக அரசு சட்டதிட்டங்கள், நிறுவனங்கள், பாராளுமன்றம், நீதிமன்றங்கள், பணியகவமைப்பு, ஆயுதப்படை,

பொலிஸ், அதிகாரவர்க்கம், சிறைச்சாலை போன்ற அதிகாரமிக்க தாபனங்களைப் பயன்படுத்துகின்றது. இதற்குரிய அதிகாரம் அரசுக்கு உண்டு.

9. யுத்தப் பிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல் :-
பொதுவாக அரசுக்கு மட்டுமே உரிய விசேட பணியாக இது கருதப்படுகின்றது. அரசொன்று அரசுக்குள்ளேயும் அரசுக்கு வெளியிலும் யுத்தத்தில் பங்குபற்றுகின்றது. உள்ளக யுத்தம் அரசின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் ஆள்புல எல்லையினுள் ஏற்படும் அச்சுறுத்தலை தடுப்பதற்கும் அவசியமாகின்றது.

(ஈ) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் நிறை குறைகள்

01. உறுதியான அரசாங்கம் :

ஜனாதிபதி முறை உறுதியான அரசாங்க முறையாகும் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. காரணம் அங்கு பலமிக்க நிறைவேற்றுத்துறை உருவாகுவதாகும். நிறைவேற்றுத்துறை சட்டத்துறையின் நேரடியக் கட்டுப்பாட்டுக்கு உட்படாது இருப்பதுடன் ஜனாதிபதிக்கெதிரான குற்றப் பிரேரணையின் மூலமே அவரைப் பதவியிலிருந்து அகற்றலாம். ஆனால் இம்முறை எளிதானதன்று.

02. நிறைவேற்றுத் துறையின் செயல்திறன் :

நிறைவேற்றுத் துறையானது செயல்திறன் மிக்கதாக இருத்தல் இவ்வரசாங்க முறையின் பிறிதொரு நிறைவாகும். நிறைவேற்று அதிகாரம் ஒரு தனிநபரிடம் காணப்படுதல். அவ்வதிகாரத்தை சட்டத்துறையின் கட்டுப்பாட்டிருந்தும் விடுபட்டு நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருத்தல். ஆகிய இரு காரணிகளும் இச் செயல்திறன் கூடிக் காணப்படுவதற்கு ஊன்று கோலாக அமைகிறது.

03. பல கட்சி முறைக்கு பொருந்தும் முறை :

பல கட்சி முறை நிலவும் நாடுகளுக்கு ஜனாதிபதி முறை சாலவும் பொருந்தும். காரணம் பல கட்சி முறையின் விளைவாக உருவாகும். அரசாங்கத்தின் உறுதியற்ற நிலையையும் அதன் மூலம் உருவாகும் அரசியல் உறுதியற்ற தன்மையையும் தவிர்க்க கூடியதாக இருத்தலாகும்.

04. நெருக்கடி நிலைகளை எதிர்கொள்ளும் வாய்ப்பு :

அவசர நிலைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கக்கூடிய திறன் ஜனாதிபதி முறைக்கு உண்டு. காரணம் தனிநபர் நிர்வாக முறையினால் அவசரமாகவும் எளிதாகவும் தீர்மானங்களை எடுப்பதற்கும் நடைமுறைப் படுத்துவதற்குமான வாய்ப்பு காணப்படுதலாகும்.

05. அரசியல் கட்சி முறைக்கு முக்கிய இடமின்மை :

ஜனாதிபதி முறைமையில் அரசியல் கட்சி முறைமையில் செயற்பாட்டுக்கு முக்கிய இடம் கிடைக்காமை பிறிதொரு நன்மையாகும். இம் முறையின் செயற்றிறனைக் கூட்டுவதற்கு கட்சி முறை ஆதாரமாக அமையினும் அரசியல் கட்சிகள் இன்றியும் ஜனாதிபதி முறையினை நடைமுறைப்படுத்த முடியும். இதனால் ஏற்படும் பிறிதொரு நாட்டின் அரசியல் சூழ்நிலை பதட்டமின்றி அமைதியானதாக இருக்கும்.

01. ஜனநாயகத் தன்மை குறைவாகக் காணப்படுதல் :

மந்திரிசபை முறையோடு ஒப்பிடும் போது ஜனாதிபதி முறை ஜனநாயகத் தன்மை குறைந்ததாகும். இது பதவியின் உறுதித்தன்மை, பொறுப்பில் இருந்து விடுபட முடிதல், சட்டத்துறையின் நேரடி கட்டுப்பாட்டுக்கு உட்படாமை, பதவிக்குரிய அதிக அதிகாரங்கள் என்பன இதன் மீது பாதிப்புச் செலுத்துகின்றன.

02. சட்டத்துறைக்கும், நிறைவேற்றுத் துறைக்குமிடையில் மோதல் ஏற்படுதல் :

ஜனாதிபதி முறையில் சட்டத்துறைக்கும், நிறைவேற்றுத் துறைக்குமிடையில் மோதல் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகளவு காணப்படுகின்றது. இது தொடர்பாக ஒரு புறம் சட்டத் துறையையும் நிறைவேற்றுத் துறையையும் தொடர்புபடுத்தும் நேரடி இணைப்பாளர் காணப்பாடாமையும் மறுபுறம் கட்சி அடிப்படையில் நிறைவேற்றுத் துறை ஒரு கட்சியைச் சேர்ந்ததாகவும் சட்டத்துறை பிறிதொரு கட்சியைச் சார்ந்ததாகவும் ஆட்சி வரும் போது ஏற்படும் பொருந்தாத நிலை முழு அரசாங்க முறையினதும் செயற்பாடு குன்றும் நிலை ஏற்படும்.

03. அரசியல் கட்சிகளின் செயற்பாடு பலவீனமடைதல் :

ஒரு புறம் இது சாதகமான நிலையாயினும் மறுபுறம் இது பாதகமான நிலையாகவும் காணப்படும். அரசியல் கட்சிகளின் செயற்பாடு பலவீனமடையும் போது சமூகத்தில் பல தன்மை வாய்ந்த நலன்கள் கீழ்ப்படுத்தப்படும்.

04. சட்டத்துறையின் நிலை பலவீனமடைதல் :

இதற்குக் காரணம் சட்டத்துறையைக் கவனத்திற் கொள்ளாது செயற்படு வதற்கான வாய்ப்பு நிறைவேற்றுத் துறைக்கு இருத்தல் ஜனாதிபதித்துவ முறையில் காணப்படுவதாகும்.

பகுதி II

04. இலங்கையில் 1833 - 1924 காலப்பகுதியில் காலனித்துவ பரிமாற்றத்தின் மூலம் ஏற்பட்ட பொருளாதார, சமூக, அரசியல் விளைவுகளைக் குறிப்பிடுக?

இலங்கை 1505 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டுவரை மேலைத்தேய காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்தது. முதலில் போர்த்துகீசரும், இரண்டாவதாக ஒல்லாந்தரும், மூன்றாவதாக ஆங்கிலேயரும் இதனை உட்படுத்திக்கொண்டனர். இவ்வினங்களில் ஆங்கிலேயரே இலங்கை மீது வன்மையான அழுத்தங்களை பிரயோகித்தவர்களாவர். இவர்கள் 1796 தொடக்கம் 1815ஆம் ஆண்டுவரை இலங்கையின் கரையோர மாகாணங்களை ஆட்சி செய்தனர். 1815 முதல் முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். அன்றிலிருந்து பிரித்தானியர் என்ற காலனித்துவவாதிகளால் (Colonizer) அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகள் இலங்கை சமூகத்தின் மீது நீண்டகாலம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

இலங்கையில் 1833 - 1924 காலப்பகுதியில் காலனித்துவ பரிமாற்றத்தின் மூலம் ஏற்பட்ட பொருளாதார சமூக, அரசியல் விளைவுகளை நோக்குகின்றபோது பின்வருமாறு விளங்கிக்கொள்ள முடியும்.

பொருளாதார விளைவுகள்

01. நாட்டில் நிலவிய மானிய முறை பொருளாதாரம் இல்லாதொழிக்கப்பட்டமை:

இதன் விளைவாக நிலத்தோடு கட்டுண்டிருந்த உழைப்பு சுயாதீனமாக்கப்பட்டது. அதனோடு இணைந்த சாதி முறையும் பலவீனமடைந்தது. ஊழியமானது சுதந்திரமாக அடையத் தொடங்கியது. சுதந்திரமான ஊழியச் சந்தை உருவாகியது. மானிய முறையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுவதற்கான அடித்தளம் இடப்பட்டது.

02. கட்டாய இராஜகாரிய முறை இல்லாதொழிக்கப்பட்டமை :

இதன் விளைவாக திறந்த சந்தை முறையையும், நிலச் சந்தையையும் சுதந்திரமான ஊழியச் சந்தையையும் உருவாக்குவதற்கு காரணமாக இருந்தமை.

03. வர்த்தக ஏகபோக உரிமையினை நீக்கப்பட்டமை :

இதன் விளைவாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை வந்து சுதந்திரமான முறையில் முதலீடு செய்வதற்கான கதவு திறந்து விடப்பட்டது. அத்தோடு தனியார் துறையினரும் வளர்ச்சியடைந்தனர். மேலும் ஏலம், கறுவா மற்றும் உப்பு வர்த்தகத்தில் அரசன் ஏகபோக உரிமை நீக்கப்பட்டது. இதன் மூலம் சுதந்திரமான வர்த்தகப் போட்டி உருவானது.

04. தனியார் துறையினரின் முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டமை.

05. அரச காணி விற்பனைக் கொள்கையை செயற்படுத்தியமை :

இதன் மூலம் உள்நாட்டினரும் வெளிநாட்டினரும் தமக்குத் தேவையான நிலத்தை விலை கொடுத்து வாங்க முடிந்தது.

06. தரிசு நிலச் சட்டம் கொண்டு வரப்பட்டமை :

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிலத்தைத் தடையின்றிப் பெற்றுக் கொள்வதற்காக ஸ்ருவார்ட் மக்கன்ஸி ஆளுநரால் 1840ல் தரிசு நிலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்தால் மக்கள் காணிகளையும் மந்தை மேய்க்கும் நிலத்தையும் இழந்தனர்.

07. அரசின் நேர்வரி முறைகளை மாற்றியமைத்தமை :

- **மீன்வரி :** மீனாக வரியைப் பெறாது மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவது மூலம் அறவிடல்.
- **காணிவரி :** காணியில் விளைந்த பயிர்களின் ஒரு பகுதியை வரியாகப் பெறுவதற்குப் பதிலாக பணமாக அறவிடல்.

08. சேமிப்பு வங்கியினை ஆரம்பித்தமை :

பெருந்தோட்டத் துறையில் முதலீடு செய்யும் முயற்சியாளர்கள் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அமைக்கப்பட்டது.

09. அரசின் புதிய வரிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டமை :

1. ஆளுநர் ரொறிங்டனால் 1848ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட புதிய வரிகள் போராட்டத்திற்கு உடனடிக் காரணமாய் அமைந்தது.
2. கோப்பி விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட வருமானக் குறைவை ஈடுசெய்ய புதிய வரிச்சீர்திருத்தங்களை ஆளுநர் மேற்கொண்டார்.
3. முத்திரை வரி, வண்டிவரி, படகுவரி, கடைவரி, துப்பாக்கி வரி, நாய்வரி, ஆள்வரி எனப் பல வரிகள் விதிக்கப்பட்டன.
4. இவற்றுள் துப்பாக்கி, நாய், ஆள் வரிகளுக்கு கடும் எதிர்ப்பு உருவாகியது,
   - பயிர்ச் செய்கையை மிருகங்களிடமிருந்து பாதுகாக்கத் துப்பாக்கி அவசியமாகவிருந்தது.
   - கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் நாய் வளர்க்கப்பட்டது.
   - வயது வந்த ஆண்கள் அனைவரும் வருடத்தில் 6 நாட்கள் பாதைகள் வெட்டும் பணியில் ஈடுபட வேண்டும் அல்லாவிடின் 3 சிலிவ் வரியாகச் செலுத்த வேண்டி இருந்தது. இவை மிகவும் பொருத்தபாடற்ற வரியாக இருந்தது.

10. தரிசு நிலச் சட்டம், முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டங்களின் மூலம் முதலில் கோப்பிப் பயிர்ச் செய்கைக்கும் இரண்டாவதாக தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பயிர்ச்செய்கைக்குமான ஒரு நிலச் சந்தை அரசின் தலையீட்டோடு உருவாக்கப் பட்டதுடன் பயிர்ச்செய்கையில் கைத்தொழில் நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டது.

11. குடியேற்றவாத அரசு நுகர்வு, பொறிமுறையாக்கம், கீழ் கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் என்பவற்றின் மூலமும் பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை ஊக்குவித்தனர் என்னும் உள்நாட்டவர்கள் தொடர்ந்தும் தமக்குப் பழக்கப்பட்ட மரபுசார் விவசாயத்திலேயே ஈடுபட்டனர்.

12. நாட்டில் சுய தேவைப் பூர்த்திப் பொருளாதாரம், சந்தை முறைப் பொருளாதாரம் என்ற இரட்டை பொருளாதாரம் உருவாகியமை.

13. இலங்கை பொருட்கள் உற்பத்தியாளர் என்ற வகையில் உலக முதலாளித்துவப் பொருளாதார முறைமையுடன் இணைந்தமை.

14. அரசு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான கீழ் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தமை. (உ - ம்) : பெருந்தெருக்கள், புகையிரதப் பாதை, பூங்காக்கள், வைத்தியசாலைகள்

15. பாரிய விவசாய வர்த்தக பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு சந்தை உருவாகியமை.

16. இலங்கையர்களும் முதலாளித்துவ பொருளாதார முறையுடன் தொடர்புபட்ட கரைநாட்டுச் சிங்களவர்கள், மது மற்றும் கள் இறக்குதல், சிறுகடை வர்த்தக சேவை போன்ற புதிய பொருளாதார வாய்ப்புக்களைப் பயன்படுத்தி குறிப்பிடத் தக்களவு முதலை சேமித்துக் கொண்டனர்.

17. உள்ளூர் நெல், விவசாய செய்முறை வீழ்ச்சி கண்டமை.

18. உள்ளூர் கைத்தொழில்கள் வீழ்ச்சி கண்டமை.

19. பெருந்தோட்டத்துறையோடு இணைந்த துறைகளான வங்கித்துறை, போக்குவரத்துத் துறை போன்றவற்றில் முதலீடுகள் அதிகரிக்கவும் அத்துறை வளர்ச்சியடையவும் வழிவகுத்தது.

சமூக, கலாச்சார விளைவுகள்

- இராஜகாரிய முறையின் ஒழிப்பு, சுதந்திரமான ஊழியச் சந்தையை உருவாக்கியமை, குழுவாதத்துக்குப் பதிலாக தனிமனித வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சட்ட முறைத் தொடர்புகள் உருவாகியமை. ஆங்கிலக் கல்வி போன்ற சமூக, கலாசார மாற்றங்களுக்குக் காலாய் அமைந்தன.

01. ஒரு புதிய சமூக வர்க்கம் தோன்றியமை :
- கோல்புறூக் - கமரன் குழு சிபார்சு செய்த முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக இலங்கையில் ஒரு தேசிய முதலாளித்துவ வர்க்கம் தோற்றம் பெற்றது.
- ஆங்கிலக் கல்வியும் சிவில் சேவையும் இதனை மேலும் பலப்படுத்தின.

02. கூலி பெறும் ஊழியச் சமூகம் தோற்றம் பெற்றமை :
- இராஜகாரிய முறையின் ஒழிப்பு, பணப் புழக்கம், பொருளாதார முறையின் அறிமுகம், சுதந்திரமான ஊழியச் சந்தையின் அறிமுகம், நிலத்தோடு கட்டுண்டிருந்த ஊழியமுறை இல்லாதொழிக்கப் பட்டமை. கூலி முறையின் அறிமுகம் போன்ற காரணங்களால் முதலாளித்துவ முறையின் பிறிதொரு அங்கமான கூலி பெறும் ஒரு தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெற்றது.

03. மானிய முறைச் சமூகம் நவீன முதலாளித்துவச் சமூகமாக மாறியமை :
- ஆங்கிலக் கல்வியின் அறிமுகத்தோடு இணைந்த ஏனைய சமூக, கலாசார சீர்திருத்தங்களின் விளைவாக நீண்டகாலமாக நிலை பெற்றிருந்த மானிய பண்புகள் படிப்படியாக மறைவுற்று நவீன சமூக முறை பரிணாமித்தது. இதன் விளைவாக இலங்கையில் ஒரு நவீன சிவில் சமூகம் தோன்றியது.

04. மேலைத்தேய சமய, கலாசார நடைமுறைகளும் பழக்க வழக்கங்களும் பரவலடைந்தமை
- ஆங்கில மொழி மூலமான மேலைத்தேயக் கல்வி, அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளில் வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அப்பாடசாலைகள் மூலம் மேலைத்தேய கலாசாரம் பரவியது.
- உயர் கல்விக்காக வெளிநாடு சென்று வந்தவர்களாலும் மேலைத்தேய கலாசாரத்தின் சில அம்சங்கள் இலங்கையில் பரவின.
- பெருந்தோட்டத்துறை வளர்ச்சி காரணமாக அதிகளவில் ஐரோப்பியர் இலங்கை வருகை தந்தனர். அவர்களின் விடுமுறை கால விடுதிகள், இரவு களியாட்ட விடுதிகள் காரணமாகவும் மேலைத்தேய கலாசாரம் பரவியது.

இலங்கையின் கலாச்சாரத்துடன் கலந்து கொண்ட மேலைத்தேய கலாசார அம்சங்கள்.
- மேலைத்தேய ஆடையணிகள்
- பழக்க வழக்கங்கள்.
- வாழ்த்து வணக்கம் தெரிவிக்கும் முறைகள்.
- கட்டட கலையம்சங்கள்.
- உணவுபான வகைகள்.

05. மதுபானக் கடைகள் மலைநாட்டில் திறக்கப்பட்டமை :

- பெருந்தோட்டச் செய்கைகளுக்காக வெளிநாட்டவர் வரவு அதிகரித்தமை, மதுபானக் கடைகள் திறக்கப்பட்டமை இவற்றால் தமது கலாசாரம் சீர் குலைவதைக் கண்டி மக்கள் விரும்பவில்லை.

06. ஒரு மூலமுன்மாதிரி சிவில் சமூகம் (Prototype Civil Society) உருவாகியமை.

- மேற்கத்திய கல்வி போன்ற சீர்திருத்தங்களுக்கு உட்படாத தேசிய கல்வி முறைக்குட்பட்ட ஒரு சமூகப் பிரிவினர் உருவாகியதோடு அவர்கள் மரபுசார் பண்புகளையும் நம்பிக்கைகளையும் கொண்ட ஒரு முன்மாதிரிச் சமூகத்தை ஒழுங்கமைத்துக் கொண்டனர். அதன் விளைவாகப் பிரதேச வாதம், இனம், சமயம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக சமய இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

  (உ - ம்) :

  இலங்கையர் சங்கம் - 1865

  சமய மறுமலர்ச்சி இயக்கம்

  மது ஒழிப்பு இயக்கம்

  தாழ்நாட்டு உற்பத்தியாளர் சங்கம்

  இலங்கை தேசிய சங்கம்

  யாழ்ப்பாணச் சங்கம்

  சிலாபச் சங்கம்

  இளம் இலங்கையர் சங்கம்

  இலங்கை சீர்திருத்தச் சங்கம்

  இலங்கை தேசிய காங்கிறஸ்

07. இலங்கை சமூகத்தோடு ஒரு புதிய இனச் சமூகம் இணைந்தமை :

- பெருந்தோட்ட பயிர்ச் செய்கை, வர்த்தகப் பொருளாதாரம் போன்றவற்றுக்குத் தேவையான ஊழியம் உள்நாட்டிலிருந்து போதியளவு கிடைக்கப் பெறாமையால் பிரித்தானியர் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் ஊழியர்களை இறக்குமதி செய்தனர். அவர்கள் இலங்கைச் சமூகத்தோடு ஒருங்கமையாத ஒரு பகுதியினராக இருந்தமையால் காலப்போக்கில் அது இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டு பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியது.

08. சாதி முறை தளர்வுற்றமை :

- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மற்றும் முதலாளித்துவ வர்த்தகம் போன்ற வற்றோடு இணைந்த சேவைகளில் ஈடுபட்டனர். மரபுசார் சிங்களச் சமூக பிரபுத்துவ வகுப்பைச் சாராத அடுத்தடுத்தக் கட்ட சாதியினரே ஈடுபட்டனர். இவர்கள் பிற்பட்ட காலத்தில் செல்வத்தைச் சேகரித்துக் கொண்டு பொருளாதார ரீதியாகப் பலம் பெற்றனர். இப்பலத்தின் காரணமாக சாதி முறையிலமைந்த சமூக முறையில் அசைவுகள் ஏற்பட்டு யாப்பின் கீழ் சாதி முறை தளர்வுக்குட்பட லாயிற்று.

- 1931 டொனமூர் யாப்பின்கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சர்வஜன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் போன்ற சீர்திருத்தங்களின் காரணமாக சாதாரண மக்களும் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பினை பெற்றதனால் சாதிமுறை மேலும் தளர்வடைந்தது.

09. தேசிய ரீதியிலான அறிவும் ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டமை.

10. கிராமத்தை அடித்தளமாகக் கொண்ட சமூகத் தொடர்புகள் வீழ்ச்சி கண்டமை.

11. கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் செயற்பட்டமை.

12. ஒரு ஜனநாயக சமூகம் உருவாகியமை :

- கோல்புருக் சீர்திருத்தங்களின் மூலம் சமூகப் பிரிவினர்களின் அசைவுகள் ஏற்பட்டு சமத்துவவாத சமூக விழுமியங்களை முதன்மை படுத்திய ஜனநாயக சமூகம் ஒன்று உருவாக்குவதற்குத் தேவையான பின்னணி உருவாகியமை.
- 1931 டொனமூர் சீர்திருத்தங்களான சர்வஜன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி என்பவற்றால் இது மேலும் துரிதமடைந்தது.

அரசியல் விளைவுகள்

01. கோல்புருக் - கமரன் சீர்திருத்தங்களின் மூலம் இலங்கையில் நிலவிய இரட்டை பரிபாலன முறை ஒழிக்கப்பட்டு, முழு நாட்டையும் ஒரு நீதி முறைக்கும், நிர்வாக முறைக்கும் உட்படுத்தி நாட்டின் நிர்வாக விவகாரங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டன.

02. குடியேற்றவாதச் சீர்திருத்தங்களின் மூலம் நாடு அரசியல் யாப்புறு ஆட்சி முறைக்குட்படுத்தப் பட்டதுடன் தேசாதிபதியின் தன்னிச்சையான ஆட்சியதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

03. கோல்புருக் சீர்திருத்தங்கள் தனிமனித அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய ஒரு கட்டமைப்பினை நிர்மாணிக்கத் தேவையான சட்ட மற்றும் அரசியல் தளத்தை இட்டு வைத்தது.அதன் மூலம் தேசாதிபதி பிரித்தானிய முடிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற சித்தாந்தத்தை முன்வைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

04. தேசாதிபதி தமது தற்துணிவின்படி கொண்டு நடத்திய ஆட்சி முறைக்குப் பதிலாக நிறைவேற்றுச் சபையின் அங்கீகாரத்துடன் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் மூலம் பொறுப்பாட்சிக்குட்படுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சியின் காரணமாக எதிர்காலத்தில் அரசியல் நிறைவேற்றுப் பகுதி உருவாகுவதற்குத் தேவையான வித்திடப்பட்டது.

05. தேசாதிபதிக்கிருந்த சட்டவாக்க அதிகாரத்தை கட்டுப்படுத்தி சட்ட நிரூபண சபையைத் தாபித்ததன் மூலம் எதிர்கால பாராளுமன்ற அரசாங்கத்துக்குத் தேவையான அடித்தளம் இடப்பட்டது. இந்த அடித்தளமே பிற்கால அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது.

06. சட்ட நிரூபண சபை தாபிக்கப்பட்டதன் மூலம் இலங்கைக்கு முதன்முறையாகப் பிரதிநிதித்துவம் பற்றிய சித்தாந்தம் அறிமுகம் செய்யப்பட்டது.

07. சட்டவாக்கம் செய்வதற்கு சட்ட நிரூபண சபை தாபிக்கப்பட்டதுடன் தேசாதிபதி அதன் செயற்பாடுகளில் தொடர்புபடுத்தப்படவில்லை. இதன் மூலம் பொறுப்பாட்சி முறை உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

08. கோல்புருக் - கமரன் சீர்திருத்ததின் பிறிதொரு அம்சம் நீதி முறைச் சீர்திருத்தமும் நிர்வாகம் ஒரு முகப்படுத்தப்பட்டமையுமாகும். முழு நாடும் ஒரு குற்றவியல் சட்டத்திற்குட்பட்டதுடன் பிரதேச சட்டமாக இருந்த கண்டியச் சட்டம் சிவில் விவகாரங்கள் தொடர்பான தனியார் சட்டமாக மாற்றப்பட்டது.

09. 16 நிர்வாக அலகுகளாக இருந்த இலங்கை 5 ஆகக் குறைக்கப்பட்டு கச்சேரி நிர்வாக முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் இலங்கை ஒற்றை நிர்வாகக் கட்டமைப்புக்குட்பட்டு 5 மாகாணத்திற்கும் அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டமை.

10. யாப்புத் திட்டத்திற்குட்பட்ட ஆட்சி முறையின் மூலம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் முன்னணிக்கு வந்தமை.

11. கிராம சபைகள் செயலற்றுப் போனமை.
    - கிராம சபைகள் செயலிழத்தமையால் குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் அமைப்பதுடன் பராமரிப்பதும் தடைப்பட்டன.
    - கட்டாய அரசசேவை ஒழிக்கப்பட்டதால் கிராம சபைகளுக்கு ஒழைப்பைப் பெற்றுக் கொள்வது கடினமாயிற்று.
    - கிராம சபைகளின் நீதித்துறை அதிகாரம் ஒழிக்கப்பட்டமையாலும் சிறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் விவசாயிகள் பாதிப்புற்றனர்.

12. புதிய நீதிமன்ற முறை தோற்றுவிக்கப்பட்டமை.
    1. கமரனின் நீதிமன்ற சீர்திருத்தத்திற்கு அமைய கிராமிய மக்கள் சிறு பிரச்சினைகளைத் தீர்க்க நீதிமன்றங்களை நாடவேண்டி இருந்தது.
    2. புதிய நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில மொழி அறிவோ கிராமிய மக்களிடம் காணப்படவில்லை.
    3. வழக்கறிஞர்களுக்கான கொடுப்பனவுகள், முத்திரைக் கட்டணங்கள் பணம் செலவிட வேண்டியிருந்தது.
    4. சிறிய வழக்குகளுக்காக விவசாயிகள் தமது நேரத்தையும் பணத்தையும் செலவிட நேர்ந்தது. இதனால் சேனைச் செய்கை, விவசாய நடவடிக்கைகள் பாதிப்புற்றது.

13. அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச் சென்றமை.
    - கோல்புறூக் சிபாரிசுகளுக்கு அமைய,
        1. சிவில் சேவையாளர்கள் எண்ணிக்கை குறைந்தமை.
        2. அவர்களுக்குப் பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டமை. நிருவாக சேவை செயலற்றுப் போகக் காரணங்களாக அமைந்தன.
        3. நிருவாக உத்தியோகத்தர்களின் நிருவாகப் பிரதேசம் பரந்துபட்டமையால் எல்லைப்புற விவசாயிகள் நலன்கள் கவனிக்கப்படவில்லை.
        4. பொது மக்களின் பிரச்சினைகள் அரசாங்கத்திற்கு முறையாக அறிக்கைப் படுத்தப்படவில்லை. இதனால் அரசுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகள் தடைப்பட்டன.
        5. ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமையால் கண்டியின் எல்லைப்புற விவசாயிகள் நலன்கள் கவனிக்கப்படவில்லை.

14. உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டமை.

    (உ - ம்) : 1865ம் ஆண்டு கொழும்பு மாநகர சபையும்.
    1866ம் ஆண்டில் கண்டி, காலி மாநகர சபைகளும் உருவாக்கப்பட்டன.

    (உ - ம்) : 1871ம் ஆண்டு கிராம சபை முறை மறுசீரமைக்கப்பட்டது.

15. ஜனநாயக ஆட்சி முறைக்கு இலங்கை மக்கள் படிப்படியாக பழக்கப்பட்டமை.
16. சிவில் சேவை மாற்றியமைக்கப்பட்டமை.
17. சகல பொலிஸ் செயற்பாடுகளும் நீதித்துறையின் பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டமை.
18. மாவட்ட நீதிமன்றங்களை தாபித்து கீழ்மட்ட நீதிமன்றங்களுக்கு மேலால் செயற்படக்கூடிய நீதித்துறை முறையினை உருவாக்கியமை.
19. ஆங்கிலக் கல்வி ஊக்குவிக்கப்பட்டு இலங்கையரை நிர்வாகத்திற்குள் இணைத்தமை.
20. பிரித்தானிய சிவில் நிர்வாக சேவை முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
21. இலங்கையை ஐந்து நிருவாக பிரிவுகளாகப் பிரித்து கச்சேரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களே இலங்கையை ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் கொண்டுவந்தனர். அரசியலமைப்புசார் ஆட்சி தொடர்பான அடித்தளம் இடப்பட்டதன் மூலம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான வித்து வளர்க்கப்பட்டது.
22. 1910 ஆம் ஆண்டு மக்கலம் அரசியலமைப்பில் முதன்முறையாக வரையறுக்கப்பட்ட வாக்குரிமை யினை அறிமுகப்படுத்தியதன் மூலம் கல்வி மற்றும் சொத்தினை அடிப்படையாகக் கொண்ட வரையறுக்கப்பட்ட குழுவுக்கு வாக்குரிமை கிடைத்தது. இது 1920 ஆகும் போது மேலும் அபிவிருத்தி செய்யபட்டு மாகாண ரீதியான பிரதிநிதித்துவத்திற்கு வழிகோலியமை.
23. 1924 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தினால் வரையறுக்கப்பட்ட மற்றும் மாகாண வாக்குமுறை மேலும் விரிவாக்கப்பட்டது. இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல காரணமாகியது எனலாம்.

05. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

(அ) 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தங்களில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகள்

(ஆ) 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பில் அமைச்சரவையின் மூன்று அரசாங்க அதிகாரிகளின் வகிபங்கு

(இ) 1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அம்சங்கள்

(அ) 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தங்களில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகள்

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு சீர்திருத்தங்களுள் இந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்தியில் அதிகம் பாதிப்புச் செலுத்திய யாப்புச் சீர்திருத்தம் என்ற வகையில் டொனமூர் அரசியல் சீர்திருத்தம் முக்கியம் பெறுகின்றது.

டொனமூர் சீர்திருத்தங்களின் சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை விளங்கிக் கொள்வதற்கு முதலில் அச்சீர்திருத்தங்கள் யாவை என கவனத்தில் எடுக்கவேண்டும். டொனமூர் ஆணைக்குழுவின் பிரதான சீர்திருத்தங்கள் பின்வருமாறு,

- ✧ சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
- ✧ இனவாரி பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமை.
- ✧ பிரதேசவாரி பிரதிநிதித்துவம் பரவலாக்கப்பட்டமை.

- ✧ 7/10 பகுதி நிறைவேற்று அதிகாரங்கள் சுதேசிகளுக்கு ஒப்படைக்கப்பட்டமை.
- ✧ நிறைவேற்றுக் குழுமுறை அறிமுகம் செய்யப்பட்டமை.
- ✧ அரசாங்க சபை தாபிக்கப்பட்டமை.

மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்கள் அனைத்தும் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பரப்புகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்துவதில் பாதிப்பு செலுத்தியதோடு அம்மாற்றங் களைப் பின்வரும் தலைப்புக்களில் கூறலாம்.

(1) பிரதிநிதித்துவ ஜனநாயக முறைக்கு மக்களை பழக்கப்படுத்தியமை

ஜனநாயக முறையிலான தேர்தல் செயன்முறையினால் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கும் மாற்றுவதற்கும் மக்கள் பழக்கப்படுத்தப்பட்டமையே இதன் பொருளாகும். இந்த தளத்தின் அடிப்படையிலேயே இலங்கையில் ஜனநாயக ஆட்சி தாபிக்கப்பட்டு அபிவிருத்தியடைந்தது. இதன் மீது சர்வஜன வாக்குரிமையே அதிகம் பாதிப்புச் செலுத்தியது.

(2) பொறுப்புக்கூறும் அரசாங்க முறைக்கு பழக்கப்படுத்தப்பட்டமை

இது சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் ஒரு விளைவாகும். மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு தேர்தல்களின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அடுத்த பொதுத்தேர்தலில் மக்கள் தம்மை ஆதரிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை அரசியல் வாதிகளின் உள்ளத்தில் வேரூன்றியதன் காரணமாக அரசியல் வாதிகள் மக்களுக்குப் பொறுப்புக்கூறுவதில் நாட்டம் காட்டத்தொடங்கினர்.

(3) சுதேச அரசியல் வாதிகளின் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப் படுத்துவதற்கு உதவியமை

டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் இலங்கையர்களுக்கு 7/10 நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் அரசியல் வாதிகள் தமது நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பினைக் பெற்றுக்கொண்டனர். இதன் மூலம் எதிர்காலத்தில் பொறுப்பரசாங்கத்தைக் கொண்டு நடாத்துவதற்கான பயிற்சி இலங்கையின் தலைவர்களுக்கு கிடைக்கப்பெற்றது.

(4) மக்களின் அரசியல் பங்கேற்பு விருத்தியுற்றமை

இது சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் ஒரு முக்கிய விளைவாகும். 1931க்கு முன்னர் மொத்த சனத்தொகையில் 2440,000 அல்லது 4 வீதத்தினருக்கு மட்டுமே வாக்குரிமை கிடைக்கப்பெற்றிருந்தது. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதன் பின்னர் 1931ல் முதலாவதாக நடைபெற்ற தேர்தலில் 1,577,932 வாக்காளர்கள் தம்மை பதிவு செய்ததுடன் அவர்களுள் 708,318 அல்லது 57.96 வீதத்தினர் வாக்களித்தனர்.

1936 இல் நடைபெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலில் 2,451,351 வாக்காளர்கள் தம்மை பதிவுசெய்தனர். அவர்களுள் 1,146,683 வாக்காளர்கள் வாக்களித்ததுடன்

அது மொத்த வாக்காளர்கள் தொகையில் 54.69 வீதமாகும். இதிலிருந்து தெளிவாகும் விடயம் என்னவெனில் மக்களின் அரசியல் பங்கேற்பு துரிதமாக அதிகரித்தமையாகும். இரண்டாவதாக அரசியல் சமத்துவம் உருவாவதற்கான பின்னணி நிர்மாணமாகியமை யாகும். மூன்றாவதாக மக்கள் அரசியல் ரீதியாக விழிப்படைந்தமையாகும். நான்காவதாக மக்களை அரசியல் ரீதியாக சமுதாயப்படுத்தும் செயன்முறை துரிதமடைந்தது. இதன் விளைவாக மக்கள் அரசாங்கத்தின் மீது பாதிப்புச் செலுத்தும் திறன் அதிகரித்தது. இது தமது பிரதிநிதிகளின் ஊடாக அரசாங்க சபையில் முன்வைக்கப்பட்ட மனுக்களின் மூலம் நிகழ்ந்தது. இம்மனுக்களின் மூலம் மக்கள் தமது மனக்குறைகளை முன்வைத்ததுடன் தமது பிரச்சினைகளை ஓரளவாவது நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது.

(5) அரசியல் கட்சிகள் உருவாவதற்கான தளம் ஏற்பட்டமை

டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு சுயாட்சியை வழங்காதிருப்பதில் பாதுகாப்புச் செலுத்திய ஒரு காரணம் என்ற வகையில் இலங்கையில் வளர்ச்சியடைந்ததும் ஒழுங்கமைந்ததுமான ஓர் அரசியல் கட்சி முறை காணப்படாமையாகும் என்று குறிப்பிட்டனர். எனவே டொனமூர் ஆணைக்குழு வழங்கிய அரசாங்க முறையினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் அவசியப்படாததோடு அதன் மூலம் அரசியல் கட்சிகள் வளர்ச்சியுறுதல் அதைரியப்படுத்தப்பட்டது. ஆனால் அரசாங்க முறையின் செயற்பாட்டின் போது வாக்காளர்களை ஒழுங்குபடுத்தவேண்டிய அவசியம் உருவாகியமையால் அதற்கான ஒரு மாற்றுவழி அரசியல் கட்சிகளின் அடிப்படையில் வாக்காளர்களை ஒழுங்குபடுத்துவதாகும். இதன் விளைவாக இலங்கையில் அரசியல் கட்சிகளை ஒழுங்குபடுத்தும் செயன்முறை ஆரம்பமானது.

(6) ஒரு பொதுத் தேசியத்துவம் விருத்தியடைவதற்கான தளம் இடப்பட்டமை

இலங்கையில் ஒரு பொதுத் தேசியத்துவம் வளர்ச்சியுறாமையின் மீது இருந்த பாரிய தடை என்ற வகையில் டொனமூர் ஆணைக்குழுவினர் 1833 இல் கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட இனவாரி பிரதிநிதித்துவ முறையாகும் எனக்கண்டனர். இனவாரி பிரதிநிதித்துவமானது தேசிய ஒற்றுமையையும் தேசிய ஐக்கியத்தையும் அழிக்கும் ஒரு புற்றுநோய் என டொனமூர் ஆணைக் குழுவினர் கருதினர். இதன் அடிப்படையிலேயே டொனமூர் ஆணைக்குழு இனவாரி பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தது. இவ்வொழிப்பின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப முடியும் என ஆணைக்குழு கருதியது ஆனால் இந்நோக்கம் அவ்வாறே நிறைவேறவில்லை என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

(7) சுதந்திர இயக்கத்தை பலமான முறையில் முன்னெடுத்து செல்வதற்கான உறுதுணைஏற்பட்டமை

டொனமூர் யோசனைகளின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சபையானது ஒருபுறம் இந்நாட்டின் அரசியல் வாதிகளுக்கு அரசியலிலும் நிர்வாகத்திலும் பயிற்சியளிப் பதற்கும் மறுபுறம் தனது கருத்துக்களையும் விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும்

முன்வைப்பதற்குமான ஒரு மேடையாக பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக இலங்கையின் தலைவர்கள் எழுப்பிய குரலை தட்டிக்கழித்துவிட்டு குடியேற்ற நாட்டாட்சியாளர்களினால் செயற்பட முடியாது போய்விட்டது.

(8) எதிர்கால தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான தளம் உருவாகியமை

டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சர்வஜன வாக்குரிமை, நிறைவேற்றுக்குழு முறை, அமைச்சரவை என்பன உள்வாரியாக இந்நாட்டின் தலைவர்களை நிறைவேற்று விடயங்களிலும் அரச கொள்கைகள் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்துதலிலும் பயிற்சியினை வழங்கியதுடன் மறுபுறம் வெளிவாரியாக அரசியல் போராட்டத்தில் ஈடுபடும் விதத்தினை பற்றிய பயிற்சியையும் வழங்கின. சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் இலங்கையின் அரசியல் அதிகாரத்தை பிரயோகித்தவர்களை பார்க்கும் போது இதனை நன்கு விளங்கிக்கொள்ள முடிந்தது.

(9) சமூக விருத்தி வேகமடைந்தமை

இதன் பொருள் என்னவெனில் சமூகத்தில் அழுத்திற்குட்பட்ட சனக்குழுவினருக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்தமையால் பெற்றுக்கொண்ட பலத்தின் கீழ் அவர்கள் எழுச்சிபெறலாயினர். குறிப்பாக இந்நாட்டில் கடுமையாக நிலவிய சாதிமுறை உடைப்புக்குட்படுவதில் சர்வஜன வாக்குரிமை பலத்த பாதிப்பைச் செலுத்தியது.

(10) சமூகப் பொதுநலன் துரிதமடைந்தமை

சர்வஜன வாக்குரிமையின் விளைவாக அரசியல் வாதிகளின் இருப்பானது வாக்காளர்களில் தங்கியிருப்பதோடு அதன் காரணமாக மக்கள் ஆதரவை கூடுதலாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மக்களுக்கு அதிகளவு சேவை புரியவேண்டும் என அரசியல் வாதிகள் புரிந்துகொண்டனர். அதன் காரணமாக அரசியல் வாதிகள் ஒருவரையொருவர் தாண்டிச்சென்று மக்களுக்கு சேவை புரிவதற்கு பல்வேறு பொதுநல சேவைகளை ஆரம்பிக்கலாயினர். இலவச கல்வி ஆரம்பமாகியமை. பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவினை இலவசமாக வழங்கியமை, சுகாதார சேவைகளையும், சனசமூக சுகாதார சேவைகளையும் பரவலாக்கியமை, கீழ் கட்ட அமைப்புக்களை விருத்தி செய்தமை, தொழிலாளர் நல சட்டங்களை பிறப்பித்தமை, விவசாயக் குடியேற்றங்களை ஆரம்பித்தமை போன்ற பல்வேறு பொதுநல சேவைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்டவை டொனமூர் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக விளைவுகளாகும். டொனமூர் சீர்திருத்தங்களின் மோசமான விளைவுகள் என்னவெனில் நிறைவேற்று குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்றமை, அமைச்சரவையில் கூட்டுப்பொறுப்பு நிலவாமை, அமைச்சரவையை இயக்குவதற்கு ஒரு தலைவர் காணப்படாமை, தனியார் உறுப்பினர்களின் நிலை பாதகமான வகையில் வளர்ச்சியுற்றமை, இலங்கை தலைவர்களுக்கும் 3 அரச அதிகாரிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றமை என்பனவாகும்.

(ஆ) 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பில் அமைச்சரவையின் மூன்று அரசாங்க அதிகாரிகளின் வகிபங்கு

டொனமூர் அரசாங்க முறையின் கீழ் அரசுக்குரிய பொறுப்பினை வழிப்படுத்துவதற்கு பிரதம செயலாளர், நீதிச் செயலாளர், நிதிச் செயலாளர் ஆகிய மூன்று அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். டொனமூர் யாப்பில் குறிப்பிட்டதன்படி இவர்கள் ''அரசாங்க முறை செயற்படும்போது தேசாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் நிறைவேற்றுக் குழுக்களுக்கும். ஆட்சிக் கருமங்களைக் கொண்டு நடத்துவதில் ஆலோசனை வழங்குபவர்களாக செயற்படுதல்'' என்ற பணி ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் யாப்பின் மூலம் அவர்கள் அரசின் சார்பான அதிகாரிகள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அமைச்சரவையின் உறுப்பினர்களாக இருந்ததுடன், அரசாட் சியோடு தொடர்பான முக்கியமானதும் பலம்வாய்ந்ததுமான மூன்று நிறைவேற்று இலாகாக்கள் ஒப்படைக்கப் பட்டவர்ளாக இருந்தனர். அதனால் அரசாங்க முறையின் ஆரம்ப காலத்தில் அவர்கள் அமைச்சுப் பொறுப்பேற்ற அதிகாரிகளாக அன்றி ஆலோசகர்களாகச் செயற்பட வில்லை. டொனமூர் அரசாங்கத்தில் முதல் 10 வருடகாலப் பகுதியில் அவர்கள் செயற்பட்ட விதத்தைப் பார்க்கும் போது இது நன்கு தெளிவாகின்றது.

மூன்று அரசாங்க அதிகாரிகளும் டொனமூர் யாப்பின் கீழ் வழக்கப்பட்டிருந்த அதிகாரங்களும் பொறுப்புக்களும்.

1. **பிரதம காரியதரிசி :** இவர் பதில் தேசாதிபதியாகவும் கடமையாற்றினார். இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள், பாதுகாப்பு விவகாரம், சிவில் சேவைகள், ஒழுங்கு கட்டுப்பாடு, பதவி நியமனம் மற்றும் இடமாற்றம், கணக்குப் பரிசோதனை போன்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தார்.

2. **நிதிக் காரியதரிசி :** இலங்கையின் நிதி விடயங்களிற்கு இவர் பொறுப்புடைய வராக விளங்கினார். இதன்படி வரி அறிவிடல், செலவிடல், கடன் வழங்கல், வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், ஊதியம், ஓய்வூதியம் வழங்கல், வெளிநாட்டு நாணயக் கொள்கையைத் தீர்மானித்தல் போன்ற சகல நிதி சம்பந்தமான அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டன.

3. **சட்டக் காரியதரிசி :** இவர் இலங்கையின் சகல நீதி விடயங்களிற்கும் சட்ட விடயங்களிற்கும் பொறுப்புடையவராக விளங்கினார். இதன்படி சட்டங்களுக்கு அங்கிகாரம் வழங்குதல், சட்ட ஆலோசனை வழங்குதல் மற்றும் தேர்தல்களை நடத்துதல் என்பனவற்றுக்கு பொறுப்புடையவராக விளங்கினார்.

டொனமூர் அரசாங்க முறையில் அரச அதிகாரிகள் செயற்பட்ட விதத்தைப் பார்க்கும் போது ஆரம்பத்திலிருந்து 1941 வரை அவர்கள் அரசியல் யாப்பின் மூலம் எதிர்பார்க்கப் பட்டது போன்று ஆலோசர்களாகச் செயற்படவில்லை எனத் தெரிகிறது. அவர்கள் உண்மையிலேயே ஏகாதிபத்திய அரசாங்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் காவல் நாய்களாகவே செயற்பட்டனர். டொனமூர் குழுவினர் எதிர்பார்த்ததைப் போன்று ஆலோசனைப் பணிகளை யாப்பின் காவல் நாய்களாக நிறைவேற்ற வில்லை. அம்மூவரும் தேசாபதி,

அமைச்சரவை, அரசாங்க சபை, நிறைவேற்றுக் குழுக்கள் என்பவற்றோடு தொடர்பினை மேற்கொண்ட விதத்தினை பரிசீலனை செய்யும் போது இது நன்கு தெளிவாகின்றது.

அமைச்சரவையில் அரச அதிகாரிகளின் வகிபங்கு

பிரதம செயலாளர் உத்தியோக ரீதியாக அமைச்சரவையின் தலைவராவார். அமைச்சரவை யைக் கூட்டும் அதிகாரம் அவருக்கே இருந்தது. இவர்களுக்கு வாக்கு ரிமை இல்லையாயினும் அவர்கள் அரசாங்க சபையின் உறுப்பினர்ளாக இருந்தனர். அரசாங்க சபையில் தனது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிடும் உரிமையைப் பெற்றிருந்தனர். நிறைவேற்றுக் குழுக்களின் கூட்டங்களிலும் பங்குபற்ற முடிந்தது. பிரதம செயலாளர் அவ்வுரிமையினை உத்தியோக ரீதியாக பெற்றிருந்ததுடன் ஏனைய இருவரும் அழைப்பு விடுத்தால் மட்டும் பங்கு பற்றினர். அவர்களுக்கு வாக்குரிமை இல்லையாயினும் அளவு கடந்த அதிகாரங்களைப் பெற்று பலம்வாய்ந்த நிலையினை வகித்தனர்.

டொனமூர் அரசாங்க முறையின் கீழ் இடம் பெற்ற இரட்டை நிர்வாகத்தின் ஒரு தரப்பு தேசாதிபதியும் அரச அதிகாரிகள் மூவருமாவர். தேசாதிபதி தமது அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொழுது அரச அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டார். அதனால் ஆரம்பத்திலிருந்தே இவர்களுக்கிடையில் நெருங்கிய தொடர்புகள் இடம்பெற்றதோடு ஒரு குழுவாகவே செயற்பட்டனர். இதன் விளைவாக இக்குழுவினர் இலங்கை அமைச்சர்களிடமிருந்து சேய்மையானவர்களாக இருந்தனர். உண்மையிலேயே இக்குழுவினர் அமைச்சரவைக்குள் அமைச்சரவையாகச் செயற் பட்டனர். 1934யில் அ.ஏ.பி. விஜேரத்ன இலங்கை தேசிய காங்கிரஸின் முன்னிலையில் நிகழ்த்திய உரையின் போது அரச அதிகாரிகளின் செயற்பாட்டினை பின்வருமாறு குறிப்பிட்டார்.

‘‘அரசியல் யாப்பு அரச அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்குமிடையில் ஒரு வேறு பாட்டினை உருவாக்கியுள்ளது. அரச அதிகாரிகள் அமைச்சரவைக்குள் ஓர் அமைச்சரவை யினைத் தாபித்துள்ளனர். ஏனைய அமைச்சர்களை வினவாது தீர்மானங்களை எடுக்கும் வகையில் அவர்கள் செயற்பட்டனர்’’ இதன் விளைவாக இலங்கை அமைச்சர்களுக்கும் மூன்று அரச அதிகாரிகளுக்கு மிடையில் ஒரு குளிர்ப் போர் நிலை நிலவியது.

ஆனால் 1940 களில் ஆரம்பமாகிய பொழுது அரச அதிகாரிகளுக்கும் இலங்கை அமைச்சர்களுக்குமிடையில் நிலவிய குளிர்ப்போர் நிலை இல்லாதொழிந்து இரு தரப்பினருக்குமிடையே ஒத்துழைப்பு உருவாகியது. இது தொடர்பாக பல காரணிகள் பாதிப்புச் செலுத்தின. தேசாதிபதி கோல்டிகோட் பின்பற்றிய நெகிழ்ச்சியான நடவடிக்கை முறை, இரண்டாம் உலகப் போரினால் நிர்மாணமாகிய அவசரகால நிலை, அட்மிரல் லேற்றென் பின்பற்றிய நட்புரீதியான ஒத்துழைப்புச் செயற்பாடு, இலங்கை அமைச்சர்கள் அரசியல் ரீதியாக முதிர்ச்சி பெற்றமை, தேசாதிபதியும் அரச அதிகாரிகளும் இலங்கை அமைச்சர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட ஆரம் பித்தமை. போன்ற காரணிகள் ஊன்று கோலாய் அமைந்தன. இதன் விளைவாக அரச அதிகாரிகள் தமது ஆதிக்க நிலையினைக் கைவிட்டு யாப்பின் மூலம் எதிர்பார்க்கப் பட்டது போன்று உண்மையான ஆலோசர்களாக செயற்பட ஆரம்பித்தனர்.

(இ) 1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அம்சங்கள்

✧ 1972 ஆம் ஆண்டு யாப்பு முதலாம் குடியரசு யாப்பு என்றும் பரவலாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த யாப்பின் பிரதான பண்பு என்னவெனில் அதுவரை நிலவிய சோல்பரி யாப்பிலிருந்து வேறுபட்டு பல புதிய அம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டமையாகும்.

புதிய அம்சங்கள்

✧ 1972 யாப்பில் உள்ளடக்கப்பட்ட புதிய அம்சங்களை பின்வருமாறு குறிப்பிட முடியும். அதாவது,

1. முதன் முதலாக அந்த யாப்பின் மூலம் ஓர் குடியரசு அரசாங்க முறை உருவாக்கப்பட்டமை.
2. தேசிய அரசு பேரவையானது மக்களின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப் படுத்தக்கூடிய மீயுயர் நிறுவனமாக இருந்தமை.
3. நிறைவேற்றுத் துறையின் மீது நிலவிய தடைகள் சமன்பாடுகள் ஏற்பாடுகள் நீக்கப்பட்டமை.
4. யாப்பின் மூலம் இலங்கை ஓர் ஒற்றை ஆட்சி அரசாங்க பிரகடனம் செய்யப்பட்டமை.
5. அரசுக்கும் சமயத்திற்கும் இடையிலான தொடர்புக்கு யாப்புறு தளம் வழங்கப்பட்டமை.
6. சிங்கள மொழி ஒரே அரச கரும மொழியாக யாப்பின் மூலம் வெளிப்படுத்தப் பட்டமை.
7. அரச கொள்கை கோட்பாடுகள் மற்றும் அடிப்படை உரிமைகள் அத்தியாயங்கள் யாப்பில் புகுத்தப்பட்டமை.
8. பிரதமரினால் நியமிக்கப்படும் நாம நிர்வாகி என்ற வகையில் ஜனாதிபதி பதவி ஒன்று தாபிக்கப்பட்டமை.
9. சட்டமன்றச் சட்டங்களை அன்றி சட்ட மசோதாக்களை பரிசீலனை செய்வதற்காக அரசியல் யாப்பு நீதிமன்றம் ஒன்று தாபிக்கப்பட்டமை.

06. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை பரிசீலிக்குக.

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட ஜனாதிபதி முறைமை சில நாடுகளின் ஈர்ப்பினைப் பெற்று உருவாக்கப்பட்ட முறைமையாகும். அதாவது இங்கிலாந்து, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்க குடியரசு என்பன இதன் கட்டமைப்பாகும். அத்தோடு இவ் வரசியலமைப்பில் காணப்பட்ட அரசியல் நோக்கங்கள் மற்றும் அதனால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் கட்டமைப்புக்களின் மீது இது பெரிதும் விவாதத்திற்குரிய அரசியலமைப்பாக மாறியுள்ளது என்பதை குறிப்பிடமுடியும்.

✧ இவ்வரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி பதவி தனிப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரதானமான விமர்சனம் அரசியலமைப்பின் உருவாக்குனராகக் கருதப்படும். ஜே.ஆர். ஜயவர்த்தன

ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது எனும் விமர்சனம் மிக முக்கியமானதாகும்.

- ✧ மேற்குறிப்பிட்ட விமர்சனத்தோடு தொடர்புபட்டு காணப்படும் ஏனைய விமர்சனம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சட்டக் காப்பாகும். (சட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலை)
- ✧ சட்டக்காப்பு என்பது நடைமுறை சட்டமானது அரச தலைவரை கட்டுப்படுத்தாது என்பதாகும். இந்த சட்டக்காப்பானது பாராளுமன்ற முறையிலான அரச தலைவருக்கே உரியதாகும். காரணம் அவர் உண்மையில் நிருவாக நவடிக்கையில் பங்குபற்றுவதில்லை என்பதாலாகும்.
- ✧ எனினும் இலங்கையில் ஜனாதிபதியானவர் உண்மை நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றுடன், சம்பிரதாயபூர்வமான அரச தலைவர் அனுபவிக்கும் சம்பிரதாயபூர்வமான அதிகாரங்களையும் அனுபவிக்கின்றார்.
- ✧ இந்நிலை தன்னிச்சையாக மற்றும் அதிகாரவாத ஆட்சி முறைக்கு இலங்கையை இட்டுச் சென்றுள்ளமை மற்றுமொரு பிரபல்யமான குற்றச்சாட்டாகும்.
- ✧ ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தினை தன்னிச்சையாக விரும்பியவாறு பயன்படுத்தியுள்ளார் எனும் குற்றச்சாட்டு.
- ✧ ஒட்டுமொத்த அதிகாரங்கள் அரசியல் கலாசார கட்டமைப்பு மற்றும் கூட்டமைப்புகள் (கூட்டுத்தாபனங்கள்) கீழ்நிலையடைவதற்கும், ஊழல் நிறைந்ததாக மாறுவதற்கும் காரணமாகியுள்ளது என்பது மற்றுமொரு முக்கியமான குற்றச்சாட்டாகும்.
- ✧ சட்ட, நிர்வாக, நீதி அதிகாரங்கள் அரச தலைவருக்குள்ள எல்லையற்ற அதிகாரமாகும். இவ்வதிகாரத்தினை முறையற்ற வகையில் பயன்படுத்தியுள்ளார் எனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
- ✧ இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியை தனியான தேர்தலில் தெரிவு செய்கின்றனர். ஆயினும் ஜனாதிபதிக்கு சட்டத்துறைக்கு வெளியில் இருந்து அமைச்சரவையை அல்லது அமைச்சர்களை நியமிக்கமுடியாது. இப்பண்பினை தூய ஜனாதிபதித்துவ அரசாங்க மாதிரியில் காணமுடியாது.
- ✧ எவ்வாறாயினும் ஜனாதிபதியால் தலைமைதாங்கப்பட்டாலும் அமைச்சரவைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரச கொள்கைப் பிரகடனம் ஒன்று தோல்வியடைதல், வரவு செலவுத்திட்டம் தோல்வியடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை மட்டுமே பதவிவிலகும். இதனால் இம்முறையின் கீழ் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான முரண்பாடுகளின் போது எதிர் விளைவுகளுக்கு உண்மையில் முகங்கொடுப்பது பிரதமரும் அமைச்சரவையுமாகும்.
- ✧ சட்டத்துறையினை கூட்டுதல் கலைத்தல் மற்றும் ஒத்திவைத்தல் போன்ற அதிகாரங்களையும் கொண்டுள்ளார்.
- ✧ இது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள ஒரு குற்றச்சாட்டு யாதெனில் ஜனாதிபதி சட்டத்துறை விடயங்களில் கணிசமானளவு அதிகாரங்கள் பெற்றுள்ளனர் என்பதாகும். இதற்குக் காரணம் ஜனாதிபதி மக்கள் கருத்துக்கணிப்பு, வாக்கெடுப்பு ஒன்றினை நடத்த முடியும் என்பதாலாகும்.

17ஆம் 18ஆம் 19ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தில் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் அதனால் ஏற்பட்ட விமர்சனங்களும்

ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்காக 2001ம் ஆண்டு 17ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இத்திருத்தத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டதோடு அரசியலமைப்பு பேரவையும் அமைக்கப்பட்டது. அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்தின் பேரிலேயே ஜனாதிபதி சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர் உட்பட அதன் உறுப்பினர்களையும் பிரதம நீதியரசர் உட்பட ஏனைய நீதியரசர்களையும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் ஏனைய நீதியரசர்களையும், நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், ஓம்புட்ஸ்மன், பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் போன்றோரை நியமிக்கவேண்டுமே ஒழிய தன்னிச்சையாக நியமிக்க முடியாது. இது ஜனாதிபதியை கட்டுப்படுத்தும் ஒரு விடயமாகும். எனினும் அரசியல் காரணங்களால் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. திருத்தச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட முக்கிய நிறுவனமான அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட விதம் காரணமாக 2010ம் ஆண்டாகும் போது அது முழுமையாக செயற்பாடற்ற நிலைக்கு தள்ளப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு எந்தத் தினத்திலும் நியமிக்கப்படவில்லை. அதேபோன்று பகிரங்க சேவை ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு என்பவற்றின் உறுப்பினர்களையும், உயர்நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றின் நீதியரசர்களையும் ஜனாதிபதி தன்னிச்சையாக நியமித்தமையால் அரசியலமைப்பு பேரவை ஒரு பொருளற்ற சபையாக மாறியிருந்தது.

18ஆம் திருத்தம் 17ஆம் திருத்தத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்கான முயற்சி பின்தள்ளப்பட்டதோடு பயங்கரமான நிறைவேற்று சர்வாதிகாரம் விருத்தியடைய ஆரம்பித்தது. 17ஆம் திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபரை அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனேயே நியமிக்கவேண்டும். எனினும் 18ஆம் திருத்தத்தின் கீழ் அந்த வரையறை இல்லாதொழிக்கப்பட்டு பொலிஸ்மா அதிபரை நியமித்தல் நேரடியாகவே ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 18ஆம் திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரிதொரு பாரதூரமான மாற்றம் என்னவெனில் சுயாதீனமான ஆணைக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மிகப்பலமான வகையில் குறைக்கப்பட்டது. இதன் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் அதிகாரங்கள் எல்லையற்றவாறு குறைக்கப்பட்டது.

18ஆம் திருத்தத்தை ஜனநாயகவாதிகள் ஜனநாயகத்திற்கு எதிரான பலமான தாக்குதல் என்ற வகையில் பொருள் விளக்கம் செய்தனர். சில விமர்சகர்கள் இந்தத் திருத்தத்தின் விளைவாக சுயாதீனமான பகிரங்கசேவை வீழ்ச்சியடைந்தது என சுட்டிக்காட்டினர். நீதித்துறையின் சுதந்திரமும் சட்டத்தின் ஆட்சியும் வீழ்ச்சியுற்றன. பிரதம நீதியரசர் பதவி விலக்கப்பட்டார். ஜனாதிபதி பிரதம நீதியரசர் ஒருவரை தன்னிச்சையாக நியமித்தார். சட்டத்துறையானது நிறைவேற்றுத்துறையின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. மனித உரிமை ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படவில்லை. சுயாதீனமான தேர்தல் முறை வீழ்ச்சியடைந்தது. மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டது. முழுமையாகப் பார்ப்பின் ஜனநாயகம் பாரதூரமான வகையில் அழிவுக்குட்படுத்தப்பட்டது. இக்குற்றச்சாட்டுக்களின் உண்மை, உண்மையற்ற தன்மை எவையாயினும் 18ஆம் திருத்தச் சட்டம் ஜனநாயகத்தின் முரண்பட்ட தன்மையென இறுதியாகக் கூறமுடியும்.

எனவே அரசியலமைப்பின் 18ஆம் திருத்தம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சர்வாதிகாரத்திற்கு மேலும் உரமூட்டியது என விமர்சிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 19ஆம் திருத்தம் நிறைவேற்று ஜனாதிபியின் அதிகாரங்களை 30 வீதமாக குறைத்தபோதிலும் 2018ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஜனாதிபதியாகயிருந்த மைத்திரிபால சிறிசேன யாப்பை மீறி தன்னிச்சையாக செயற்பட்ட குற்றத்திற்கு ஆளாகினார். தேசிய அரசாங்கத்தை கலைத்து பிரதமரை பதவிநீக்கினார், தன்னிச்சையாக மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார். பாராளுமன்றத்தை கலைக்கமுடியாதபோதும் யாப்பை மீறி கலைத்தார் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார், திணைக்களங்கள் சிலவற்றை தனக்குக்கீழ் கொண்டுவந்தார், சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியை தன்வசமாக்கினார். அமைச்சரவையை பல தடவைகள் மாற்றியமைத்தார், மரண தண்டனை வழங்கிய குற்றவாளி ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கினார். இருந்தாலும் நீதித்துறை சுயமானதாக இயங்கியதால் ஜனாதிபதியின் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை என்றே கூறவேண்டும். எனவே 19வது திருத்தத்தைக் கொண்டுவருவதில் பாதிப்புச் செலுத்திய பின்னணியும், 19ஆம் திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும் பெறுபேறாக நிறைவேற்று ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரம் வரையறை செய்யப்பட்டு அரசாங்கத்தின் வெளிப்படையான தன்மை வளர்ச்சியுற்று பிரஜைகள் பலப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் 2019ஆம் ஆண்டு நவம்பர் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் SLPP சார்பில் போட்டியிட்ட கோத்தபய ராஜபக்ஷ வெற்றியீட்டியதையடுத்து யாப்பின் 19வது திருத்தத்தை நீக்கவேண்டும் அல்லது மாற்றம் செய்யவேண்டும் என்று ஜனாதிபதியான கோத்தபய ராஜபக்ஷவும் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவும், கபினட் அமைச்சர்களும் கூறிவருவது முக்கியமானதாகும். ஆனால் இதற்கு ஐக்கிய தேசியக்கட்சி பலமான எதிர்ப்பை தெரிவித்துக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை 1978 ஆம் ஆண்டு யாப்போடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(அ) மனித உரிமை மீறல்கள் தொடர்பாக யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறை

(ஆ) யாப்பில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகள், ஏற்பாடுகள் மற்றும் பலவீனங்கள்

(இ) அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் அடிப்படைப் பண்புகள்

(அ) மனித உரிமை மீறல்கள் தொடர்பாக யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறை

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக செயற்படுவதற்கு 1978 யாப்பு அறிமுகம் செய்துள்ள பொறிமுறை பின்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ. உயர் நீதிமன்றம்

ஆ. மனித உரிமைகள் ஆணைக்குழு

இ. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)

அ. உயர் நீதிமன்றம்

அரசியல் யாப்பின் 118(அ) உறுப்புரையின் மூலம் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நீதி அதிகாரம் உயர் நீதிமன்றுக்கே வழங்கப்பட்டுள்ளது. 126(1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு யாப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் அடிப்படை உரிமை அல்லது நான்காம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி உரிமை ஏதேனும் நிறைவேற்று அல்லது நிர்வாக செயற்பாடுகளினால் மீறப்பட்டிருப்பின் அல்லது மீறப்பட அண்மித்துள்ள ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்து தீர்ப்புவழங்கும் தனியானதும் பிரத்தியேகமானதுமான நீதியதிகாரம் உயர் நீதிமன்றுக்கே வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஏதேனும் செயற்பாட்டினால் ஓர் அடிப்படை உரிமையோ மொழி உரிமையோ மீறப்பட்டிருப்பின் அதனால் பாதிக்கப்பட்டுள்ள நபர் பாதிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலம் முடிவுறுவதற்கு முன்னர் தாம் அல்லது தமது வழக்கறிஞர் ஒருவரினூடாக நியாயம்கோரி உயர் நீதிமன்றிடம் முறைப்பாடு செய்யலாம்.

உயர் நீதிமன்றமானது முதலாவதாக அவ்வேண்டுகோளுக்கு அனுமதி வழங்கவேண்டுமா இல்லையா என்பதினை கவனத்தில் எடுக்கும். இந்த முன்விசாரணையை இரு நீதியரசர்கள் மேற்கொள்வர். முறைப்பாட்டினைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படின் விசாரணை ஆரம்பமாவதுடன் இரண்டு மாத காலத்தில் தனது தீர்ப்பினை வெளியிட வேண்டும். எனினும் நடைமுறையில் இந்தச் செயன்முறை பின்பற்றப்படுவதில்லை.

இந்த பொறிமுறையில் காணப்படும் சில குறைபாடுகளை விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். முதலாவது, உயர் நீதிமன்றினை நாடிச் செல்வதற்கான காலக்கெடு போதுமானதல்ல எனச்சுட்டிக் காட்டப்படுகின்றது. இரண்டாவதாக அது தொடர்பாக பாரிய பணத்தொகையை செலவளிக்க வேண்டியுள்ளது. மூன்றாவதாக, அடிப்படை உரிமைகள் தொடர்பாக பொது மக்களுக்கு போதிய அறிவு காணப்படுவதில்லை ஆகையால் இந்த வாய்ப்பினை பொதுமக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள ஈடுபாடு காட்டுவதில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆ. மனித உரிமைகள் ஆணைக்குழு

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் இவ்வாணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. இது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு அவர்கள் அரசியல் அமைப்புப்பேரவையின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர் இச்சட்டத்தின் 10ஆம், 11ஆம் உறுப்புரைகளில் ஆணைக்குழுவின் அதிகாரங்களும் பணிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஓர் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளமை அல்லது மீறப்படுவதற்கு அண்மித்துள்ளமை தொடர்பான முறைப்பாட்டினை விசாரணை செய்தல் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இணக்கப்பாட்டிற்குவருவதன் மூலம் அவற்றினைத் தீர்த்துவைத்தலாகும். சட்டத்தின் 14ஆம் உறுப்புரையின் படி பாதிக்கப்பட்ட ஒரு நபர் அல்லது நபர்களின் குழு சார்பாக செயற்படுகின்ற ஒரு பிரதிநிதியினால்

ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்படும் ஒரு முறைப்பாட்டின் பெயரில்,

- ✧ நிறைவேற்று அல்லது நிர்வாக செயற்பாட்டின் மூலம் அல்லது
- ✧ 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஒரு நபரினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பிழையின் விளைவாக அதிருப்திக்கு உட்பட்ட அந்நபரின் அல்லது நபர்களின் குழுக்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பான முறைப்பாடு ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட வேண்டும்.

விசாரணையின் போது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமை அல்லது மீறப்படவுள்ளமை வெளிப்படவில்லையாயின் அது தொடர்பான அறிக்கையினை 30 நாட்களுக்குள் முறைப்பாட்டாளர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

விசாரணையின் போது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளமை அல்லது மீறப்படவுள்ளமை நிகழ்ந்திருப்பின் அதனை தீர்த்துவைப்பதற்கு அல்லது ஒற்றுமைப்படுத்துவதற்கு அதிகாரம் இருப்பதோடு அது தொடர்பான தீர்ப்பாளர்களை ஆணைக்குழு நியமிக்க முடியும். இணக்கப்படுத்துவதன் அல்லது ஒற்றுமைப்படுத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையை தீர்க்க முடியுமாயின் அது தொடர்பான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு. சமாதானப்படுத்த முடியாதபோது ஆணைக்குழு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

- ✧ அடிப்படை உரிமையை மீறிய நபருக்கு எதிராக வழக்குத் தொடருமாறு அல்லது பிறிதொரு நீதித்துறை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனத்திற்கு சிபாரிசு செய்தல்.
- ✧ மனித உரிமைகள் தொடர்பாகச் செயற்படுவதற்கான நீதி அதிகாரம் பெற்ற நீதிமன்றுக்கு நேரடியாக சம்பந்தப்பட்ட விடயத்தை ஆற்றுப்படுத்துதல்.
- ✧ மீறலை அல்லது அம்மீறல் தொடர்ந்தும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்தல்.
- ✧ அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளமை அல்லது மீறப்படவுள்ளமை மீது பாதிப்பு செலுத்திய செயற்பாடு மீண்டும் நிகழ்வதனை கவனத்தில் கொள்ளுமாறு அல்லது திருத்தியமைக்குமாறு சிபாரிசு செய்தல்.
- ✧ அடிப்படை உரிமை மீறப்படுதல் அல்லது மீறப்படவுள்ளமை மீது பாதிப்புச் செலுத்தும் தீர்மானத்தை மீளக் கவனத்தில் எடுக்குமாறு அல்லது தவறினைத் திருத்துமாறு சிபாரிசு செய்தல்.
- ✧ அடிப்படை உரிமை மீறப்படுதல் அல்லது மீறப்படவுள்ளமை மீது பாதிப்புச் செலுத்தும் காரணிகளான தீர்மானம், சிபாரிசு, செயற்பாடுகள் என்பவற்றை மாற்றியமைக்குமாறு சிபாரிசு செய்தல்.
- ✧ அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை மீது பாதிப்புச் செலுத்திய தீர்மானம், சிபாரிசு, செயற்பாடு என்பவற்றுக்கான காரணங்களைச் சுட்டிக்காட்டுமாறு விதித்தல்.

மேற்கூறியவாறான சிபாரிசுகளை முன்வைத்தால் அந்த சிபாரிசுகளின் ஒரு பிரதி பாதிக்கப்பட்ட நபருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கும் நிறுவனத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அனுப்பப்பட வேண்டும். சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அந்த சிபாரிசுகளை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி அல்லது நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை உரிய காலத்தில் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டுமென விதிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உண்டு. ஆணைக்குழுவின் கட்டளைகளைக் கவனத்தில் எடுக்காது விடப்பட்டுள்ளது என்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானவையல்ல என்றும் ஆணைக்குழு உணரின் ஆணைக்குழுவானது அது தொடர்பான ஓர் அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் ஜனாதிபதி அவ்வறிக்கையை பாராளுமன்றுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாட்டினைப் பார்க்கும் பொழுது பின்வரும் பண்புகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

- ✧ பாதிக்கப்பட்டவரே ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை அது தொடர்பாக அவர் சார்பாக பிறிதொரு நபரும் முறைப்பாட்டினை முன்வைக்கமுடியும்.
- ✧ மேற்குறிப்பிட்ட 1979 பயங்கரவாத தடைச் சட்டத்தோடு தொடர்பான அடிப்படை உரிமை மீறல்கள் பற்றி அரச சார்பற்ற தனியாருக்கு எதிராகக் கூட விசாரணை செய்யும் அதிகாரமும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இ. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)

இப்பதவி 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது. யாப்பின் 156(1) உறுப்புரையில் கூறப்படுவதன் படி ‘‘நிர்வாக விடயங்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் பதவியை உருவாக்குவதற்கு பாராளு மன்றமானது சட்டத்தினால் ஏற்பாடுகளை செய்யவேண்டும். அரச அதிகாரிகள், அரசக்கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் வேறும் நிறுவனங்கள் என்பவற்றின் அதிகாரிகளினால் இழைக்கப்படும் அடிப்படைஉரிமை மீறல்களையும் வேறும் அநீதிகளையும் பற்றி முன்வைக்கப்படும் முறைப்பாடுகளையும் குற்றச் சாட்டுக்களையும் அது தொடர்பான சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பரிசீலனை செய்து அறிக்கைப்படுத்தும் வகிபங்கு நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.’’ இதன் படி பாராளுமன்றின் 1981இன் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் முன்னைய சட்டம் திருத்தப்பட்டது.

- ✧ ஒம்புட்சுமன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். அப்பதவிற்காக ஜனாதிபதி முன்வைக்கும் சிபாரிசினை அரசியல் அமைப்புப்பேரவை அங்கீகரித்ததன்

பின்னரே அந்நியமனம் செல்லுபடியாகும். அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக ஒம்புட்ஸ்மனுக்கு வழங்கப்பட்டுள்ள இரு விசேட அதிகாரங்கள் காணப்படுகின்றன.

A அடிப்படை உரிமை மீறல்கள் அல்லாத வேறும் ஓர் அநீதி அரசாங்கத்தினாலோ அல்லது அரசாங்கத்தின் நிறுவனம் ஒன்றினாலோ மேற்கொள்ளப்படும் போது அதில் தலையிடுவதற்கான அதிகாரம்.

B ஏதேனும் ஒரு தீர்மானம், சிபாரிசு அல்லது செயற்பாடு என்பன பற்றி எழுத்தாணையினால் அல்லது வேறு வகையில் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டுமென ஏதேனும் சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் பொழுது அதனை கருத்திற்கொள்ளாது செயற்படுவதற்குள்ள அதிகாரம்.

✧ அடிப்படை உரிமைமீறல் அல்லது வேறும் ஓர் அநீதி நிகழ்ந்துள்ளமை பற்றிய முறைப்பாட்டினை இரு வழி முறைகளின் மூலம் ஒம்புட்ஸ்மனிடம் முன்வைக்கலாம்.

A ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் ஊடாக பொதுமக்கள் மனு குழுவிடம் முன்வைக்கப்படும் ஒரு மனு பின்னர் அக்குழுவின் மூலம் ஒம்புட்ஸ்மனிடம் முன்வைக்கப்படமுடியும்.

B பாதிக்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் நேரடியாக ஒம்புட்ஸ்மனிடம் முறைப்பாட்டினை முன்வைக்க முடியும்.

✧ இவ்வாறு முன்வைக்கப்படும் ஒரு முறைப்பாட்டின் மூலம் அல்லது குற்றச்சாட்டின் மூலம் அரசாங்கமோ அரசோடு இணைந்த ஒரு நிறுவனமோ அல்லது ஒரு நிறுவனத்தின் அதிகாரியோ அடிப்படை உரிமையினை மீறியுள்ளமை அல்லது வேறும் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளமை என ஒம்புட்சுமன் அறியும்போது அவர் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைப்படுத்தவேண்டும். விசாரணையை மேற்கொள்வதற்கு முன்னர் அது பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு அறிவிக்க வேண்டும். அவ்வறிக்கையை எழுத்தின் மூலமோ வாய்மொழியின் மூலமோ அந்நிகழ்வினைப் பற்றிய விடயங்களை முன்வைக்க வேண்டும். தேவைப்படின் வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான சாட்சிகளை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

✧ ஒம்புட்ஸ்மன் தனது விசாரணையின் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுக்கவேண்டும்.

A. ஏதேனும் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளதா அல்லது மீறப்படுவதை அண்மித்துள்ளதா

B. விசாரணைக்கு உட்படும் தீர்மானம், சிபாரிசு, செயற்பாடு

✉ என்பவை சட்டத்திற்கு முரணானவையா?

✉ நிகழ்வானது சட்டம் பற்றித் தவறினால் முழுமையாக அல்லது அரைகுறையாக ஏற்பட்டுள்ளதா?

- ✉ அசாதாரண, அநீதியான, முறையற்ற வேறுபாடு என்பவை ஏற்பட்டுள்ளதா? அல்லது வேறு வகையில் தவறானதாக உள்ளதா?
- ✉ அசாதாரண, அநீதியான, முறையற்ற வேறுபாடுகளை ஏற்படுத்தும் நடைமுறையோடு தொடர்புடையதா?
- ✉ ஒரு விருப்பினை நடைமுறைப்படுத்தும் போது,
  - (a) முறைகேடான செயற்பாடு அல்லது தொடர்பற்ற காரணம் படி அல்லது தொடர்பற்ற விடயங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டோ அல்லது முக்கியமான விடயங்களை கருத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டுள்ளதா?
  - (b) காரணங்கள் காட்டப்பட வேண்டியிருந்தபோது அவ்வாறு காட்டப்பட்டாதிருந்ததா?
- ✉ நியாயமற்ற முறையிலான தாமதம், உதாசினம் அல்லது கவனிக்காமை என்பவற்றினால் ஏற்பட்டுள்ளதா?

என்ற விடயங்களை ஒம்புட்ஸ்மன் கவனத்தில் எடுக்கவேண்டும்.

- ✧ மேற்குறிப்பிட்டவற்றை நிச்சயப்படுத்திக்கொண்டதன் பின்னர் அவற்றுக்கான காரணங்களுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு அல்லது நிறுவனத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் மற்றும் பொதுமக்கள் மனுக்கள் குழுவிற்கும் அறிக்கைப்படுத்த வேண்டும். ஓர் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பின் அல்லது வேறு அநீதியான நிலை ஏற்பட்டிருப்பின் அல்லது அவ்வாறு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பின் அது தொடர்பான நடவடிக்கை களைச் சிபாரிசு செய்யும் அதிகாரம் ஒம்புட்ஸ்மனுக்கு உண்டு.
- ✧ சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றிய அறிக்கைகளை ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் முன்வைக்கவேண்டும்.
- ✧ ஒம்புட்ஸ்மன் தமது விசாரணைகளைப் பிரபல்யமற்ற வகையிலேயே மேற்கொள்வார்.

இதைத்தவிர பொலிஸ் சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, தகவல் அறியும் சட்டம், பகிரங்கசேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்யும் நிரந்தர ஆணைக்குழு போன்றனவும் மனித உரிமையை பாதுகாக்கின்ற கேடயங்களாக தற்போது அமைந்து காணப்படுகின்றன.

(ஆ) யாப்பில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகள், ஏற்பாடுகள் மற்றும் பலவீனங்கள்

- 1978ஆம் ஆண்டு யாப்பு தனது 3ம் அத்தியாயத்தில் இலங்கைப் பிரசைகள் அனுபவிக்கக்கூடிய 12 வகையான பிரதான மனித உரிமைகளை அடிப்படை உரிமைகளாக வழங்கியுள்ளது. இதனை 10 - 14 வரையுள்ள சரத்துக்களில் காணலாம். உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாவன.
  1. சிந்தனை செய்யும் சுதந்திரம் மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம். (10)
  2. கொடூரமான மனிதாபிமானமற்ற சித்திரவதையிலிருந்தும் இழிவான நடத்தை அல்லது தண்டனையிலிருந்தும் விடுபடுவதற்கான உரிமை (11)
  3. சட்டத்தின் முன் சகலரும் சமத்துவம், சட்டப் பாதுகாப்பு, ஓரங்கட்டப்படாமை என்பனவற்றுக்கான உரிமை (12)

4. சட்டப் பிரகாரமின்றி கைது செய்யப்படாமை, கைதுக்கான காரணத்தை அறிதல் என்பவற்றுக்கான உரிமை.
5. கைது செய்யப்படுபவர் உடனடியாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுதல், சுமத்தப்பட்டவர் வழக்காடும் உரிமை, சட்டத்தின் பிரகாரமின்றி தண்டிக்கப்படாமை, குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றம் சுமத்தப்பட்டவர் சுத்தவாளியாக கருதப்படல், குற்றத்துக்கான தண்டனை நடைமுறையில் உள்ளதை விடக் கூடுதலாக வழங்கப்படாமை என்பவற்றுக்கான உரிமை.
6. பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம்.
7. அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரம் (14.1அ) ஒழுங்கு சேர்வதற்கான சுதந்திரம் (14.1இ) தொழிற் சங்கங்களை அமைக்கவும் அதில் சேரவுமுள்ள உரிமை (14.1ஈ)
8. கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் சொந்த மொழியை பயன்படுத்துவற்கும் உள்ள சுதந்திரம் (14.1ஊ)
9. பொருளாதார உரிமை (14.1எ)
10. நடமாடுவதற்கும், தான் விரும்புமிடத்தில் வதிவதற்குமான சுதந்திரம்.
11. இலங்கைக்கு திரும்பி வருவதற்கான சுதந்திரம் (14.1ஐ)

மேற்கூறியவாறு அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் அரசியல் அமைப்பில் காணப்பட்ட போதும் தேசிய பாதுகாப்பு, இனச் சமூக வாழ்வு, மதச் சமூகவாழ்வு, தேசிய பொருளாதாரம் போன்றவற்றின் நலன் கருதி அவசரகால சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம் என அரசியல் யாப்பின் 15ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான ஏற்பாடுகள் அரசு பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கான வாய்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது என அரசியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

- அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 19வது திருத்தச் சட்டத்தின் படி உறுப்புரை 14அ(1) என்ற பிரிவு உள்வாங்கப்பட்டுள்ளது. அப்பிரிவானது தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமையினை வழங்குகின்றது.

  ஒவ்வொரு பிரஜையும், பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவலை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவராக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

- எனினும் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இவ்வுரிமை மட்டுப்படுத்தப்படலாம்.
  1. ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுத்தல்.
  2. ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாத்தல்.
  3. மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாத்தல்.
  4. நீதிமன்ற அவதூறைத் தடுத்தல்.
  5. பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாத்தல்.
  6. நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக.
  7. தேசிய பாதுகாப்பு ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு.

- 1978 யாப்பில் இடம் பெறும் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான ஏற்பாடுகளில் பின்வரும் இயல்புகள்,
    1. உரிமைகள் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.
    2. உரிமைகளும் கடமைகளும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல்.
    3. அரச வழிகாட்டிக் கோட்பாடுகளில் வலியுறுத்தப்படல்.
    4. சில உரிமைகள் தனி முதன்மை வாய்ந்தவையாக நிலை நிறுத்ப்பட்டிருத்தல்.
    5. உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள்.
    6. உரிமைகள் தொடர்பான கடமைகள்.
    7. உரிமைகளுக்கான பாதுகாப்பு மற்றும் மீறப்படும் போது பரிகாரம் காணும் முறை.

- குறைபாடுகள்
    1. உயிர் வாழும் உரிமை பற்றிக் குறிப்பிடப்படவில்லை.
    2. அவசரகால நிலைமைகளில் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்படும் நிலை காணப்படுதல்.
    3. உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் நீண்ட விளக்கங்களாக அமைந்து குழப்பத்தில் மக்களை ஆழ்த்தியமை.
    4. பரிகாரம் பெறுவதிலுள்ள சிக்கல்கள், வரையறைகள்.
    5. மனித உரிமை மீறல் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படாமை.

(இ) அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் அடிப்படைப் பண்புகள்

இலங்கை குடியரசின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான அமரர் J.R. ஜெயவர்த்தனாவுக்கும் முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் ராஜிவ் காந்திக்குமிடையில் 1987 ஜூலை 29ம் திகதி இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. இவ் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் 1987ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி இரண்டாம் குடியரசு யாப்பில் 13ம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இத்திருத்தத்தில் 02 பிரதான விடயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

01. சிங்கள மொழியோடு தமிழ் மொழியையும் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்தமை.
02. மாகாண சபை முறை தாபிக்கப்பட்டு அரசியலதிகாரம் பரவலாக்கப்பட்டமை.
    இந்த யாப்பின் 13ம் திருத்தச் சட்டம் ஒற்றையாட்சியினை உறுதிப்படுத்தும் 02ம் உறுப்புரையையும், மக்களின் இறைமையை உறுதிப்படுத்தும் 03ம் உறுப்புரையையும், பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற ஒன்பதாம் உறுப்புரை யையும் மீறுகின்றது என சில பிரிவினரால் கருதுப்பட்டதால் அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் சவால்களுக்கு உட்படுத்தப்பட்டது. ஆதலால் பதின் மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்தின் சட்டரீதியான தன்மையை ஆய்வு செய்வதற்காக அக்கால ஜனாதிபதியும் இத்திருத்தத்தின் முன்னோடியுமான ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களால் உயர் நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது அத்தோடு பல்வேறு அமைப்புக்கள் தனிநபர்கள் மூலம் 13ஆம் திருத்தச் சட்டமூலம் சவால்களுக்கு உட்படுத்தும்

வகையிலும், மற்றும் சிலர் அதற்கு ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் வகையிலும் உயர் நீதிமன்றுக்கு மனுக்களை தாக்கல் செய்தனர். இச்சட்ட மூலத்தை உயர் நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட முழுமையான நீதிமன்றச் சபையின் மூலம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதோடு இத்திருத்தம் தொடர்பான தீர்ப்பொன்றும் உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. இத் திருத்தச் சட்டமூலம் இலங்கை அரசின் ஒற்றையாட்சித் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தாது என்று நீதியரசர்கள் ஐவரைக் கொண்ட குழுவின் கருத்தாக இருந்ததோடு இத்திருத்தச் சட்ட மூலம் இலங்கை அரசின் ஒற்றையாட்சித் தன்மையை மீறுவதாக உள்ளது என்பது ஏனைய நால்வரின் கருத்தாக இருந்தது. எனவே இத் திருத்தத்தை மேற்கொள்வ தற்காக மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் மக்களின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என பின்னர் குறிப்பிட்ட நீதியரசர்களின் கருத்தாக இருந்தது. மாகாண சபைகள் முன்மொழிவுகள் ஒற்றையாட்சியின் எல்லைக்கு உரித்தாக இருக்கும் எனவும் அதன் காரணமாக பதின்மூன்றாவது திருத்தம் அரசின் ஒற்றையாட்சி தன்மையின் மீது மாகாண சபைகள் தாக்கத்தை ஏற்படுத்தாது என ஐவரைக் கொண்ட குழுவின் கருத்தாகும்.

மேலும் மாகாண சபை என்பது சுயமான சட்டவாக்க அதிகாரங்களை செயற்படுத்தப் படாததும் பாராளுமன்றுக்கு கீழ்படிந்து மட்டுப்படுத்தப்பட்ட சட்டவாக்க அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் முக்கியமற்ற நிறுவனத் தொகுதியொன்றாகும் என்பதே அவர்களின் தீர்மானமாக இருந்தது. பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றத்தில் காணப்படும் சட்டவாக்க அதிகாரங்களை கைவிடுதல் அல்லது ஒப்படைத்தல் அல்லது கைமாற்றுதல் போன்ற அதிகாரப் பகிர்வொன்றில் உள்ளவாறான அழுத்தங்களை ஏற்படுத்தாது என்று அவர்கள் குறிப்பிட்டனர். ஆதலால் அரசியல் அமைப்பின் 13வது திருத்தம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் உறுதிப்படுத்தப்பட்டதோடு, திருத்தத்தின் யாப்புறுத் தன்மையும் செல்லுபடியாகியதனால் பாராளுமன்றத்தின் $^{2}/_{3}$ பெரும்பான்மை யோடு 13வது திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடிப்படைப் பண்புகள்

01. மாகாண சபைகளுக்கு யாப்பு ரீதியான சட்ட அங்கீகாரம் கிடைத்தமை.
02. மாகாண சபைகளின் ஊடாக மாகாண மட்டத்தின் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்குவதற்காக நாடு முழுவதும் மாகாண சட்டவாக்க சபை தோற்று விக்கப்பட்டமை.
03. மத்திய அரசின் அதிகாரப் பட்டியல் (17), மாகாண சபையின் அதிகாரப்பட்டியல் (37) ஒத்தியங்கும் அதிகாரப் பட்டியல் (36) அடிப்படையில் அதிகாரங்கள் பகிரந்தளிக் கப்படும் விதம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
04. சகல மாகாண சபைகளும் உடன்படுமாக இருந்தால் மட்டுமே மாகாண சபைகளின் அதிகாரப் பட்டியலில் உள்ளடங்கும் அதிகாரங்களில் பாராளுமன்றம் சட்டங்களை உருவாக்க முடிதல்.

05. மாகாண சபைகளுக்கு மாகாண சபை பட்டியலில் குறிப்பிடப்பட்ட விடயங்களும் பணிகளும் தொடர்பில் தமது விருப்பத்திற்கமைய துணை நிலைச் சட்டங்களை உருவாக்கக் கூடியதாக இருத்தல்.

06. ஒத்தியங்கும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் துணை நிலைச் சட்டங்களை மத்திய அரசின் அனுமதியோடு மாகாண சபை உருவாக்க முடியும்.

07. மாகாண சபைகளுக்கு துணை நிலைச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டிருப்பினும் அது வரையறைக்கு உட்பட்டதாகவே வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளில் உருவாக்கப்படும் துணை நிலைச் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு இயைபுடையதாக இருத்தல் வேண்டும்.

08. மாகாண சபை பட்டியல், ஒத்தியங்கும் பட்டியல் ஆகிய பட்டியல்களில் குறிப்பிடப் படாத எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசிற்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

09. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களை நீக்கவோ அல்லது திருத்தவோ அல்லது மாற்றவோ அல்லது மத்திய அரசுக்கு தேவையாக இருப்பின் அதற்காக பாராளுமன்றத்தின் $^2/_3$ பெரும்பான்மையைக் கொண்ட விசேட அனுமதியொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(உ - ம்) திவி நெகும சட்டம் (2012) பாராளுமன்றத்தில் $^2/_3$ பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

10. உள்ளூராட்சி மன்றங்களின் விடயங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வை மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

11. மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டுள்ள அதிகாரம் ஆளுநர் மூலம் நேரடியாகவும் அல்லது மாகாண சபையின் அமைச்சரவை அல்லது மாகாண சபையின் அதிகாரிகள் மூலமும் நடைமுறைப்படுத்தப்படும்.

12. ஆளுநர் அவரது சுயவிருப்பின்படி நடைமுறைப்படுத்தும் பணிகள் தவிர ஏனைய சகல சந்தர்ப்பங்களின்போதும் மாகாண அமைச்சரவையின் ஆலோசனைக்கமைய செயற்படுதல் வேண்டும்.

பகுதி III

08. (அ) பேராசிரியர் கிறிஸ்பேர்க் என்பவரின் ''முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரத்தை'' குறிப்பிட்டு அதன்படி நிலைகளை ஆராய்க.

(ஆ) முரண்பாட்டுத் தீர்வுக்கான ஊடகங்களில் ''சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்'' மற்றும் ''சமாதானத்தை மீளக்கட்டியெழுப்புதல்'' எனும் எண்ணக்கருக்களின் வகிபங்கை ஆராய்க.

(அ) பேராசிரியர் கிறிஸ்பேர்க் என்பவரின் ''முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரத்தை'' குறிப்பிட்டு அதன்படி நிலைகளை ஆராய்க.

மோதல் கல்வியின் முன்னோடிகளில் ஒருவரான அமெரிக்காவின் லூவிஸ் கிறிஸ்பேர்க் ''மோதல் வாழ்க்கை சக்கரம்'' பல படிநிலைகளை கொண்டது என குறிப்பிடுகின்றார்.

முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரம் (Conflict Life Cycle)



01. முரண்பாட்டுக்கான காரணம் / நிபந்தனைகள் காணப்படல்.

முரண்பாட்டின் ஆரம்ப கட்டமாகும். முரண்பாடொன்று ஏற்படுவதற்கு நிபந்தனைகள் காணப்படுதலும் அதனை கண்டு பிடிக்கப்படாமல் இருப்பது இதன் பிரதான அம்சமாகும். முரண்பாட்டுக்கான காரணி கண்டுபிடிக்கப்படாமையே முரண்பாடு ஏற்படுவது, அதற்கான தீர்வு பெற்றுக் கொள்ளாமையே முரண்பாடு ஏற்படுவதற்கான காரணியாகும்.

02. முரண்பாடு மேலெலல்.

முரண்பாடு ஏற்படுவதற்கான பின்னணியை அறியாமையால், அதன் மூலம் மக்களின் தேவைகள், நோக்கங்கள், விருப்பங்கள் என்பன பூர்த்தி செய்யாமையால் மக்களுக்கு ஏற்படுகின்ற எதிர்விளைவுகளின் விரக்தி, பாரபட்சம், அதிருப்தி என்பவற்றின் காரணமாக ஒரு கட்டமைக்கப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் முரண்பாடு உருவாக்கப் படுவதாகும்.

03. முரண்பாட்டுத் தீவிரநிலை (உக்கிர நிலை) அடைதல்.

முரண்பாட்டுத் தரப்பினரால் தமது இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் வன்முறை, யுத்தம், கொலை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், கடத்தல் என்பவற்றின் மூலம் முரண்பாடு தீவிர நிலைக்கு கொண்டு செல்லுவதாகும். பொதுவாக இப்படி நிலை ஒரு நாட்டினுடைய உள்ளக முரண்பாடுகளில் அதிகம் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக உள்ளது. இக்கட்டத்தில் முரண்பாடு சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ளுவதற்கான வாய்ப்பு குறைவாகும்.

04. மோதலின் தீவிரநிலை அற்றுப் போதல்.

முரண்பாடு தீவிர நிலையை அடைந்ததன் பின்னர் முரண்படும் தரப்பினரிடையே ஒரு கட்டத்தில் தீவிர நிலையை குறைத்துக் கொள்ளும் நிலை ஏற்படும். அதாவது, முரண்பாடு

கொண்டு செல்லும் வளம், திறன் என்பன குறைவடைதல், சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள், முரண்பாடுக்கான மக்களின் ஒத்துழைப்பு குறைவடைதல் என்பவற்றின் மூலம் முரண்பாட்டு தரப்பினரை ஒரு தலைப்பட்சமாக தீர்வினை நோக்கி செல்லுவதால் மோதலின் தீவிர நிலை குறைவடைந்து, மோதல் கீழ் நிலைக்குச் செல்லுகின்றன.

05. முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டு வரல்.

ஒரு நாட்டின் உள்ளக முரண்பாடு சிவில் யுத்தமாக மாறி அதன் மூலம் அம்மோதல் நீண்டகால மோதலாக மாறுகின்றது. இம் முரண்பாட்டை முடிவுக்கு கொண்டு வருதல் நீண்டகால செயற்பாடாக மாற்றமடைகின்றது. இம் முரண்பாடானது யுத்தத்தின் மூலம் ஒரு தரப்பினர் வெற்றியடைகின்றனர். இதனால் தோல்வியடைந்த தரப்பினரின் உரிமை, கொள்கை, அரசியல் கோரிக்கைகள் என்பன நிறைவேற்றப்படல் வேண்டும். இப்பின்னணியிலே குறித்த முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டு வர இரு தரப்பினரும் சமாதான பேச்சுவார்த்தை, சமாதான உடன்படிக்கை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பவற்றினூடாக கலந்துரையாடல்கள் மூலம் இரு தரப்பினரும் சில விட்டுக் கொடுப்புக்களை செய்து சமரச சமாதானத்தை ஏற்படுத்துவதனூடாக முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டு வருவதை இப்படிநிலை குறிப்பிடுகின்றது.

(ஆ) முரண்பாட்டுத் தீர்வுக்கான ஊடகங்களில் ''சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்'' மற்றும் ''சமாதானத்தை மீளக்கட்டியெழுப்புதல்'' எனும் எண்ணக்கருக்களின் வகிபங்கை ஆராய்க.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் (Peace Building)

மோதல் மற்றும் சமாதானக் கற்கையில் சமாதானம் என்ற எண்ணக்கரு பல வழிகளில் வரையறுக்கப்படுகின்றது. சமாதானம் எனும் பதம் ஆங்கிலத்தில் Peace என அழைக்கப்படும். Pax எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்தே தோற்றம் பெற்றதாகும். இதன் அர்த்தம் உடன்படுதல், இணங்குதல் என்ற கருத்தை கொடுக்கும். நல்லெண்ணம், அமைதி, விடுதலை, சுதந்திரம் என்ற பெயர்களிலும் சமாதானம் அழைக்கப்படுகின்றது. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் எண்ணக்கருவானது 30 ஆண்டுகளுக்குப் முன்னர் சமாதானக் கல்வித் துறையில் தோற்றம் பெற்ற ஒரு எண்ணக் கருவாகும். 1964களில் ஜொஹான் கல்தூங் தனது ''சமாதானத்திற்கான மூன்று அணுகுமுறைகள்: சமாதானத்தைக் காத்தல், சமாதானத்தினை ஏற்படுத்தல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்'' என்ற கட்டுரையில் இவ் எண்ணக்கருவினை பயன்படுத்தி இருந்தார். இக்கட்டுரையில் அவர் சமாதானமானது இரு வேறுபட்ட வழிமுறைகளில் தோற்றம் பெறுவதாக குறிப்பிடுகின்றார்.

1. எதிர்மறை சமாதானம் (Negative Peace)
2. நேர்க்கணிய சமாதானம் (Positive Peace)

1. எதிர்மறை சமாதானம் (Negative Peace)

எதிர்மறை சமாதானம் என்பது வன்முறை மற்றும் யுத்தமற்ற நிலையில் உருவாகும் சமாதானமாகும். துப்பாக்கி ரவைகள், வெடிகுண்டுகள், கிளைமோர் தாக்குதல்,

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களினால் மக்கள் இறக்கவில்லையாயின் அது எதிர்மறை சமாதானமாகும். இது சமாதானம் என்ற எண்ணக்கருவை உண்மையில் உள்ளடக்காதது ஆகும். பொதுவாக எதிர்மறை சமாதானம் என்பது அந்நிய படைகள் அல்லது குறித்த நாட்டில் உள்ளக கிளர்ச்சிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அரச படைகள் வன்முறையில் ஈடுபடாத ஓர் நிலையைக் குறிப்பதாகும். சண்டைகளை நிறைவு செய்வதே சமாதானத்தை ஏற்படுத்துவதன் நோக்கமாக இருப்பின் எதிர்மறையான சமாதானத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாக அமையும். இதனை மோதல் தீர்வின் மூலம் அடையலாம்.

2. நேர்க்கணிய சமாதானம் (Positive Peace)

நேர்க்கணிய சமாதானம் என்பது எதிர்மறை சமாதானம் என்பதை விட பரந்த எண்ணக் கருவாகும். நேரடியான உடல் சார் வன்முறையின்மை, சமுதாய நியாயம், அந்நிய மக்களுடன் புரிந்துணர்வு பரவலடைதல், சமாதான கற்கை, பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளுதல், சமூக அநீதிகள் மற்றும் பாரபட்சம் நீக்கி சமூகத்தின் கட்டமைப்பு சார் வன்முறைகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இல்லாது செய்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் சமாதானமாகும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்ற எண்ணக்கருவானது 1964களில் ஜொஹான் கல்தூன் தனது ''சமாதானத்துக்கான மூன்று ஆணுகுமுறைகள்: சமாதானத்தைக் காத்தல், சமாதானத்தை ஏற்படுத்துதல், சமாதானத்தை கட்டியெழுப்புதல்'' என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பினும் 1990களுக்குப் பின்னரான காலப்பகுதி யிலேயே செல்வாக்குப் பெற்றது எனலாம். இவ் எண்ணக்கரு சமாதான கலாசாரத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டதாகும். கல்தூனின் பார்வையில் யுத்தத் திற்கான காரணிகளை அகற்றி நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கும் மோதல் முகாமைத்துவம், சமாதானம் என்பவற்றுக்கான உண்மையான திறமை விருத்தி செய்வதிலும் அழுத்தம் கொடுப்பது சமாதானத்தை கட்டியெழுப்புதல் என வாதிடுகிறார்.

இவ் எண்ணக்கருவில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், சமாதானத்தை ஏற்படுத்துதல், சமாதானத்தைக் காத்தல் போன்ற முக்கிய இடம் வகிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் வேறுபட்ட கருத்துக்களில் ஆராயப்படுகின்றன. இவ்வெண்ணக்கரு ஐ. நா. முன்னாள் செயலாளர் நாயகம் பூத்ரோஸ் பூத்ரோஸ் காலி என்பவரால் 1992ல் அறிமுகப்படுத்தப்பட்ட ''சமாதானத்திற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம்''(An Agenda for Peace) என்ற வேலைத் திட்டதினூடாகவே சர்வதேச ரீதியில் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் சமாதானத்தை ஏற்படுத்துதல், கட்டியெழுப்புதல், காத்தல் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் பற்றிய எண்ணக்கருவுடன் தொடர்புடைய மற்றொரு சர்வதேச பிரபல்யம் வாய்ந்த அமெரிக்க சமூகவியல் அறிஞர் ஜோன் போல் லெட்ராஜ் ஆவார். இவர் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது பற்றிய வேறுபட்ட தொரு கருத்தினை முன்வைத்துள்ளார். சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் பற்றிய அவரது மும்மட்ட அணுகுமுறை என குறிப்பிடப்படுகின்றது. அதாவது, வெவ்வேறு மட்டத்தில் உள்ள

தரப்புக்களின் பங்களிப்புடன் நிலையான சமாதான செயன்முறை ஒன்றினை கட்டியெழுப்பு வதை குறிப்பிடுகின்றது. இவரது கருத்தின்படி மும்மட்டச் செயற்பாட்டாளர்களாக பின்வருபவர்களை அடையாளப் படுத்துகின்றார்.

1. உயர் மட்டம்
2. இடை மட்டம்
3. சமூக மட்டம்

1. உயர் மட்டம் :

உயர் மட்டம் என்பவர்கள் அரசியல் வாதிகள், இராணுவத் தலைவர்களை உள்ளடக்கியதாகும். உள்ளூர் இன மோதல்கள், சிறுபான்மை பிணக்குகளை தீர்ப்பதில் முக்கியத்துவம் உடையவர்களாக இருப்பதுடன் இவர்கள் சிறியதொரு எண்ணக்கை கொண்டவர்களாக இருப்பர். மோதல் தீர்த்தல் செயன்முறையில் இறுதித் தீர்மானம் எடுப்பவர்களாகவும் சமாதான உடன்படிக்கை தொடர்பில் அங்கீகரித்து சமாதானத்தை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகிப்பவர்களாவர்.

2. இடை மட்டம் :

இடை மட்டம் என்பவர்கள் சமூகத்தில் பிரபல்யம் வாய்ந்தவர்கள், மதிப்பு மிக்கவர் களைக் குறிப்பிடுகின்றது. துறைசார்ந்த தலைவர்கள், கல்விமான்கள், சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், வர்த்தக பிரமுகர்கள் போன்றோர் உள்ளடங்குவர். இவர்கள் உயர் மட்டத் தலைவர்கள், சமூக மட்டவர்களிடையே நெருக்கமாகத் தொழிற்பட்டு இவ்விரு பிரிவினர்களுக்குமிடையே இணைப்புப் பாலமாகத் தொழிற் படுவதால் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் இவர்களின் பங்கு அளப்பரியதாகும்.

3. சமூக மட்டம் :

சமூக மட்டம் என்பவர்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சாதாரண மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவர்கள். உள்ளூர் மோதலில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் தீர்மானம் எடுக்கும் முயற்சியில் இவர்களது பங்களிப்பு அவசிய மானதாகும்.

சமாதானத்தை மீளக்கட்டியெழுப்புதல்

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சி நிரலின் பிரதான அம்சமாக மீள் கட்டமைத்தல் என்ற செயன்முறை கருதப்படுகின்றது. இதனை புரிந்துணர்வு ஏற்படுத்தல் எனவும் அழைக்கப்படும். நீண்டகாலமாக இடம்பெற்ற வன்முறையுடனான மோதலை மோதலுடன் தொடர்புடைய அனைத்து தரப்புக்களும், மோதலினால் பிளவுபட்ட மக்களும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைதல் என்பதே மீள கட்டமைத்தல் என குறிப்பிடலாம். இவ் ஒன்றிணைவு செயற்பாட்டினுள் முன்னர் காணப்பட்ட பகைமை, வைராக்கியம், பரஸ்பர சந்தேகம் என்பவற்றை கைவிட்டு நம்பிக்கை, கௌரவம் தொடர்பான உணர்வுகளின் கீழ் அமைந்த சாதகமான தொடர்புகளை கட்டியெழுப்புவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பது மோதலுக்கு முந்திய மற்றும் பிந்திய மீள் கட்டமைப்பு பற்றி Barnett உம் அவரது குழுவினரும் மீள் கட்டமைப்பின் பின்வரும் 3 பரிமாணங்களாக வகைப்படுத்துகின்றனர்.

1. **மோதலுக்குப் பிந்திய வலயங்களை உறுதிப்படுத்தல் :**
   மோதலுக்குப் பிந்திய நிலையை உறுதிப்படுத்தல் மற்றும் ஆயுதக் களைவு, மீள் ஒன்று திரட்டல், மீள் ஒருமைப்பாடு என்பவற்றின் மூலம் முன்னாள் போராளிகள் மீண்டும் யுத்தத்துக்கு திரும்பாமல் இருப்பதை உறுதிப்படுத்தி, முன்னாள் போராளிகளை சிவில் சமூகத்துடன் மீள் இணைத்தல் என்பன இதனுள் அடங்கும். இதனை மீள் கட்டமைப்பினை ஏற்படுத்துவதில் உளவியல் ரீதியான வழிமுறை எனவும் அழைக்கப்படும்.

2. **அரச நிறுவனங்களை சீரமைத்தல் :**
   அடிப்படை பொதுத் தேவைகளை வழங்குவதற்கும் அரச சட்டத்தன்மையினை அதிகரிப்பதற்கும் ஏற்ற விதத்தில் அரச கொள்திறனை கட்டியெழுப்பும் செயற்பாடுகள் இங்கு உள்ளடக்கப்படுகின்றது. அதாவது, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல், ஜனநாயக மற்றும் பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்களை ஸ்தாபித்தல், கல்வி மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுத்தல் என்பவற்றின் மோதலில் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் மீள் கட்டமைப்பு செயன்முறையாகும். இதனை அரசியல் செயன்முறை மூலமான மீள் கட்டமைப்பு எனவும் அழைக்கப்படும்.

3. **சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை கையாளுதல் :**
   மோதல்களை சமாதான முறையில் கையாளும் வகையில் சமூக பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கும் மோதலுக்குப் பின்னரான சமூகத்திறனைக் கட்டியெழுப்பும் வகையில் செயற்படுத்தப்படும் மீள் கட்டமைப்பாகும். அதாவது, உளவள ஆலோசனை, பெண்கள் வலுவூட்டல், சிவில் சமூகத்தை மேம்படுத்தல், மனித உரிமைகளை பாதுகாத்தல், சமூகங்களுக்கு மத்தியில் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதன் மூலம் மோதலுக்குப் பிந்திய மீள் கட்டமைப்பை ஏற்படுத்தும் செயன்முறையாகும். இதனை சமூக செயற்பாடுகளைக் கொண்ட மீள் கட்டமைப்பு செயன்முறை எனவும் அழைக்கப்படும்.

   மீள் கட்டமைத்தல் செயன்முறையில் உண்மையைக் கண்டறிதல், நிலைமாறு கால நீதியைப் பெற்றுக் கொடுத்தல், சமாதானம் என்பன இன்றியமையாததாகும். சர்வதேச அரங்கில் பல நாடுகளில் மோதலுக்குப் பின்னர் மீள் கட்டமைப்பு செயன்முறை நடைமுறைப்படுத்தி இருப்பினும் தென்னாபிரிக்காவில் அனுபவம் சர்வதேச ரீதியில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றது.

   உண்மையைக் கண்டறிதல் என்பது மோதல் ஏற்பட்ட காலத்தில் நடைபெற்ற வன்முறை செயற்பாடுகளினுள் உண்மையில் என்ன நடைபெற்றது என அனைவரும் திறந்த மனதில் அறிந்து கொண்டு அதனடிப்படையில் சுகப்படுத்தல் செயன்முறையை கட்டியெழுப்புவதாகும். இதே பொறிமுறையை இலங்கையில் 2009ம் ஆண்டு மே மாதம்

யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்ததன் பிற்பாடு சர்வதேச நாடுகளின் அழுத்தத்தினால் இலங்கையில் உண்மையைக் கண்டறியும் நோக்குடன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) நியமிக்கப்பட்டு நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்ட போதிலும் அவ்அறிக்கையை சரிவர நிறைவேற்ற முடியவில்லை என்பது விமர்சனத்திற்கு உட்பட்டதொன்றாக காணப்பட்டது.

இந்நிலையில் தென்னாபிரிக்காவில் 1995ல் உருவாக்கப்பட்ட உண்மையை கண்டறிதல் மற்றும் மீள் கட்டமைத்தலுக்கான ஆணைக்குழு (TRC) உண்மையைக் கண்டறிதல் எனும் செயன்முறைக்கு சிறந்த உதாரணமாக எடுத்துக் காட்டப்படுகின்றது. அதாவது, தென்னாபிரிக்காவில் சிறுபான்மையாக வாழ்ந்த வெள்ளை இனத்தவர்களின் கையில் ஆட்சி காணப்பட்ட சந்தர்ப்பத்தில் பெரும்பான்மை இனமாகக் காணப்பட்ட கறுப்பினத்தவர் களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை, இனப் பாகுபாடு, அநீதி தொடர்பில் உண்மை கண்டறியும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஆணைக்குழு (TRC) அறிக்கையின்படி குற்றவாளிகளான வெள்ளை இனத்தவர்களுக்கு தண்டனை வழங்கும் சம்பிரதாய முறைக்குப் பதிலாகவும் பழிதீர்க்கும் சட்டத்திற்குப் பதிலாகவும் சுகப்படுத்தும் நீதி முன்வைக்கப்பட்டது. அதாவது குற்றவாளிகளாக வெள்ளை இனத்தவர்களுக்கு தண்டனை வழங்காது பாதிக்கப்பட்ட கறுப்பின மக்களிடம் மன்னிப்பு கோருவதும் பாதிக்கப்பட்ட கறுப்பின மக்கள் மன்னிப்பு வழங்குவதன் மூலம் நீதி நிலைநாட்டும் பொறிமுறையாகும். இரு தரப்பினரிடையே தொடர்ச்சியான சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள், தன்னுணர்வு கலந்துரையாடல்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதனை முன்னின்று வழிநடாத்தியவர் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஆவார். இப் பொறிமுறை சரிவர நிறைவேற்றப்பட்டமையினால் தென்னாபிரிக்காவில் மீண்டுமொரு மோதல் இடம்பெறாது சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, நல்லிணக்கத்துடன் சமாதான முறையில் அம் மக்கள் வாழுவதை குறிப்பிடலாம்.

09. பின்வருவனவற்றில் இரண்டினைப் பற்றி கருத்துரைக்குக.

(அ) ஐக்கிய அமெரிக்க சமஷ்டி முறையின் பண்புகள்

(ஆ) இந்திய சமஷ்டி முறையின் விசேட பண்புகள்

(இ) சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையில் காணப்படும் கூட்டாண்மை சமஷ்டிப் பண்புகள்

(அ) ஐக்கிய அமெரிக்க சமஷ்டி முறையின் பண்புகள்

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியலமைப்பு தற்கால உலகின் முதல் சமஷ்டி அரசியலமைப்பாக விளங்குகின்றது. அத்துடன் சமஷ்டி அரசு முறைக்கே எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியலமைப்பு உலகிலேயே மிக நிறைவான சமஷ்டி அரசியலமைப்பு என்று ஸ்ட்ராங் என்பவர் கூறுகிறார். பதின்மூன்று மாநிலங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சமஷ்டி காலப் போக்கில் வளர்ந்து இன்று ஐம்பது மாநிலங்களைக் கொண்டு இயங்கும் பெரும் சமஷ்டியாக வளர்ந்துள்ளது. அமெரிக்க சமஷ்டி முக்கியக் கூறுகளும் பின்வருமாறு,

1. **அதிகாரப் பங்கீடு (Division of Power) :**
ஒரு சமஷ்டியின் முக்கியகூறு மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே காணப்படும் அதிகாரப் பங்கீட்டு முறையாகும். இந்த அதிகாரப் பங்கீட்டு முறை சிறப்பான முறையில் அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சமஷ்டியில் ஐம்பது மாநிலங்கள் இடம் பெறுகின்றன. சில குறிப்பிட்ட அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும் சில குறிப்பிட்ட அதிகாரங்கள் மாநில அரசாங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் (Tresidual Powers) மாநிலங்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சமஷ்டியின் சிறப்பு அம்சமாகும்.

2. **வலிமையான மைய அரசு (Strong Central Government) :**
அதிகாரப் பங்கீட்டு முறையில் கூட்டாட்சி அரசாங்கம் ஓரளவு வலுவிழந்து காணப் பட்டாலும், காலப்போக்கில் அதன் அதிகாரங்கள் வளர்ந்து பெருகிவிட்டன. தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய மார்ஷலின் பொதிந்துள்ள அதிகாரங்கள் (Implied Powers) என்ற கருத்துப்படி, அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் உள்ளூரக் காணப்படும் அல்லது பொதிந்துள்ள அதிகாரங்களை மத்திய அரசுக்கே அளித்துள்ளது. இதனால் அரசியலமைப்பில் கூறப்படாத சில அதிகாரங்களைப் பெற்று மைய அரசு வலுவடைந்துள்ளது.

அரசியலமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட பல்வேறு திருத்தங்களும் மத்திய அரசை வலுவடையச் செய்துள்ளது. மேலும் மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி உதவி வழங்கி அதன் மூலம் தான் விரும்பும் திட்டங்களை நிறைவேற்றுகின்றது. ஸ்தல ஆட்சி நிறுவனங்கள் மற்றும் பல நிர்வாகக் கூறுகள் பெறும் மானியங்கள் கூட்டாட்சி அரசின் வலிமையை அதிகரித்துள்ளன. வொஷிங்டன், லிங்கன், ரூஸ்வெல்ட், கென்னடி போன்ற வலிமையான குடியரசுத் தலைவர்களின் துணிவான செயல்களாலும் மைய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பெருகி வலிமையடைந்துள்ளன. இவ்வாறு கூட்டாட்சி கூறுகளில் ஒன்றான வலிமையான மைய அரசு அமெரிக்காவில் காணப்படுகின்றது.

3. **சுதந்திரமான நீதித்துறை (Independent Judiciary) :**
அமெரிக்காவில் நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுகிறது. தலைமை நீதிமன்றம் கூட்டாட்சி அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறது. அரசியலமைப்புக்கு விளக்கம் அளிக்கிறது. அத்துடன் கூட்டாட்சி சட்டமோ, எந்த மாநில சட்டமோ அரசியலமைப்புக்கு முரணாக இருந்தால் அதைச் செல்லாது என்று கூறும் நீதிப்புனராய்வு அதிகாரம் கொண்டுள்ளது. அதன் சுதந்திரத் தன்மையில் காங்கிரசோ, குடியரசு தலைவரோ தலையிட முடியாது. இதுவும் அமெரிக்கக் கூட்டாட்சியின் முக்கிய கூறு ஆகும்.

4. **அரசியலமைப்பின் மேன்மை (Supremancy of the Constitution) :**
கூட்டாட்சியின் அடுத்த முக்கியக்கூறு அரசியலமைப்பின் மேன்மையாகும். அமெரிக்காவில் அரசியலமைப்பே உயர்வானதாக கருதப்படுகிறது. அதனை காங்கிரசா, குடியரசு தலைவரோ எளிதில் திருத்திவிட முடியாது. அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் காங்கிரஸின் இரு அவைகளின் முன் கொண்டுவரப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும்

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட வேண்டும். அதன் பின்னர் 38 மாநிலங்களின் ஆதரவு தேவை. எனவே இதுவரை 26 திருத்தங்கள்தான் கொண்டு வரப்பட்டுள்ளன.

5. மாநிலங்களின் அரசியலமைப்புகள் :

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அங்கம் வகிக்கும் மாநிலங்கள் அதற்கு முன்னதாகவே தனித்தனியாக ஆளப்பட்டு வந்தவை. எனவே அவற்றுக்கென தனித்தனி அரசியலமைப்புகள் உண்டு. அதனால் ஒவ்வொரு மாநிலமும் தனது மாநில அரசியலமைப்பின்படி தன் எல்லைக்குட்பட்ட மக்களை ஆளும் உரிமை பெற்று விளங்குகிறது. மாநில மக்களுக்கு அமெரிக்க குடியுரிமை தவிர மாநிலக் குடியுரிமையும் உண்டு இந்த இரட்டைக் குடியுரிமை அமெரிக்க கூட்டாட்சியின் சிறப்பம்சமாகும். கூட்டாட்சியில் சேர்ந்துவிட்ட மாநிலங்கள் பிறகு பிரிந்து செல்ல உரிமை கிடையாது.

6. மாநிலங்களுக்கிடையே காணப்படும் சமநிலைத் தன்மை:

அமெரிக்க கூட்டாட்சியின் அடுத்த சிறப்பு அம்சமாகக் கருதப்படுவது ஐம்பது மாநிலங்களும் சம உரிமைகள் உள்ள மாநிலங்களாக கருதப்படுவது ஆகும்.

வேர்ஜியா போன்ற பழைய மாநிலமாக இருந்தாலும் சரி, ஹவாய் (1959ல் தான் சேர்ந்தது) போன்ற புதிய மாநிலங்களானாலும் சரி, மற்றும் அலாஸ்கா போன்ற பெரிய மாநிலமானாலும் சரி, ரோட் ஐலன்ட் போன்ற சிறிய மாநிலங்களானாலும் சரி, எல்லா மாநிலங்களும் சம உரிமை கொண்டவைகளாக பாவிக்கப்படும். அமெரிக்க காங்கிரஸின் மேல் சபையான செனட்டிற்கு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதின் மூலம் மாநிலங்கள் சம பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. அமெரிக்கக் கூட்டாட்சியை அழிக்க முடியாத மாநிலங்களின் அழிக்க முடியாத கூட்டரசு என்று அழகிய சொற்களால் அந்த நாட்டு தலைமை நீதி மன்றம் வர்ணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஆ) இந்திய சமஷ்டி முறையின் விசேட பண்புகள்

1950.01.26 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பே இந்திய அரசாங்க முறைமையின் அடித்தளமாகும். அவ் யாப்பின் படி தற்கால இந்தியா 29 மாநிலங்களையும் மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் நிலவும் 7 யூனியன் பிரதேசங்களையும் கொண்டுள்ளது.

இந்திய அரசியல் யாப்பு இந்தியாவில் ஒரு சமஷ்டி முறையின் அரசாங்கம் என அறிமுகம் செய்துள்ளது. எனினும் யாப்பின் முதலாவது உறுப்புரை இந்தியா ஓர் ஒன்றிய அரசு என குறிப்பிடுகிறது. அதன்படி அங்கு அது ஒரு சமஷ்டி அரசாங்க முறை என்று குறிப்பிடப்படுவ தில்லை. ஆனால் மரபுரீதியான சமஷ்டி அரசாங்க முறையில் உள்ள பண்புகளை இந்திய அரசாங்க முறையிலும் காணமுடிகிறது. அவை பின்வருமாறு

உள்ளடக்கம்

இந்திய ஒன்றிய அரசாங்க முறையில் பின்வரும் பண்புகள் காணப்படுகின்றன.

1. எழுதப்பட்ட யாப்பு நிலவுதல்

இந்திய அரசியல் யாப்பு உலகிலேயே மிக நீண்ட யாப்பாகும். இது 395 உறுப்புரைகளையும் 9 அனுபந்தங்களையும் 3 இணைப்புகளையும் 101 திருத்தங்களையும் (இறுதித் திருத்தம் 2017.07.01 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது) கொண்டதாகும்.

2. யாப்பின் நெகிழ்ச்சித் தன்மை

ஓர் அரசியல் யாப்பின் நெகிழும் நெகிழாத் தன்மையானது அது திருத்தப்படும் முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. சட்டத்துறையின் சாதாரண பெரும்பான்மையின் மூலம் அரசியல் யாப்பு திருத்தப்படுமாயின் அது நெகிழும் யாப்பு என்றும் விசேட பெரும்பான்மையின் மூலம் திருத்தப்படுமாயின் அது நெகிழா யாப்பு என்றும் கருதப்படுகின்றது. இந்திய அரசியல் யாப்பினைத் திருத்துவதற்கு பின்வரும் மூன்று ஏற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

- மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறையின் சாதாரண பெரும்பான்மையின் மூலம் மட்டும் திருத்தப்படக்கூடிய உறுப்புரைகள்.
- மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறையின் இரு மன்றுகளிலும் வெவ்வேறாக விசேட பெரும்பான்மையின் (2/3) மூலமும் அல்லது மாநில அரசுகளுள் அரைவாசிக்கு மேற்பட்ட அரசுகளின் அங்கீகாரத்தோடும் நிறைவேற்றக்கூடிய உறுப்புரைகள்.
- மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறையின் இரு மன்றுகளிலும் விசேட பெரும்பான்மையின் (2/3) மூலம் திருத்தப்படக்கூடிய உறுப்புரைகள்.

3. அரசியல் யாப்பின் உயர்தன்மை

யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி இந்திய எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் உயர் சட்டம் அரசியல் யாப்புச் சட்டமாகும். மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்கும் அச்சட்டத்தின் மூலமே அதிகாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன. மேலும் அரசியல் யாப்புச் சட்டத்திற்கு மேலால் இருக்கக்கூடிய எந்தச் சட்டமும் இந்தியாவில் காணப்படமாட்டாது என்று யாப்பு குறிப்பிடுகின்றது.

4. மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையில் அதிகாரம் பங்கீடு செய்யப்பட்டிருத்தல்.

அரசியல் யாப்பின் மூலம் 3 அதிகாரப் பட்டியல்களின் கீழ் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையில் அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் -
97 விடயங்கள் (தற்போது அவ்விடயங்கள் 100 வரை அதிகரித்துள்ளன.)

மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள் -
66 விடயங்கள் (தற்போது அவ்விடயங்கள் 61 வரை குறைந்துள்ளன.)

ஒத்தியங்கு அதிகாரங்கள் -
47 விடயங்கள் (தற்போது அவ்விடயங்கள் 52 வரை அதிகரித்துள்ளன.)

மேற்குறிப்பிட்ட 3 அதிகாரப் பட்டியல்களுக்கு மேலதிகமாக யாப்பின் மூலமும் மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

5. **அரசியல் யாப்பினைப் பாதுகாக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்பட்டிருத்தல்.**
இந்திய அரசியல் யாப்பானது அந்த யாப்பினைப் புனராய்வு செய்யும் அதிகாரத்தை உயர் நீதிமன்றத்திற்கு வழங்காவிட்டாலும் உயர் நீதிமன்றம் அவ்வதிகாரத்தை நடைமுறைப்படுத்துகிறது. அதேபோன்று மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நிறைவேற்றும் சட்டங்கள் யாப்புக்கு இசைவற்றவையாயின் அவற்றை செல்லுபடி அற்றதாக்கும் அதிகாரமும் இந்திய உயர் நீதிமன்றுக்கு உண்டு. இதன் மூலம் அரசியல் யாப்பின் பாதுகாவலனாக உயர்நீதிமன்றம் செயற்படுகிறது.

6. **இரட்டை அரசியல் முறைமை நிலவுதல்.**
இந்தியாவில் மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மாநில அரசாங்கங்களின் ஆட்சி என இரு பகுதிகள் உண்டு. அவற்றிற்கு அரசியல் யாப்பின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் சுயாதீன அதிகாரம் உண்டு.

7. **மத்திய அரசாங்கத்தில் மாநில அரசாங்கங்களிற்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறுதல்.**
சமஷ்டி அரசாங்க முறையில் மத்திய அரசாங்கத்தில் மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவம் மத்திய சட்டத்துறையின் 2 ஆம் மன்றின் மூலம் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் 250 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் இரண்டாம் மன்றம் காணப்படுகிறது. அவ்வுறுப்பினர் களுள் 238 பேர் மாநிலங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஆனால் ஐக்கிய அமெரிக்காவைப் போன்று சகல மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

8. **ஒற்றையாட்சிப் பண்புகள் கலந்த சமஷ்டி முறையாக இருத்தல்**
இந்திய அரசியல் யாப்பு ஒற்றையாட்சிப் பண்புகளையும் உட்கொண்டு வகுக்கப்பட்டிருப் பதனால் அந்நாட்டின் சமஷ்டி முறை ஒற்றையாட்சிப் பண்புகள் கலந்த முறையினதாகக் காணப்படுகின்றன. அவ்வாறு கலந்துள்ள ஒற்றையாட்சிப் பண்புகள் பின்வருமாறு.
- அரசியல் யாப்பின் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருத்தல்.
- அவசர கால நிலைகளில் சமஷ்டி முறை ஒற்றையாட்சி முறையினதாக மாறுதல்.
- மாநில அரசுகளைத் தற்காலிகமாக கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் பெற்றிருத்தல்.
- இந்திய நிலப்பிரதேசத்தின் உரிமை மத்திய அரசுக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல்.
- ஐக்கிய நீதிமன்ற முறையும் ஐக்கிய சிவில் சட்ட முறைமையும் நிலவுதல்.
- அனைத்திந்திய பகிரங்க சேவை
- ஒத்தியங்கு பட்டியலில் இடம்பெறும் விடயங்கள் பற்றி மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் சட்டவாக்கம் செய்ய முடியுமாயினும் அரசியல் யாப்பின் உறுப்புரை 254 இன் படி மத்திய அரசாங்கத்தின் சட்டத்திற்கும் மாநில அரசாங்கங்களின் சட்டத்துக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லுபடியாகுதல்.
- மத்திய அரசாங்கத்தின் காங்கிரஸ் பிறப்பிக்கும் சட்டங்களின் மூலம்

அ. மாநில அரசாங்கங்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சட்டங்களோடு மேலதிக சட்டங்களை சேர்க்கமுடிதல்.

ஆ. மாநில சட்டங்களை திருத்த முடிதல்.

இ. மாநில சட்டங்களை முழுமையாக நீக்குவதற்கும் அல்லது நடைமுறைப்படுத்தப் படும் இயல்பினை மாற்றுவதற்கும் முடிதல்.

- நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரம் மத்திய அரசுக்கு உரியதாக இருத்தல்.

மேற்குறிப்பிட்ட விடயங்களின் படி இந்திய சமஷ்டி முறைமையில் ஒற்றையாட்சிப் பண்பு மிகவும் பலமான முறையில் காணப்படுகின்றது எனக்கூறலாம்.

முடிவுரை

மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் ஒரு சமஷ்டி அரசாங்க முறைக்குரிய சகல பண்புகளும் இந்திய அரசாங்க முறையிலும் தென்படுகின்றன எனக் கூறலாம். எனினும் இந்திய சமஷ்டி முறையின் ஒரு விசேட பண்பு என்னவெனில் சமஷ்டி மூலக் கொள்கைகளை தாண்டிச் சென்று ஒற்றையாட்சிப் பண்புகள் மேலெழுந்து காணப்படுவதாகும். இது அரசியல் யாப்பினை வரைந்தோர் வேண்டுமென்றே உருவாக்கிய நிலையாகும் என்று அரசியல் யாப்பு நிர்ணய சபையின் தலைவரான கலாநிதி பீ.ஆர். அம்பேத்கார் குறிப்பிடுகின்றார். இதன் காரணமாக இந்திய சமஷ்டி முறை ஒரு பாதி சமஷ்டி முறையாகும் என அறிஞர்கள் அறிமுகம் செய்துள்ளனர்.

(இ) சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையில் காணப்படும் கூட்டாண்மை சமஷ்டிப் பண்புகள்

உலகிலுள்ள கூட்டாட்சிகளும் சிறப்பு வாய்ந்த கூட்டாட்சியாக சுவிட்சர்லாந்து விளங்குகின்றது. சுவிஸ் புது மாதிரியான அரசியல் முறைமையும் பலமான சமஷ்டி ஆட்சி முறைமையும் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. 1291ம் ஆண்டின் 3 மாநிலங்களை (கன்ரன்கள்) கொண்டு தோன்றிய சுவிஸ் கூட்டாட்சியில் இன்று 26 மாநிலங்கள் (கன்ரன்கள்) காணப்படுகின்றன. சமஷ்டி கூட்டாண்மையால் மத்திய அரசாங்கம் இதில் பிரதானமானதாகும்.

ஏனைய சமஷ்டி நாடுகளின் அரசாங்கங்களைப் போன்று சுவிஸ் கூட்டாட்சியிலும் சமஷ்டி ஒன்றுக்குரிய அடிப்படை பண்புகள் வேறுசில சிறப்புக்களும் சேர்ந்து இணையப் பெற்றுள்ளன.

1. அரசியல் யாப்பில் சமஷ்டி என்பது பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை :

சுவிட்சர்லாந்து அரசு யாப்பில் ஒரு கூட்டாண்மை அரசு என்பதாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இங்கு கூட்டாண்மை என்பது சமஷ்டியை குறித்து நிற்கின்றது. அத்துடன் யாப்பின் பல்வேறு இடங்களில் சமஷ்டி என்பதற்குரிய பதமான “Federal” பயன்படுத்தப்பட்டுள்ளது.

(உ - ம்) சமஷ்டி பேரவை, சமஷ்டி கூட்டு நிர்வாகத்துறை, சமஷ்டி உயர் நீதிமன்றம்

2. அரசியல் யாப்பின் எழுதப்பட்ட நெகிழாத் தன்மை :

அமெரிக்க மற்றும் இந்திய யாப்புக்களைப் போன்று சுவிஸ் யாப்பும் எழுதப்பட்ட நெகிழாத் தன்மையுடையதாகும். யாப்பில் திருத்தங்கள் அனைத்தும் சுவிஸ் மக்களின் தீர்ப்பு மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

3. அதிகாரப் பங்கீடு :

அதிகாரப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் சுவிட்சர்லாந்து அரசியலமைப்பு அமெரிக்க அரசியலமைப்பை பெரிதும் ஒத்திருக்கின்றது. மத்திய அரசு சில அதிகாரங்களை எடுத்துவிட்டு எஞ்சியதை மாநிலங்களுக்கு விடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அதிகாரங்கள்

i. வெளிநாட்டு விவகாரம்.
ii. யுத்தத்தையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தல்.
iii. பாதுகாப்பும் இராணுவ நடவடிக்கையும்.
iv. தொடர்பாடல், தபால், புகையிரதம், தொலைபேசி, தந்திப் போக்குவரத்து
v. நிதி விவகாரம்
vi. அளவை நிறுவை
vii. சுங்க நடவடிக்கைகள்
viii. வியாபாரமும் கடன்களுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகளும்.
ix. வெளியீட்டு உரிமை, உரித்துரிமை
x. வெடிமருந்துகள், மதுபானம் தொடர்பான தனியுரிமை அதிகாரங்கள்
xi. மக்கள் சுகாதாரம்
xii. கடல்மார்க்கப் போக்குவரத்து

மாநில அரசின் அதிகாரங்கள்

i. கல்வி உயர் கல்வி விவகாரம்
ii. பத்திரிகை நிர்வாகம்
iii. பெருந் தெருக்கள்
iv. கைத்தொழில்
v. குடிவரவு
vi. தொற்று நோய்த் தடுப்பு
vii. வங்கி நடவடிக்கைகள்

4. இருமன்ற சட்டத்துறை :

சட்டத்துறையான தேசியப் பேரவை ஏனைய கூட்டாட்சி நாடுகளை போலவே இருமன்றங்களைக் கொண்டதாகும். தேசிய சபை மற்றும் மாநிலங்கள் சபை என்ற சம அதிகாரங்களை இரு மன்றங்கள் சட்டத்துறையில் காணப்படுகின்றன.

5. மாநிலங்களின் அரசியல் யாப்பும், மாநிலங்களின் சுதந்திரமும் :

ஐக்கிய அமெரிக்காவைப்போன்று சுவிஸ் மாநிலங்களுக்கு தனித்தனி அரசியல் யாப்புக்கள் உண்டு அவற்றின் மூலம் மாநிலங்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

6. நீதித்துறையின் சுதந்திரத்தன்மை :

சட்டவாட்சிக்குட்பட்ட சுவிட்சர்லாந்து அரசாங்க முறை சுதந்திரமான நீதித்துறையுடையது. எனினும் உயர் நீதிமன்றத்துக்கு சுவிட்சர்லாந்தில் நீதிப்புனராய்வு அதிகாரமும் முழுமையாக வழங்கப்படவில்லை.

10. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) மாக்சியவாத சமவுடைமை வாதத்தின் பிரதான கருத்துக்கள்

(ஆ) இந்திய மதச் சார்பின்மை வாதம்

(இ) இலங்கையின் இடதுசாரிக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

(ஈ) பிரதிநிதித்துவ ஜனநாயகம்

(உ) ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சமாதானம்

(அ) மாக்சியவாத சமவுடைமை வாதத்தின் பிரதான கருத்துக்கள்

நவீன சோசலிஷம் அல்லது விஞ்ஞான சோசலிஷம் என்ற கருத்தியலின் தந்தை என கருதப்படும் காள் மாக்ஸ் கி.பி. 1818 மே மாதம் ஜேர்மனியில் பிறந்தார். தத்துவத்தையும் சட்ட இயலையும் படித்து பட்டம் பெற்றார். 1941ல் ஜேனா பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றார். ஆசிரியப் பணியில் நுழைய முயன்று தோல்வி கண்டு பத்திரிகையாளரானார்.

1848ம் ஆண்டு ஏங்கல்ஸ் உடன் இணைந்து ''கம்யூனிஸ அறிக்கையை (Communist Manifesto) வடிவமைத்தார். 1849ல் இங்கிலாந்து சென்று தமது வாழ்நாளை கழித்தார். மூலதனம் (Das Capital), அரசியல், பொருளாதாரம் பற்றிய விமர்சனம் (1860), தூய்மையான குடும்பம், மதிப்பு விலை இலாபம், தத்துவத்தின் வறுமை (1847) ஆகியன இவரது படைப்புக்களில் முக்கியமானவையாகும். அரசியலை விட பொருளாதார விடயங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளார். 1883 மரணமடைந்தார்.

1848ம் ஆண்டு கார்ல்மாக்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிச அறிக்கை மூலம் சமவுடைமை வாதம் மற்றிய மாக்ஷிசக் கோட்பாடு முதன்மையாக ஒழுங்கமைக் கப்பட்டது. அதில் காணப்படும் பிரதான கருத்துக்கள் பின்வருமாறு அமையும்.

1. முதலாளித்துவ சமூகம் பொருளாதார முறைமையில் தொழிலாளர் வகுப்பின் உழைப்பை சுரண்டுதல் மூலம் கட்டியெழுப்பட்டுள்ளது. முதலாளிகளின் முன்னேற்றம் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுவதிலேயே தங்கியுள்ளது என்று மாக்ஷிசவாதம் கூறுகின்றது.
2. தனியார் சொத்து முறைமை மற்றும் உற்பத்தி வழி முறைகளில் தனியார் உடமைகளை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ முறைமை காணப்படும் வரை உழைப்புச் சுரண்டல், மற்றும் சமூக அசமத்துவநிலை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் என்று சமவுடைமைவாதம் கூறுகின்றது.
3. தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டல், வறுமை, சமூக, சமத்துவமின்மை என்பவற்றை நீக்க வேண்டுமானால் முதலாளித்துவ சமூகப் பொருளாதார முறைமையை நீக்கி, அதற்குப் பதிலாக சமவுடைமை சமூக பொருளாதார முறை ஒன்றை உருவாக்குதல் வேண்டும் என குறிப்பிடுகின்றது.
4. சொத்து மற்றும் பொருளாதார உற்பத்தி வழிமுறைகளில் தனியார் உடமையை இல்லாமல் செய்து அவற்றை பொது சமூக உடமையாக கட்டியெழுப்பப்பட வேண்டும்

அத்துடன் பொருளாதார வளத்திற்கான சொந்தக்காரர்களாக பொது மக்களே காணப்படுதல் வேண்டும், மாறாக குறிப்பிட்ட செல்வந்தர்கள் அல்ல அதாவது, சமூக வளங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை எல்லோரும் எதுவித பாரபட்சமின்றி அனுபவிக்க வேண்டும் என்பதாகும்.

5. சமவுடமை பொருளாதார பரிமாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் அதனை சமூக புரட்சி ஒன்றின் ஊடாகவே சாத்தியப்படுத்திக்கொள்ள வேண்டும். இதில் தலைமைத்துவம் தாங்குவது தொழிலாளர் வர்க்கமாகும். தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் ஏற்படும் ‘‘சமவுடைமை புரட்சி’’ முதலாளித்துவ சமூகத்தின் தொழிலாளர் வர்க்கத்திற்கும், முதலாளித்துவ வர்க்கத்திற்குமிடையே ஏற்படும் வர்க்க போராட்டம் விரிவடையும் சம்பவமும் இடம்பெறும்.

6. சமவுடைமைப் புரட்சி, தீவிர அரசியல் பரிமாற்றமாகும். இதன்போது முதலாளித்துவ அரசை வீழ்த்தி தொழிலாளர் வர்க்கத்தினால் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வது இடம்பெறும். இதன் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் இல்லாதுபோகும்.

7. சமவுடைமை அரசாங்கத்தின் பிரதான கடமையாவது முதலாளித்துவ பொருளாதார முறைமையை, சொத்து தொடர்பான பொது உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமவுடைமை பொருளாதார மற்றும் சமூக முறைமை ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையான தீவிர பரிமாற்றத்திற்கு தலைமைத்துவம் வழங்குவதாகும்.

8. சமவுடைமை சமூகத்தின் இறுதியில் ‘‘கம்யூனிஷ’’ சமூக முறைமையாக பரிமாற்றம் அடையும். கொமியுனிஸ்ட் சமூக முறைமை முழுமையாக ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக பரிமாற்றமாக உருவெடுப்பதே இதன் இறுதி பெறுபேறாகும்.

இந்த பண்புகளின் படி தெளிவாவது இது தாராண்மைவாதத்தினைப் போன்றே சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்கும் மற்றுமொரு கருத்தியலாகும். எனினும் தாராண்மைவாதம் முதலாளித்துவ கருத்தியலாகும் ஆனால் சமவுடைமைவாதம் முதலாளித்துவத்தை இல்லாதொழிக்கும் கருத்தியலாகும்.

(ஆ) இந்திய மதச் சார்பின்மை வாதம்

தெற்காசிய நாடுகளுள் முதன்முதல் தாராண்மைவாத சிந்தனையின் அடிப்படையில் மதச் சார்பின்மையை அறிமுகம் செய்த நாடு இந்தியா ஆகும். இந்திய அரசியலமைப்பில் 1975ல் இந்தியா ஒரு மதச் சார்பற்ற அரசு என பிரகடனப் படுத்தியுள்ளது. இந்திய சமஷ்டியை மையமாகக் கொண்ட நாடாக காணப்படுவதுடன் பல்வேறு மதக் குழுக்கள், பிரிவினைகள் காணப்படுவதால் மதத்தின் பெயரால் அங்கு மோதல்கள் இடம் பெறக்கூடாது என்ற அடிப்படையில் இந்திய அரசியலமைப்பில் மதச் சார்பின்மைவாதம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்திய மதச் சார்பின்மை பிரதான பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. தாராண்மை மதச்சார்பின்மை வாதத்தின்படி சகல மதங்களையும் சமமாக மதித்தல்.
2. எந்த மத்திற்கும் விசேட முன்னுரிமை வழங்காது இருத்தல்.

3. தனிநபர்களின் சமய அடையாளங்களை கவனத்தில் கொள்ளாது அரசானது சகல பிரஜைகளையும் ஒரே சமமாக மதிப்பளித்தல்.
4. பிரஜைகளின் உரிமைகளை பெற்றுக் கொள்ளும் போது எந்தவொரு பிரசைக்கும் தனது சமய அடையாளங்களை தடையாக இருத்தல் கூடாது.

சமகாலத்தில் மதச் சார்பின்மை வாதம் சர்வதேச அரசியலில் முக்கியத்துவம் பெற இரு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

1. சமய அடிப்படைவாதத்தை துணையாகக் கொண்ட மதம் சார் அரசுகள் தோன்றுவதற்கான வாய்புக்கள் காணப்படல்.
   குறித்த ஒரு நாட்டில் பெரும்பான்மை இனம் இறுக்கமான சமய பின்னணி, கோட்பாட்டைக் கொண்ட மதக் குழுவினார் வாழுகின்ற போது அங்கு மதச் சார்பின்மை அரசு முறை நடைமுறைப்படுத்தப்படுவதனால் தமது மத அடையாளம் புறக்கணிக்கப் படுவதை சுட்டிக்காட்டி மதச்சார்பின்மை வாத அரசிலிருந்து விலகி தமது சமயத்துக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய மதம் சார் அரசைக் கட்டியெழுப்பு வதற்கான முயற்சிகள் இடம் பெறுதலைக் குறிப்பிடலாம்.

2. பன்மைக் கலாசார வாதத்தினை மையப்படுத்தி சமய அடையாளங்களை உடைய சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
   பல்லின கலாசாரத்தை பின்பற்றும் மக்கள் வாழுகின்ற நாட்டில் பன்மை கலாசாரத்தை சிறுபான்மை இனங்களின் சமய அடையாளங்கள் பெரும்பான்மை இனங்களால் பாதிக்கப்படாத வகையில் சகல இனங்களையும் அரவணைத்துச் செல்லவும் மதத்தின் பெயரால் இனவன்முறை தடுப்பதற்காகவும் சமகால அரசுகள் தமது அரசியல மைப்பில் மதச்சார்பின்மையை உறுதிப்படுத்தி வருவதை காணலாம்.
   (உ - ம்) : தென்னாசிய நாடுகளில் இந்தியா, நேபாளம்

மதச் சார்பின்மை வாத அனுகூலங்கள்

1. அரச நிறுவனங்களில் சமய ரீதியான பாகுபாடு காணப்படாமை.
2. மதச் சுதந்திரம் காணப்படுதல்.
3. பொதுச் சேவைகளை நுகர்வதில் பாகுபாடு காணப்படாமை.
4. அரசியல், கல்வி, சட்டம் மற்றும் ஒழுங்கில் பாரபட்சம் காணப்படாமை.
5. சமய வழிபாடுகளில் ஈடுபட பூரண சுதந்திரம் காணப்படல்.
6. மக்கள் மத்தியில் தேசப் பற்று உணர்வை விருத்தி செய்தல்.
7. பல்லின மக்களையும் சமமாக மதித்தல்.
8. இன, மத வன்முறை ஏற்படுவதை தடுத்தல்.

(இ) இலங்கையின் இடதுசாரிக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கையின் இடதுசாரி அரசியல் இயக்கத்தின் உருவாக்கம், காலனித்துவ மற்றும் காலனித்துவத்திற்குப் பின்னரான காலத்தில் அரசியலிலும் அதேவேளை தேசிய இயக்கத்திலும் அது ஏற்படுத்திய தாக்கத்தினை ஒரு சுருக்க அறிமுகமாக வழங்கமுடியும். இடதுசாரிகள்

வகுப்பு, தொழிற்சங்க அரசியல், காலனித்துவ எதிர்ப்பு அரசியல் மற்றும் பாராளுமன்றத்திலும் அதனைக் காணக்கிடைத்தது. இவ்வெல்லா தளங்களிலும் அதன் தாக்கம் பரந்ததாகும். இலங்கையின் இடதுசாரி இயக்கம் எப்போதுமே ஏழை மக்களினதும், சமூகத்தில் பின்னடைந்த மக்களினதும் துயரங்களை வெளிக்கொண்டு வருவதற்கு முன்நின்றதுடன், அரசாங்கம் ஏழை மக்களுக்கு சார்பான கொள்கைகளை உருவாக்க அழுத்தம் கொடுத்தது.

- ✧ இடதுசாரி இயக்கமானது மேற்கேத்தேயப் பல்கலைக்கழகங்களில் கல்விப்பயின்ற தீவிர இளைஞர்களினால் உருவாக்கப்பட்டது. அவர்களில் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க போன்றோரின் பெயர்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம் இவர்கள் காலனித்துவ எதிர்ப்புவாத உணர்வுகளைக் கொண்டிருந்ததோடு இந்திய மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த இயக்கங்களின் ஈர்ப்பினையும் பெற்றிருந்தனர்.
- ✧ இவர்கள் மார்க்சிய சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இந்திய சுதந்திர போராட்டத்தினால் தூண்டப்பட்டவர்களாவர்.
- ✧ 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை இயக்கத்திற்கு இவர்கள் பாரிய ஒத்துழைப்பினை வழிங்கினர்.
- ✧ 1930 களில் மேற்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு திரும்பிய பின்னர் தொழிற்சங்க இயக்கம், காலனித்துவ எதிர்ப்பு தொழிலாளர் இயக்கங்களில் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர்.
- ✧ 1935 ஆம் ஆண்டு டிசம்பர் தாபிக்கப்பட்ட லங்கா சமசமாஜ கட்சியானது இலங்கையின் அரசியலில் ஓர் மைல் கல்லாகும். இது இலங்கையின் முதலாவது நவீன அரசியல் கட்சியாகும். அதன் ஆரம்பகால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் புரட்சியினை விட அதிகளவில் சமூக ஜனநாயகம் சார்ந்ததாகவே காணப்பட்டது.
- ✧ லங்கா சமசமாஜ கட்சியானது 1936ஆம் ஆண்டு அரசாங்க சபைத்தேர்தலில் போட்டியிட்டு இரு ஆசனங்களைப்பெற்று என்.எம். பெரேரா மற்றும் பிலீப் குணவர்த்தன போன்றவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அரசாங்க சபையினை அவர்கள் நாட்டின் சாதாரண மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான களமாக பயன்படுத்தினார்கள். அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை காலனித்துவ அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர்.
- ✧ லங்கா சமசமாஜ கட்சியில் ஏற்பட்ட பிளவினால் 1943ஆம் ஆண்டு கம்யூனிசக் கட்சி தாபிக்கப்பட்டது. இது இலங்கையின் இரண்டாவது இடதுசாரிக் கட்சியாகும்.
- ✧ சுதந்திரத்தின் பின்னர் இந்த இடதுசாரிக் கட்சிகள் பாராளுமன்ற கட்சிகளாக மாற்றம் பெற்றன. இலங்கை பாராளுமன்ற ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு இடசாரிக் கட்சிகள் பாரிய பங்களிப்பினை வழங்கின.
- ✧ 1947ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சிகள் இரண்டும், 18 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டமை முக்கியமானதொன்றாகும்.

- ✧ இத்தேர்தலில் போட்டியிட்ட போதும் இடதுசாரிக் கட்சிகளுக்கு பெரும்பான்மையினைப் பெற முடியவில்லை. எனினும் இடதுசாரி கட்சிகள் பாராளுமன்றத்தில் வலுவான சக்தியாக செயற்பட்டுள்ளன.
- ✧ அதற்கு இடதுசாரி கட்சிகளுக்கிடையிலான கருத்தியல் வேறுபாடுகள் மற்றும் பிளவுகளினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கான மாற்றீடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோற்றம் பெற்றமையை குறிப்பிடமுடியும்.
- ✧ இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்டுத்திக்கொண்ட உடன்பாடு களினால் இடதுசாரிக் கட்சிகள் மேலும் வீழ்ச்சியடைந்தன.
- ✧ இதனால் இளம் பிரிவினர் பாரம்பரிய இடதுசாரி இயக்கத்திலிருந்து வெளியேறி மக்கள் விடுதலை முன்னணியை உருவாக்கக் காரணமாகியது.
- ✧ இது புரட்சி தொடர்பான முயற்சிகள் இரண்டினை மேற்கொண்டபோதும் அது தோல்வியடைய பாராளுமன்ற அரசியலுக்குள் நுழைந்துகொண்டது.

(ஈ) பிரதிநிதித்துவ ஜனநாயகம்

நேரடி ஜனநாயக முறை நடைமுறைப்படுத்தப்படுகையில் எதிர்கொள்ளப்பட்ட நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு பிற்காலத்தில், மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் நாட்டின் ஆட்சிச் செயற்பாடுகள் நடாத்தப்பட்டன. இதுவே மறைமுக சனநாயக ஆட்சி அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்று அழைக்கப்படுகின்றது. கி.பி. 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் இது ஐரோப்பாவில் பிரதான ஆட்சி முறையாகவும் காணப்பட்டது. பிற்காலத்தில் இது மேலும் வளர்ச்சி கண்டதன் விளைவாகப் பாராளுமன்றம் சட்டமன்றம் போன்ற பிரதிநிதித்துவ நிறுவனங்கள் தோற்றம் பெற்றன.

மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் கையில் ஆட்சிப் பொறுப்பைக் கொடுக்கும் முறையே மறைமுக மக்களாட்சியாகும். குடிமக்களின் விருப்பமே அரசாங்கத்தின் அதிகாரமாக அமைதல் வேண்டும். மேலும் அந்த மக்களின் விருப்பத்தை தொடர்ந்து நேர்மையாக நடைபெறும் தேர்தல்களால் மக்கள் ஆளப்படுதல் வேண்டும். அனைவரும் எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் சுதந்திரமாகவும் மறைமுகமா கவும் வாக்களிப்பதன் மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதுவே பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்று அழைக்கப்படுகின்றது.

வாக்களித்தல் என்பது ஜனநாயக ஆட்சி முறைக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது. அது தலைவர்கள் சரியான பாதையில் செல்லவும் அவர்கள் மக்களுக்குப் பணியாற்றவும் எவ்வாறு அவர்கள் பணியாற்றினார்கள் என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றது. தேர்தல் நடக்கும் கால கட்டத்தில் குடிமக்கள் அவர்களுடைய வாக்கை அவர்கள் விரும்பியவர்களுக்கு அளிக்கலாம்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மக்களின் பிரதிநிதிகள் ஆவார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பதவி வகிக்கத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உதாரணமாக இந்தியா, இலங்கை, யப்பான், பிரான்ஸ், பெரிய பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் பிரதிநிதித்துவ ஜனநாயக நாடுகளாக உள்ளன.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் பொறுப்புக்கூறும் முக்கியமான பாத்திரம் தேர்தல் ஆகும். தேர்தல் மூலம் சட்டத்துறை, நிர்வாகத்துறை (ஜனாதிபதி) பிரதிநிதிகளை தெரிவு செய்தல், நீக்குதல், நீதித்துறைக்கான நீதிபதிகளை தெரிவு செய்தல், நீக்குதல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத்தின் மூலம் தேர்தல் உரிமை உறுதிப்படுத் தப்பட வேண்டும்.

தற்போது மறைமுக ஜனநாயகம் நிலவும் நாடுகளில் நேரடி ஜனநாயக நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இலங்கையில் 1978 இல் அறிமுகமாகிய ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பில் மக்கள் தீர்ப்பு எனினும் அம்சம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் சில மானிலங்களில் திருப்பியழைத்தல், குடிமுனைப்பு போன்ற நேரடி ஜனநாயக முறைகள் பின்பற்றப்படுவதோடு சுவிட்சர்லாந்திலும் குடியொப்பம், தொடக்க உரிமை போன்ற நேரடி மக்களாட்சி முறை பயன்படுத்தப்படுகின்றன.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் தோற்றம் பெற்றதற்கான காரணிகள்

1. ஐரோப்பாவில் நிலமானிய முறை 15ம் நூற்றாண்டிற்குப் பின்னர் வீழ்ச்சியடைந்தமை.
2. நேரடி ஜனநாயக ஆட்சி முறையினை நடாத்துவதில் உள்ள சிக்கல்கள்.
3. வர்த்தகப் பொருளாதார முறை எழுச்சியடைந்தமை.
4. முதலாளித்துவ வர்க்கம் ஒன்று தோற்றம் பெற்றமை.
5. கி.பி. 15ஆம் நூற்றாண்டின் பின்பு ஐரோப்பாவில் தேசிய அரச முறைமை தோற்றம் பெற்றமை.
6. தாராண்மை வாதக் கருத்துக்கள் பரவத் தொடங்கியதுடன் தனிமனித சுதந்திரமும் முக்கியத்துவமடைந்தமை.
7. மன்னராட்சி முறைக்குப் பதிலாக ஆட்சிச் செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் மேலோங்கத் தொடங்கியமை.
   (உ - ம்) : 1688 இல் ஏற்பட்ட ஆங்கில அமைதிப் புரட்சி
8. 1789ல் ஏற்பட்ட பிரான்சிய புரட்சி ஜனநாயக ஆட்சி கோட்பாடுகளை வலியுறுத்தியமை.
9. அமெரிக்க சுதந்திரப் போரும் ஜனநாயக கொள்கையை பரப்பியமை.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பண்புகள்

1. அரசியல் யாப்பிற்கு ஏற்ப ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. சுதந்திரம், சமத்துவம், உரிமைகளை அனுபவித்தல்.
3. சர்வஜன வாக்குரிமை செயற்படுத்தப்படுதல்.
4. பெரும்பான்மை விருப்பத்திற்கேற்ப முடிவெடுத்தல்.
5. பெரும்பான்மை பிரதிநிதிகளின் உதவி கிட்டும் அரசியல் கட்சியோ, குழுவோ ஆட்சி செய்தல்.
6. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறுதல்.
7. சட்டத்தை உயர்வாக மதித்தல் (சட்டத்தின் ஆட்சி செயற்பாடுகள்)
8. சுதந்திரமாக கருத்து வெளியிடும் உரிமை.
9. பொதுத் தேர்தலின் மூலம் அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் தெரிவு செய்தல்.
10. ஊடக சுதந்திரம் காணப்படுதல்.

11. நாடு தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல்.
12. சட்டத்தின் முன் சகலரும் சமமாக மதிக்கப்படுதல்.
13. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி காணப்படுதல்.
14. சுதந்திரமான நீதிமன்றத் தொகுதி நாட்டினுள் செயற்படல்.
15. போட்டி முறையிலான அரசியல் கட்சி முறை நிலவுதல்.

(உ) ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக சமாதானம்

✧ ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டில் ''போரின் துன்பத்திலிருந்து அடுத்தடுத்த தலைமுறையினரைக் காப்பாற்றுவதற்காக'' ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதாகும்.

✧ ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை முகாமை செய்வதற்கான பிரதான பொறுப்பை பாதுகாப்பு சபைக்கு வழங்குகிறது.

✧ இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பாதுகாப்பு சபை ஒரு பிராந்தியத்தில் சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் போதெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் நடவடிக்கைகளை ஸ்தாபித்தல் உள்ளடங்கலான பல நடவடிக்கைகளை எடுக்கலாம்.

✧ பாதுகாப்புச்சபை அதன் முடிவுகளை அமுல்படுத்த வர்த்தக தடைகள் போன்ற தடைகளை ஏற்படுத்துவது குறித்தும் முடிவு செய்யலாம். பாதுகாப்புச்சபை தீர்மானங்களின் மூலம் தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.

✧ ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான முயற்சிகளிற்கான வெவ்வேறான கருவிகள் முரண்பாட்டின் வெவ்வேறு கட்டங்களில் செயல்படுகின்றன.
- முரண்பாட்டை தடுத்தல்
- சமாதானத்தை உருவாக்குதல்
- சமாதானத்தை பேணுதல்
- சமாதானத்தை கட்டியெழுப்புதல்
- சமாதான அமுலாக்கம் என அடையாளம் காணலாம்.

பாதுகாப்பு சபை (Security Council)

✧ சமாதானத்திற்கான அச்சுறுத்தல் அல்லது ஆக்கிரமிப்பு செயற்பாடு காணப்படுதலை தீர்மானிப்பதில் பாதுகாப்புச் சபை முன்னிலை வகிக்கிறது. இது ஒரு பிரச்சினைக்கு சமாதானமான வழிமுறைகளால் தீர்வுகாண சம்பந்தப்பட்ட தரப்புகளை அழைக்கிறது. அத்துடன் விட்டுக்கொடுத்தலுக்கான முறைகள் அல்லது தீர்வு விதிமுறைகளையும் பரிந்துரைக்கிறது.

பொதுச்சபை (Genaral Assembly)

✧ பொதுச் சபையானது ஐ.நா.வின் கொள்கை வகுத்தல் மற்றும் பிரதிநிதித்துவ உறுப்பாகும். உலக சமாதானத்தைப் பேணுவதில் பொதுச்சபைக்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ள

கடமைகள் இல்லையென்றாலும் சமாதானத்தை பேணிக்கொள்வதற்கு பாதுகாப்பு சபைக்கு இது உதவுகிறது.

- ஐ.நா. பின்வரும் வழிமுறைகள் மூலம் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பை பராமரிக்கின்றது.

முரண்பாட்டினை தவிர்த்தல் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துதல்

- முரண்பாட்டை தவிர்த்தல் மற்றும் சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கு உதவுவதற்காக ஐ.நா.வின் போர் நிவாரண இராஜதந்திர தொடர்புகளை உருவாக்கி உள்ளதோடு தலையிடுவதற்கான விதிமுறைகளையும் பயன்படுத்துகின்றது.

அமைதி செயற்பாடு

- நாடுகளுக்கிடையிலான போர் நிறுத்தம் அல்லது சமாதான உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஐ.நா.வின் அமைதி செயற்பாடு நடவடிக்கை பயன்படுத்தப்படும்.
- அரசியல் செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குதல், பொது மக்களைப் பாதுகாத்தல், நிராயுதபாணியாக்கல் மற்றும் போராட்டக்காரர்களை மீள சமூகமயப்படுத்தல் போன்ற வற்றுக்கு ஒத்துழைத்தல், தேர்தல் ஏற்பாடுகளுக்கு ஒத்துழைத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டல், சட்டத்தின் ஆட்சியினை சாத்தியமாக்குதல் என்பவற்றுக்கும் இது ஒத்துழைக்கின்றது.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் நிலைத்திருக்கும் சமாதானத்தை ஏற்படுத்தல், உலக சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன சவாலுக்குரியதாக உள்ளது. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் சவாலை மிகவும் வலுவான வகையில் முகங்கொடுத்தல் என்பவற்றுக்காக 2005 ஆம் ஆண்டு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆணைக்குழுவினை (Peace Building Commission) உருவாக்கியுள்ளது.
- நிராயுதபாணியாக்கலும் ஆயுத பரிகரணமும்
- ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு, அணு ஆயுதங்களைக் குறைத்தல் மற்றும் நீக்குதல், இரசாயன ஆயுதங்களை அழித்தல் மற்றும் உயிரியல் ஆயுதங்களுக்கு எதிரான தடையை வலுப்படுத்துதல், கண்ணிவெடிகள், சிறிய ஆயுதங்கள் மற்றும் இலகுரக ஆயுதங்களின் பெருக்கத்தைத் தடுத்தல் போன்றன முக்கியம் பெறுகின்றன.
- ஐ.நாவின் பல்வேறு விதிமுறைகள் இம்முயற்சியில் பங்களிக்கின்றன. பல்தரப்பு நிராயுதபாணியாக்கல் உடன்படிக்கைகளில் மிகவும் பரந்துபட்ட அணுவாயுதங்கள் பரவலாவதைத் தடுப்பதற்கான உடன்படிக்கை (NPT) 1970 களில் நடைமுறைப்படுத்தப் பட்டது. இரசாயன ஆயுத உடன்படிக்கை 1997 இல் மற்றும் உயிரியல் சார் ஆயுத உடன்பாடு 1975 இலும் நடைமுறைக்கு வந்தது.

- ✧ பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு.
- ✧ பயங்கரவாதத்தை இல்லாதொழித்தல்.

உலக சமாதானம் மற்றும் ஒழுங்கை பேணுவதில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்கு முக்கியமானதாகும். இதன் சிறந்த முயற்சிகளுடன் வன்முறையான அரசுகளுக்கிடையிலான போர்களும், உள்நாட்டு முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன என்ற விமர்சனங்கள் உள்ளன. அண்மைய தசாப்தங்களில் ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் நடந்த இனப்படுகொலை மோதல்களைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்பது ஒரு பெரிய விமர்சனமான விடயமாக காணப்படுகின்றது. பின்னடைவுகள் மற்றும் தோல்விகளைக் கொண்டு காணப்படினும் இயன்றளவிலும் உலக சமாதானத்தின் நலன்களை முன்னேற்றும் உலக அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை காணப்படுகின்றது.